புதிய எருசலேம் நகரத்தின் வாழ்க்கை போதம்

இமானுவேல் ஸ்வீடன்பர்க்

லத்தீன் பாஷையில் இயற்றிய இந்நூல்

சென்ற "நியு ரிபார்மர்" பத்திராதிபரும்

காலம் சென்ற

திரு D. கோபால் செட்டியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

லன்டன் ஸ்வீடன்பர்க் சொசையட்டியாருக்காக

திரு G. ராஜமாணிக்கம் செட்டியாரால்

இரண்டாம் பதிப்பு உண்மை கிருஸ்துவ சமயம் முடிவடைந்த 200-வது நூற்றாண்டை முன்னிட்டு பிரசுரிக்கப்பட்டது.

வேலூர் விக்டோரியா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1970

All Rights Reserved.] [Price 0—50

Sw169
T1970

Second Edition

Published by:

G. RAJAMANIKKAM CHETTY,
Swedenborg Book Depot,
Military Park,
Katpadi P. O. N. A. Dt.,
S. India.

முகவுரை

ஸ்வீடன் தேசத்தில் சைவசித்தாந்த கொள்கைகளை ஓத்து போதித்தவரும் திருவருள்பெற்று அரும்பெறல் அனுபூதிமானாகி விளங்கிய வருமாகிய இமானுவேல் ஸ்வீடன்பர்க் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வனியில் அவதரித்திருந்தனர். அப்பெரியோர் பின் காலத்தில் ஈசுவரவிசாரணையில் வைராக்கியமுடையவராய் ஞானக்கண் திறக்கப்பெற்றனர். அவர் தத்துவ சாஸ்திரங்கள் அநேகம் இயற்றியுள்ளார். அவர் இந்நூலைமுதலில் லத்தின் பாஷையில் செய்தனர்.

இந்நூல் சகல சமயத்துவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய பான்மையுடைத்து. இது சமயமாறுதல் விவரணம் ஒன்றையும் பெற்றிலது. இந்நூலின் முதற்பொருள் "சமயம் யாவும் வாழ்விலமையும், சமயத்திற்கு பிரணன் நன்மையியற்றலாகும்" என்பதேயாம். இதுதான் எல்லா சமயங்களின் சாரமுமாகும். மேல் அங்கிகளாகிய சடங்குகள், நியமவிதிகள் பலதரித்து, வேறுபட்ட சமயங்கள் பல தோன்றி, அமைதலிலா போராட்டங்கள் பல உண்டாயின. அவ்வித மாறுபாடுகள் எல்லாம் நீக்கி, இந்நூல் வாழ்க்கையின் உண்மையை வாதாடி, தருமவாழ்வு, தெய்வ ஆராதனை என்கிற கருத்துடன் அமர்ந்திருக்கிறது.

இவ்வுலகில் மானிட பிறப்பு வாய்ந்த ஒவ்வொருவனும் செய்யத்தகாத அப்பியாச சித்தமான காரியங்கள் எவை என்றும், அவ்வித காரியங்கள் அடாது என்பதற்கு காரணங்கள் யாவை என்பதையும் உணர்த்தல் இன்றியமையாதது. உதாரணமாக; உலகத்தார் சாதாரணமாக, "விபசாரம் செய்யக்கூடாது. "பொய் மொழிதல் கூடாது" முதலியவைகளை கூறுவர். அவைகள் ஏன் குற்றமான செய்கைகளென்று காரணம் கூறல், அறிது. காரணமின்றி கட்டளை

114237

பரப்பு நன்மை பயத்தலிலது. அதனால்தான் பாவச்செயல் உலகத்தில் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.

தீயச் செயல்களால் ஆன்மா நிந்தை அடையும் விதத்தையும், அதினால் ஈசுவர அருள் பெறல் சாத்தியமன்று என்கிற பல விசேடங்கள், நம் இந்து சாஸ்திரங்களிலாவது சுபக்ஷ கிருஸ்து சாஸ்திரங்களிலாவது, வேறு எந்நூலிலாவது ஸ்வீடன் பர்க் இந்நூலில் கூறியவிதம் காரணங்கள் எடுத்துக் காண்பிக்கப்படவில்லை. நீதி நெறிகள் நிறைந்த திருக்குறளிலும் கூட கட்டளையன்றி காரணம் அமையவில்லை. பத்து கற்பனைகளை இந்நூல் அற்புதமாக விளக்கி காட்டுகிறது எச்சமயத்தவராயினும் யாவரும் இந்நூலை வாசியாமல் பாராமுகம்செய்து மதிமோசம்போகக்கூடாது.

இந்நூல் பல பெருமைகள் பெற்றிருப்பதால், இதை லண்டன் ஸ்வீடன்பர்க் சொசைடியார் வேண்டுகோளுக்கு இசைந்து தமிழில் மொழி பெயர்த்துள்ளேன். இதையாவரும் வாசித்து தீமைகள், தீமைகளென்று அறிந்து கிரகித்து, பார்த்து அவைகளை நீக்கி நன்மைகளியற்றி, நன் னெறியில் நின்று இறைவன் அருள் பெறுவார்களென்று, எல்லாம்வல்ல பரமனை பிரார்த்திக்கின்றனன்.

இதில் யாதேனும் குற்றம் குறையிருப்பினும் கற்றோர் மன்னித்தருள வேண்டும்

ராயப்பேட்டை,
சென்னப்பட்டனம்,
1927ஆ ஏப்ரல்மீ — D. கோபால் செட்டி.

இரண்டாம் பதிப்பாளரின் முன்னுரை

சுமார் 200 வருடங்களுக்கு முன் ஸ்வீடன் தேசத்தில் திருவருள் பெற்று அரும்பெறல் அனுபூதிமானாகிய ஸ்வீடன்பர்க் எனும் ஞானியார் இருந்தனர். அவர் ஈஸ்வர வைராக்கிய முடையவராய், இறைவன் அருளால் ஞானக்கண் திறக்கப்பட்டு இதுவரையில் வெளிவராத அநேக தெய்வீக ரகசியங்களை வெளிபடுத்தினார். இவை 'சைவ சித்தாந்தத்தை' தழுவியும், பூத சாஸ்திரத்தை ஒத்தும் வெகு சிறப்பாக விளங்குகின்றன.

ஞானியார் ஸ்வீடன்பர்க் இயற்றிய பல நூல்களில் ஒன்றாகிய "புதிய எருசலேம் நகரத்து வாழ்க்கை போதம்" என்பது 1927-ம் வருடத்தில் காலம்சென்ற திரு. D. கோபால் செட்டியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, இரண்டாம் பதிப்பு இப்பொழுது பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் முதற் பொருள் "சமயம் யாவும் வாழ்வில் அமையும், சமயத்திற்கு பிராணன நன்மை யியற்றலாகும்" என்பதேயாம். இந்நூல் வாழ்க்கையின் உண்மைகளை எடுத்துக்காட்டி, தருமவாழ்வு, தெய்வ ஆராதனை முதலிய கருத்துக்கள் அடங்கியுள்ளன.

ஞானியார் ஸ்வீடன்பர்க் இயற்றிய முக்கியமான இதர தத்துவ நூற்கள் :—

(1) பதி பசு பாச விளக்கம், (2) தெய்வ பராமரிப்பு, (3) சுவர்க்கமும் அதன் அதிசயங்களும் நரகமும், (4) காரிய சித்தாந்தம், (5) ஆன்மா உடல் உறவு, (6) வாழ்க்கை போதம், (7) இல்லற அன்பு (8) உண்மை கிருஸ்துவ மதம் (9) தெய்வ

லோக ரகசியங்கள் மற்றும் பல நூற்கள். இதில் முதல் ஆறு நூற்களை என் தகப்பனார் காலம்சென்ற திரு D. கோபால் செட்டியார் தமிழில் மொழி பெயர்ப்பித்தார். இவருடைய தமிழ் மொழி பெயர்ப்புகளை வாசித்து "பாத தர்ம", "இந்து", "இந்து சாதனம்", "சித்தாந்தம்" போன்ற பத்திரிகைகளும், திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, தமிழ்ப் புலவர் ந. மு. வெங்கிடசாமி நாட்டார், திரு. T. ராமலிங்கம் பிள்ளை இன்னும் பலரும், இந்நூற்கள் சைவ சித்தாந்தத்தை தழுவியுள்ளன வென்று கூறியுள்ளார்கள்.

ஞானியார் ஸ்வீடன்பர்க் "பதி பசு பாச விளக்கம்" எனும் நூலில் அன்பைக் குறித்த சித்தாந்தத்தை வெளியிடுகிறார். அன்பு உயிரென்றும், அன்பே கடவுளென்றும் கூறுகிறார். திருமூலர் "திருமந்திரத்தில்" "அன்பே சிவமென்றார்" இதே கருத்தை இந்த ஞானியார் விளக்கியுள்ளார்.

"கடவுள் ஒருவரே" என்கிற கொள்கையுடையவர். இஞ் ஞானியாருக்கு எல்லா சமயங்களும் சம்மதம். கடவுளை ஏற்றுக் கொண்டு, அருள்வழி சென்று தரும வாழ்வை நடத்துபவர்கள் எச்சமயத்தை சார்ந்தவராயினும் முக்தி யடையலாமென்று "Divine Providence" எனும் நூலில் பிரிவுகள் 101, 253, 254, 322, 328, 330-ல் விவரமாய் கூறியுள்ளார். "சுவர்க்க மும் நரகமும்" எனும் நூலில் 319 பிரிவில் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

"சுவர்க்கமும் நரகமும்" எனும் நூலில் இறந்தபின் நடக்கும் விஷயங்கள் தெளிவாய் விவரித்துள்ளார், "உண்மை கிருஸ்த்துவ மதம்", "இல்லா அன்பு" "தெய்வலோக இரக சியங்கள்" இன்னும் மற்ற நூற்களில் ஞானார்த்தங்கள் அடங்கி யுள்ளன.

"வாழ்க்கை போதம்" எனும் இந்நூல் எச்சமயத்தாரையும் தாழ்த்தவும் உயர்த்தவும் நிலை நிறுத்த எழுதபடவில்லை. எச்சமயத்தைச் சார்ந்தவர்களும் இந்நூலை படித்து வாழ்வின் நற்பலனை அடையலாம்.

இந்த ஞானியாரின் நூற்கள் அடங்கிய நூலகம் (Library) நெ. 1, காட்பாடி ரோட்டில் திறக்கப்பட்டிருக்கிறது. இதுவுமன்றி இவருடைய புஸ்தகங்களை பிரசுரம் செய்வதற்கு "Swedenborg Book Depot" Military Park, Katpadi, என்ற விலாசத்தில் திறக்கப்பட்டுள்ளது.

ஆகையால், இந்நூற்களை யாவரும் வாசித்து ஞானத்தில் வளரவேண்டுமென்றும், இறைவன் அருள் பெறவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்.

G. RAJAMANIKKAM CHETTY,

15—3—70. *Military Park, Katpadi.*

விஷய அட்டவணை.

		இலக்கங்கள்.
I.	சமயம் யாவும் வாழ்விலமையும், சமயத்திற்கு பிராணன் நன்மை யியற்றலாகும்	1—8
II.	உத்தமமான நன்மையை எவனும் தானே செய்யமுடியாது.	9—17
III.	ஒரு மனிதனுவன் பொல்லாங்குகளை பாவங்களாக எவ்வளவு தூரம் விலக்கி விடுகிருனே, அவ்வளவு தூரம் தன்னிடமிருந்தல்லாமல், கர்த்தரி மிருந்து, நன்மைகளை செய்கிருன். ...	18—31
1.	ஒரு மனிதன் தீமைகளை பாவங்களாக நீக்குவதற்கு முன், சிந்தித்து நன்மைகளை செய்தால், அவன் சிந்தித்து செய்யும் அந்த நன்மைகள், நன்மையான வைகளல்ல. ...	24
2.	ஒரு மனிதன் தெய்வ பக்தியுள்ள எண்ணங்களை நினைத்து, தெய்வ பக்தியுள்ள வார்த்தைகளை பேசி, தீமைகளை பாவங்களாக விலக்காவிட்டால், அவன் நினைத்து பேசும் தெய்வபக்தியுள்ள வஸ்துக்கள், தெய்வ பக்தியுள்ளவைகளல்ல. ...	25, 26
3.	ஒரு மனிதன் அநேக வஸ்துக்களை தெரிந்துகொண்டு, புத்தியுள்ளவனுயிருந்து, தீமைகளை பாவங்களாக விலக்காவிட்டால், அவன் அப்படியிருந்தும் புத்தியுள்ளவனல்ல.	27
IV.	எவனொருவன் தீமைகளை பாவங்களாக எவ்வளவு நீக்குகிருனே, அவ்வளவு உண்மைகளை நேசிக்கிருன். —	32—41
V.	எவனொருவன் தீமைகளை எவ்வளவு தூரம் நீக்குகிருனே, அவ்வளவு விசுவாசத்தை உடைத்தாயிருந்து, பரமார்த்த ஞானியா யிருக்கிருன். ...	42—52
VI.	தசாக்ஞை எந்த தீமைகள் பாவங்களாகின்றன என்பதை போதிக்கின்றன. ...	53—61

இலக்கங்கள்

VII. கொலைகள், விபசாரங்கள், களவுகள், எல்லாவித பொய் சாட்சியம், அவைகளை சேர்ந்த இச்சைகளும் பாவங்களாக நீக்க வேண்டிய தீமைகளாயிருக்கின்றன. ... 62—66

VIII. எவனொருவன் எல்லாவித கொலைகளையும், பாவங்களாக எவ்வளவு தூரம் நீக்குகிருனே, அவ்வளவு தூரம் அயலானிடத்தில் அவனுக்கு அன்பு இருக்கிறது. ... 67—73

IX. எல்லாவித விபசாரங்களையும், பாவங்களாக எவனொருவன் எவ்வளவு தூரம் நீக்குகிருனே, அவ்வளவு தூரம் அவன் கற்புடைமையை விரும்புகிருன். ... 74—79

X எவனொருவன் எல்லாவித களவுகளையும் பாவங்களாக எவ்வளவு தூரம் நீக்குகிருனே, அவன் அவ்வளவு தூரம் உண்மையை விரும்புகிருன். -- 80—86

XI. எவனொருவன் எல்லாவித பொய் சாட்சியத்தையும் பாவமாக எவ்வளவு தூரம் நீக்குகிருனே, அவ்வளவு தூரம் அவன் உண்மையை நேசிக்கிருன். -- 87—91

XII. தீமைகளை அந்தரங்கத்தில் அருவருப்பில் வைக்கும்படியாக, அவைகளோடு போர் புரிந்து அல்லாமல், எவனும் அவைகளை பாவங்களாக நீக்க முடியாது. -- 92—100

XIII. மனிதனுனவன் தீமைகளை பாவங்களாக நீக்கி, தன்னிடமிருந்துபோல, அவைகளுக்கு விரோதமாய் சண்டை செய்ய வேண்டும். .. -- 101—107

XIV. பாவங்களாக இருப்பது என்பதைத் தவிர, வேறு எந்த காரணத்தினுலாவது எவனுவது, தீமைகளை நீக்கினுல், அவன் அவைகளை நீக்குகிறதில்லை; ஆனுல் உலகத்தின் முன்பாக அவைகள் தோன்றுதபடி மாத்திரம் தடுக்கிருன். .. .. 108—114

புதிய எருசலேம் நகரத்தின்

வாழ்க்கை போதம்.

சமயம் யாவும் வாழ்விலனமாயும், சமயத்திற்கு பிராணன் நன்மையியற்றலாகும்.

1. சுசீலமாய் வாழ்பவன், கடவுளைக்குறித்து மட்டுமல்ல, அயலவனைப் பற்றியுங்கூட சரியாய் நினைக்கினனென்றும், ஆனால் அக்கிரமமாய் வாழ்பவன் அப்படியில்லையென்றும் தெரிந்துகொண்டு ஒத்துக்கொள்ளுகிறபடியினால், சமயப் பற்றுள்ள ஒவ்வொருவனும், கிரமமாய் வாழ்பவன் இரட்சிக்கப்படுகிறானென்றும், அக்கிரமமாய் வாழ்பவன் தண்டிக்கப்படுகிறானென்றும், தெரிந்துகொண்டு, ஒத்துக்கொள்ளுகிறான். ஒரு மனிதனிட பிராணன் அவனிட அன்பு; ஒரு மனிதன் தான் இச்சிப்பதை அவன் மனோரதத்துடன் செய்வதுமட்டுமல்ல, இன்பத்துடனும்கூட அதை நினைக்கிறான். ஆகையினால் (சமயத்தின்) பிராணன் நன்மை செய்தலென்று சொல்லப்படுவதற்கு காரணமானது, நன்மை செய்தல் நன்மை நினைத்தலோடு, ஒன்றாகிறதினால் தான். ஒரு மனிதனிடத்தில் அவைகள் ஒன்றாகாவிட்டால் அவைகள் அவனிடவாழ்விற்கு சேர்ந்தவைகளல்ல. ஆனால் இவ்விஷயங்கள் பின்தொடரும் பக்கங்களில் மெய்ப்பிக்கப்படவேண்டும்.

2. சமயம் வாழ்விலமையு மென்பதையும், (சமயத்தின்) பிராணன் நன்மையியற்றலென்பதையும், திருவசனத்தை வாசிக்கும் ஒவ்வொருவனும் அறிந்து கொள்ளுகிறான். அவன் வாசிக்கும்போது அதை ஒத்துக்கொள்ளுகிறான். தெய்வ வாக்கில் பின்தொடரும் வாக்கியங்களிருக்கின்றன:—

"இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனிதர்களுக்கு போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேத பாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்" (மத்தே V. 19,20). "நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத்தே. VII. 19,20). "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தே. VII. 21). "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? .....உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களை செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்

பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச்செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" (மத்தே. VII. 22, 23). "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்கிறவன் எவனோ அவனைக் கன் மலையின்மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்..... நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு இவைகளின் படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவேன்" (மத்தே. VII. 24,26). "விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்தது.....சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; .....சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; ..... சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்தது; ....நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்" என்று சொன்னார். இவ்வாக்கியங்களை இயேசு சொன்ன பிறகு; "கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்றார் "(மத்தே. XIII. 3—9, 23). மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்..... வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்கு பலனளிப்பார்" (மத்தே XVI. 27). "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும் (மத்தே. XXI 43). மனுஷகுமாரன்

தமது மகிமை பொருந்தினவராய் வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்.... ....அப்பொழுது அவர் தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயுத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். நான் பசியாயிருந்தேன், எனக்கு போசனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தை தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திர மில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்கு பிரதியுத்திரமாக .....எப்பொழுது உம்மை அப்படிப் பார்த்தோம்? என்பார்கள். அதற்கு இராஜா பிரதியுத்தரமாக: .....மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். இராஜா இடது பக்கத்தில் நிற்பவர்களைப்பார்த்து அவ்விதமாக சொல்லுவார்; அவர்கள் அம்மாதிரி காரியங்களை செய்யாதபடியினால் அவர், சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்னியிலே போங்கள்" (மத்தே. XXV. 31–46). "மனம் திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.....இப்பொழுதே கோடாரியானது

மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (லூக். III. 8, 9). இயேசு சொன்னதாவது: "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமல் போகிறதென்ன? என்னிடத்தில் வந்து என்வார்த்தைகளைக்கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் கற்பாறையின் பேரில் அஸ்திவாரம் போட்டு வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்.....
.....என் வார்த்தைகளைக்கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திவாரமில்லாமல் மண்ணின் மேல் வீடு கட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்" (லூக். VI 46—49). இயேசு சொன்னதாவது "தேவனுடைய வசனத்தைக்கேட்டு, அதின்படி செய்கிறவர்களே எனக்கு தாயும், எனக்கு சகோதரருமாயிருக்கிறார்கள்" (லூக். VIII 21). "நீங்கள் வெளியே நின்று ஆண்டவரே, எங்களுக்கு திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத்தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ உங்களை அறியேன்: அகிரமக்காரராகிய நீங்கள் எல்லோரும் என்னை விட்டு அகன்று போங்கள்" என்று சொல்லுவார் (லூக். XIII. 25, 27). "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும், மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப்பகைக்கிறான், தன்கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வாராதிருக்கிறான்.

சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான் என்றார் (யோவா. III. 19–21). "நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா. V. 29). "பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து, அவருக்கு சித்தமானதைச் செய்தால் அவனுக்கு செவிகொடுப்பார்" (யோவா. IX. 31). நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச்செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (யோவா. XIII. 17). "என்னிட கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்;.....நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்..... .....நான் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம் பண்ணுவேன். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்" (யோவா. XIV 21, 23 24). "நான் (மெய்யான) திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரன்—என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்" (யோவா—XV. 1, 2,). "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவா —

XV. 8). "நான் உங்களுக்கு கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சினேகிதரா யிருப்பீர்கள் ..... நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத் திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவா. XV. 14, 16). "எயேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்ன வெனில்.....உன் கிரியைகளையும் நான் அறிந்திருக்கிறேன்..... நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு.....ஆகையால் நீ .....மனம் திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளை செய்வாயாக; இல்லாவிட்டால்..... .....உன் விளக்கு கண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் (வெளி 1, 2, 4, 5). "சிமிர்ணுசபையின் தூதனுக்கு எழுதவேண்டியது :..... .....உன் கிரியைகளையும நான் அரிந்திருக்கிறேன்" (வெளி. II. 8, 9)–பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது: உன் கிரியைகளையும் நான் அறிந்திருக்கிறேன்.....மனம் திரும்பு. (வெளி. II 12, 13, 16) தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது : .....உன் கிரியைகளையும் உன் அன்பையும்— .....நீ முன்பு செய்த கிரியையிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும், அறிந்திருக்கிறேன்" (வெளி. II. 18, 19) "சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்..... உன் கிரியைகளை அறிந்திருகிக்றேன். நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்; .....உன் கிரியைகள் தேவனுக்கு முன்

நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை ..... மனம் திரும்பு" (வெளி. III. 1, 3). "பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் .... உன் கிரியைகளை நான் அறிந்திருக்கிறேன்" (வெளி. III. 7, 8). "லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: .... உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். .... மனம் திரும்பு" (வெளி. III. 14, 15, 19). "பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது, கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்... .....அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம். (வெளி. XIV. 13). "ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் (வெளி XX 12). "இதோ, சீக்கிரம் வருகிறேன்; அவனவன் கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடுகூடவருகிறது (வெளி. XXII. 12). அம்மாதிரியே பழைய ஏற்பாட்டிலும்; "நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாகவும்; அவர்கள் கைகளின் செய்கைகளுக்குத் தக்கதாகவும் பதில் அளிப்பேன்" (எரேமி. XXV. 14). "அவனவனுக்கு அவனவனுடைய வழிகளுக்குத் தக்கதாகவும் அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத் தக்கதாகவும் அளிக்கும்படி கர்த்தரிட கண்கள

மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் பேரிலும் நோக்கமா யிருக்கின்றன'' (எரேமி, XXXII. 19). "அவர்கள் வழிகளின்படி அவர்களை விசாரித்து, அவர்கள் கிரியை களின்படி அவர்களுக்கு பலன் அளிப்பேன்" (ஓசி. IV. 9). 'கர்த்தர் எங்கள் வழிகளின்படியேயும், எங்கள் கிரியை களின்படியேயும் எங்களுக்கு செய்கிறார்." (சகரி. I. 6) அநேக விடங்களில் மனிதர்கள் கட்டளைகள், கற்பனைகள் படி, நடக்கவேண்டுமென்றும்; உதாரணமாக; "என் கட் டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான். (லேவி. XVIII. 5). ஆகையால் என்னிட கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவை யும் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்" (லேவி. XIX. 37; XX. 8; XXII. 31). கற்பனைகள்படி நடந்தால் ஆசீர்வாதம் கூறப்பட்டிருக்கிறது அப்படி செய்யாவிட்டால் சாபமிடப்பட்டிருக்கிறது (லேவி. XXVI 4-46). கர்த்தரின் கற்பனைகள் எல்லாம் ஞாபகப்பட்டு அவைகளின்படி செய்ய அவர்களிட ஆடைகளின் கரை களில் ஒரு அருகு தொங்கல் தாங்கள் செய்துகொள்ள இஸ்ரவேல் குமாரர்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். (உபாக. XXVII, 26). இன்னும் ஆயிரம் இதர இடங் களிலும் கூறப்பட்டிருக்கின்றன.

சபையின் மனிதனுக்குகிறது கிரியைகள் என்றும் அவைகளை அனுசரித்து அவன் இரட்சிக்கப்படுகிறானென் றும் கர்த்தர் ஒப்பனைகளில்கூட போதிக்கிறார்; அவைகளில் அநேகம் நன்மை செய்கிறவர்கள், அங்கீகரிக்கப்படுகிறார்க

ளென்றும், பொல்லாங்கு செய்கிறவர்கள் நீக்கப்படுகிறார்களென்றும், காட்டுகின்றன; திராட்சத் தோட்டத்தில் பண்ணையகாரன் (மத்தே. XXI. 33—44; கனிதராத அத்தி மரம் (லூக். XIII. 6, 9); அவர்கள் வியாபாரம் செய்யவேண்டிய தாலந்து (மத்தே. XXV. 14—31); (லூக். XIX. 13—25; கள்ளர்களால் காயப்படுத்தப்பட்டவனிட காயங்களை கட்டிய சமாரியன் (லூக் X. 30, 37); ஐசுவரியமுள்ள மனிதனும் லாசரும் (லூக். XVI. 19—31); பத்து கன்னிகைகள் (மத்தே. XXV. 1—12) இந்த உவமைகளில்போலும்.

3. சமய பற்றுள்ள ஒவ்வொருவனும், கிரமமாய் வாழ்பவன் இரக்ஷிக்கப்படுகிறானென்றும், அக்கிரமமாய் வாழ்பவன் தண்டனையிடப்படுகிறானென்றும், தெரிந்துகொண்டு ஒத்துக்கொள்ளுகிறானென்பது, கடவுள் ஒருவர் இருக்கிறாரென்றும் நரகம் ஒன்றும் சுவர்க்கம் ஒன்றும் இருப்பதாகவும், இறந்த பிறகு பிராணன் ஒன்று மீதி நிற்பதாகவும் தெய்வீக வாக்கிலிருந்து அறிந்துகொண்ட மனிதனுடன் முத்தி கூடுவதினால் உண்டாகிறது; அதினின்று இந்த சாமானிய அறிவு உண்டாகிறது. கிரிஸ்து சமயாசார தேசங்களில் ஸமஸ்தமாய் அங்கீகாரம் செய்யப்பட்ட திரியேகத்துவத்தை குறித்த அதநேசியன் சமயகோட் பாட்டில் அதின் முடிவில் கூறப்படும் அடியில் குறித்ததும்கூட எங்கும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது:—அதாவது, "தம்மிட மோட்சத்திற்காக தன்பப்பட்ட இயேசு கிறிஸ்து, பரமண்டலம் சென்று, சருவவல்லமையுள்ள பிதாவின் வலது கரத்தின் பக்கம் உட்கார்ந்திருக்கிறார்; அங்கிருந்து உயி

ரோடிருப்பவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நீதி தீர்ப்புச் சொல்ல அவர் வருவார்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள், பொல்லாங்கு செய்தவர்கள் நித்திய அக்கினியில் பிரவேசிப்பார்கள்" என்பது.

4. என்றாலும், வாழ்வின் எவ்வித நன்மை அல்லது நற்கிரியையுமல்லாமல், விசுவாசம் ஒன்றே கடைதேற்றம் என்று போதிக்கிறவர்கள் அநேகர் கிருஸ்துவ சபைகளிலிருக்கிறார்கள்; வாழ்வின் தீமை அல்லது தீமையான கிரியை, கடவுளிலும் அருளிலுமிருப்பதால் விசுவாசத்தினால் மட்டும் நீதிமான்களாகப் பட்டவர்களை தண்டனையிடாதென்று கூட சேர்த்து அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் இவ்வித சித்தாந்தங்களை போதித்தாலும் பரமண்டலத்திலிருந்துவரும ஒரு சாமானிய அறிவினால் கிரமமாய் வாழப்பட்டவர்கள், இரட்சிக்கப்படுகிறார்களென்றும் அக்கிரமமாய் வாழ்பவர்கள் தண்டிக்கப்படுகிறார்களென்றும், அவர்கள் அப்படியிருந்தும் ஒத்துக்கொள்ளுகிறது கவனிக்கத்தக்கது. இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும, ஸ்வீடனிலும் டென்மார்க்கிலும திருவிருந்துக்கு வரப்பட்ட ஜனங்கள் முன்பாக திருசபைகளில் வாசிக்கப்பட்ட எச்சரிப்பிலிருந்து இதை அவர்கள் அப்படியிருந்தும் ஒத்துக்கொள்ளுகிறார்களென்று வெளியாகிறது. இந்த இராச்சியங்களில் விசுவாசத்தை மட்டும் போதிப்பவர்கள் இருக்கிறார்களென்று தெரிந்திருக்கிறது. இங்கிலாந்திலே நற்கருணைக்கு வரப்பட்டவர்கள் முன் வாசிக்கப்படும் எச்சரிப்பு இது:—

5. "அந் நிர்மல மேசையை பாத்திரமான பங்காளிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டிய வழியும் சாதனமும், முதலில், கடவுள் கற்பனைகளையும் பிரமாணங்களால் உங்களிட வாழ்வுகளையும் சம்பாஷனைகளையும் பரிசோதிப்பதும், உங்களுக்கு எவ்விடத்தில் மனம் வாக்கு, காயம் இவைகளினால் குற்றம் செய்ததாக தோன்றுகிறதோ, அங்கே உங்களிட பாவமுள்ள தன்மையைப்பற்றி புலம்புவதும், வாழ்வை சீர்திருத்த முழு அபிப்பிராயத்தோடு சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்பாக பாவ அறிக்கையிடுவதும் தான்; உங்களிட குற்றங்கள் கடவுளுக்கு விரோதமாக மாத்திரமல்லாமல் உங்களிட அயலார்களுக்கும் விரோதமாக இருந்தால், உங்களால் மற்றொருவனுக்கு செய்யப்பட்ட எல்லா கெடுதிகளுக்காகவும் அக்கிரமங்களுக்காகவும் உங்களிட முழு சக்தியை யனுசரித்து, நஷ்டம் கட்டிக்கொடுத்து, மனோரம்மியம் செய்ய ஆயுத்தமாகவும், அம்மாதிரியே நீங்கள் கடவுளிடமிருந்து உங்களிட குற்றங்களுக்கு மன்னிப்பு அடைய விரும்புவது போல, உங்களுக்கு குற்றம் செய்தவர்களை மன்னிக்க தயாராகவுமிருந்து, அவர்களோடு நீங்கள் ஒப்புறவாகவேண்டும்; அப்படியில்லாவிட்டால் பரிசுத்த நற்கருணை பெற்றுக்கொள்ளுதல், நரகாக்கினை தீர்ப்பை அதிகபடுத்துவதை தவிர வேறு ஒன்றும் செய்கிறதில்லை. ஆகையால் உங்களில் யாராவது தேவ தூஷணக்காரனாகவாவது, அவரிடவாக்கை இடர் செய்கிறவனாக அல்லது தூஷிக்கிறவனாகவாவது, விபசாரியாகவாவது, பகை அல்லது பொறுமையிலாவது அல்லது வேறு எவ்வித சஞ்சலமுள்ள குற்றத்திலாவது இருந்தால், அந்த பரிசுத்த சமஸ்காரத்தை எடுத்துக்கொண்ட பிறகு பூதாசினுள் பிசாசு பிரவே

சித்தபடி உங்களுள்ளும் பிரவேசித்து, எல்லா அநீதிகளாலும் உங்களை நிரைவித்து, உங்கள் உடலையும் ஆன்மாவையும் நிர்மூலத்துக்கு கொண்டுவராதபடி, உங்களிட பாவங்களைக் குறித்து மனம் திரும்புங்கள், இல்லாவிட்டால் அந்த பரிசுத்தமேசைக்கு வரவேண்டாம்".

7. * (ஆத்மார்த்த உலகத்தில் செய்யப்படுகிறபடி) விசுவாசத்தை மாத்திரம் வெளிப்படையாய் சொல்லி அதை பிரசங்கித்த ஆங்கிலேய குருக்கள் மார்களை தங்கள் சபைகளில், விசுவாசம் என்பது கூறியிராத இந்த எச்சரிப்பை வாசித்தபோது, அது இப்படி நிஜமென்று நம்பினார்களாவென்று நான் கேட்கநேரிட்டது. அது இதை போன்ற கேழ்வி; ஒருவன் தீமை செய்து, அதற்காக மனம் திரும்பாவிட்டால் பிசாசு யூதாசினுள் பிரவேசித்தபடி அவர்களுள் பிரவேசித்து, அவர்கள் உடல் ஆன்மாவை நிர்மூலத்துக்கு கொண்டு வருமா? எச்சரிப்பை படிக்கும் போது அவர்களிருந்த நிலையில், இவைகளெல்லாம் சமயம் என்பதே தவிர, வேறுவிதமாய் அறிந்துக்கொள்ளவுமில்லை நினைக்கவுமில்லை என்றும், ஆனால், விசுவாசம் ஈடேற்றத்துக்கு ஒரே ஒரு சாதனமாகவும், பொது நன்மைக்காக, வாழ்வின் நன்மை, அதற்கு சன்மார்கத் துனைக் கருவியென்றும், நினைத்தபடியினால், அவர்கள் தங்கள் பிரசங்கங்களை அல்லது சம்பாஷனைகளை எழுதும் போதும் பூரணப்படுத்தும் போதும், அம்மாதிரி நினைக்க வில்லை யென்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனாலும், கிரமமாய் வாழ்பவன் இரட்

* மூல நூலில் 6-வது பிரகாணம் மேல் குறித்த எச்சரிப்பின் லத்தின் பாஷையில் மொழி பெயர்ப்பாக மட்டுமிருப்பதால் விட்டுவிடப்பட்டது.

சிக்கப் படுகிறானென்றும், அக்கிரமமாய் வாழ்பவன் தண்டிக்கப் படிகிறானென்றும், அவர்களுக்குக்கூட ஒரு பொதுவான அறிவு உண்டென்றும், தங்களிட சுய தன்மையில் அவர்களில்லாத போது இந்த அறிவு அவர்களுக்கு உண்டென்றும், அவர்கள் தெரிந்துக்கொள்ளும்படி செய்யப் படுகிறார்கள்.

8. சமயமெல்லாம் வாழ்வை அனுசரித்து இருப்பதற்கு காரணம், இறந்தபிறகு ஒவ்வொருவனும் தன்னிட சொந்த வாழ்வாகயிருப்பதாலும், உலகத்திலிருந்த மாதிரியே ஒவ்வொருவனிட ஜீவனும் இருப்பதாலும், அது மாறுதபடியினாலும் எதிரிடையானவைகளான படியினால் எதிரிடையான ஒன்றாக மாறுதல் நிர்மூலமாகிறபடியினாலும், எதிரிடையான வைகளானபடியினால், நல்ல வாழ்வு உயிர் என்றும், கெட்ட வாழ்வு மரணமென்றும் சொல்லப்படுகிறபடியினால், கெட்ட உயிரை நல்ல உயிராகவும், நல்ல உயிரை கெட்ட உயிராகவும் மாற்ற முடியாதபடியினாலும், தான். அதனால் தான் சமயமானது வாழ்வை சேர்ந்ததாயிருக்கிறது. (சமயத்துக்கு) உயிர் நன்மை செய்தலாயிருக்கிறது. உலகத்தில் ஒருவன் வாழ்விருந்தமாதிரியே, இறந்த பிறகும் இருக்கிறானென்பதை நரகம், சுவர்க்கம் (எண். 470–484) என்பதை குறித்த நூலில் பார்க்கலாம்.

உத்தமமான நன்மையை எவனும் தானே செய்யமுடியாது.

9. தான் செய்யும் நன்மை தன்னிடத்தேயிருந்து தானா, கடவுளிடமிருந்தா என்பதை அறிதாய் ஒருவன்கூட

நாளது வரையில் தெரிந்துக்கொள்ளாதிருப்பதின் காரணம் திருச்சபையானது, விசுவாசத்தை தரும் குணத்திலிருந்து பிரித்து விட்டபடியினாலும், நன்மை என்பது தருமத்தை சேர்ந்தபடியினாலும் தான். ஒரு மனிதன் ஏழைகளுக்கு கொடுக்கிறான். தேவையானவர்களுக்கு உதவி செய்கிறான். கோவில்களுக்கும் தர்ம வைத்திய சாலைகளுக்கும் தானம் கொடுக்கிறான். கோவில், தன் தேசம், தன்னகரத்தார் க்ஷேமத்தை விருத்தி செய்கிறான். பகிரங்க ஆராதனைக்கு ஜாக்கிரதையாய் போகிறான். அப்பொழுது பக்தியாய் செவிசாய்த்து பிரார்த்திக்கிறான். வேதவாக்கையும் தேவ பக்தியுள்ள நூல்களையும வாசிக்கிறான். ஈடேற்றத்தைக் குறித்து நினைக்கிறான். அவனுக்கு இவைகள் எல்லாம தானே செய்வதும், கடவுளிடமிருந்து செய்வதும் தெரியாது. அந்த காரியங்களையே கடவுளிடமிருந்தும செய்யலாம். அவைகளை கடவுளிடமிருந்து செய்தால், அவைகள நன்மைகளாகின்றன. தன்னிடமிருந்து செய்தால, அவைகள் நல்லவைகளல்ல. இது மட்டுமல்லாமல் மோசமானதும் வஞ்சனையுள்ளதுமான வெளி வேஷமான நற் செயல்களிருப்பதுபோல, வெளிப்படையாய் பொல்லாததாயிருக்கிற, ஒருவன் தன்னிடமிருந்தே செய்யும் அவ்வித நற் செயல்களுமிருக்கின்றன.

10. கடவுளிடமிருந்தும், ஒருவன் தானேயாகவும் இயற்றும் நற்கிரிகைகள் பொன்னோடு ஒப்பிடலாம். அந்த ரங்கத்திலிருந்து பொன்னாயிருப்பதும், வடி தங்கமென்று சொல்லப்படுவதுமான பொன்னானது நல்லப்பொன். வெள்ளி கலப்பால் கெடுக்கப்பட்ட பொன்கூட பொன்

தான், ஆனால் அது கலப்புக்கு தக்கபடி நல்லதாயிருக்கிறது; செம்பு கலப்புள்ள பொன் அவ்வளவு நல்லதல்ல, ஆனால் செயற்கையாலுண்டானதும், நிறத்தில் மட்டும் பொன்னைப் போன்றிருப்பதுமான பொன், தன்னிட மூலபதம் அதிலில்லாதபடியினால், நல்லதல்ல. அம்மாதிரி புறக்கோலமாய் பொன்போன்று தோன்றக்கூடிய, தங்கம் பூசிய வெள்ளி, செம்பு, இரும்பு, தகரம், ஈயம், அத்துடன் தங்கம் பூசிய மரம், தங்கம் பூசிய கல் முதலியதைப் போல தங்கம் பூசுதலும் உண்டு; ஆனால் அவைகள் பொன்னல்லாதபடியினால், வேலை திறத்தை அனுசரித்தாவது, தங்கம் பூசிய பொருளின் கிரயத்தை அனுசரித்தாவது, அதிலிருந்து சுரண்டக்கூடிய பொன்னின் மதிப்பை அனுசரித்தாவது, அவைகள் விலையிடப்படுகின்றன. ஆடையானது மனிதனிலிருந்து வித்தியாசப் படுவதுபோல் பொன்னிலிருந்தே இவைகள் மேன்மையில் வித்தியாசப்படுகின்றன. சொத்தை மரமும், கிட்டமும், சானியாகிலும் சரி இவைகளை எல்லாம்கூட தங்கத்தினால் மூடிப்போடக்கூடும் இந்த தங்கமானது வெளி வேஷமான நன்மையோடு ஒப்பிடக்கூடியதாயிருக்கிறது

11. பூத சாஸ்திரத்தின் உதவியால், பொன்னானது மூல பதத்தில் நல்லதா, அது கலப்புள்ளதா அல்லது கல்பனையானது அல்லது மேல் பூசப்பட்டதா என்பதை மனிதன் தெரிந்து கொள்ளுகிறான்; ஆனால் பூத சாஸ்திரத்தின் உதவியால் தான் செய்யும் நன்மை தானேயாக நல்லதா என்பது அவனுக்கு தெரியாது. கடவுளிடமிருந்து வரும் நன்மை நல்லதென்றும், மனிதனிடமிருந்துவரும் நன்மை

நல்லதல்ல வென்று மாத்திரம் அவனுக்கு தெரியும். தான் செய்யும் நன்மை கடவுளிடமிருந்தா, அது கடவுளிடமிருந்தல்லாமலா என்பதை தெரிந்து கொள்ளுவது அவனிட ஈடேற்றத்துக்கு சம்மந்தம் அடைந்திருக்கிறபடியினால், அது வெளிபடுத்தப்படவேண்டும். அது வெளிபடுவதற்கு முன், நன்மையின் வர்க்கங்களை குறித்து சிலது சொல்லப் படவேண்டும்.

12. தேச நன்மை என்றும், சன்மார்க்க நன்மை என்றும், பரமார்த்த நன்மை என்றும், இருக்கின்றன. தேச சட்டத்தோடு ஒற்றுமை பட்டு ஒரு மனிதன் செய்வது தேச நன்மையாகும்; இந்த நன்மையினாலும், அதற்குத் தக்கபடியும், பிரகிருதி சம்மந்தமான உலகத்தில் ஒரு மனிதன் நகரவாசியாயிருக்கிறான். விவேக சட்டத்தை அனுசரித்து ஒரு மனிதன் செய்வது சன்மார்க்க நன்மை; இந்த நன்மையினாலும் அதற்கு தக்கபடியும், அவன் மனிதனாகிறான். பரமார்த்த சட்டத்தை அனுசரித்து ஒரு மனிதன் செய்வது பரமார்த்த நன்மை; இந்த நன்மையாலும் அதற்கு தக்கபடியும் ஆன்மார்த்த உலகத்தில் ஒரு மனிதன் நகரவாசியாகிறான். இந்த நன்மைகள் இந்த ஒழுங்கில் தொடர்கின்றன; பரமார்த்த நன்மை அதிக மேனமையானது, சன்மார்க்க நன்மை நடுத்தரமானது, தேச நன்மை கடைசியானது.

13. பரமார்த்த நன்மையுள்ளவன் குண சம்மந்தமுள்ளவன், அவன் தேசத்துக்கு திருத்தமானவனாகவுமிருக்கிறான்; பரமார்த்த நன்மையில்லாதவன், குண சம்பத்துள்ளவனாகவும் திருத்தமானவனாகவுமிருப்பதாக தோன்று

கிறான். ஆயினும் அவன் அப்படி இல்லை. பரமார்த்த நன்மையுள்ளவன் குண சம்பத்துள்ளவனாகவும், தேசாசார மானவனாகவும். இருக்கிறான் என்பதற்கு காரணம், பரமார்த்த நன்மையானது தன்னிலேயே நன்மையின் சாரத்தை உடைத்தாயிருப்பதாலும். இதிலிருந்து சன்மார்க்க நன்மையும் தேச நன்மையும் உண்டாகிறபடியினாலும் தான். நன்மையின் சாரம் நன்மையாயிருக்கிற அவரிடமிருந்து தவிர வேறு உற்பத்தி ஸ்தானத்திலிருந்து வரமாட்டாது. நினைப்புக்கு அலைந்து திரிய நடையிலாத இடம் கொடு, அதை முழுமையும் தொழில் படுத்து, நன்மை எதிலிருந்து நன்மையாகிறது என்று விசாரி. அப்படிசெய்தால் நன்மையானது அதன் சொரூபநிலை வஸ்துவிலிருந்து வருகிறதாகவும் நன்மையின் சாரம் தன்னில் உடைத்தாயிருக்கிறது நன்மை என்றும், அப்படியிருப்பதால் நன்மையிடமேயிருந்து, அதனால் கடவுளிடமிருந்து வருவது நல்லதென்றும், ஆதலால் கடவுளிடமிருந்து அல்லாமல் மனிதனிடமிருந்து வரும் நன்மை, நன்மையல்லவென்றும் தெரியவரும்.

14. பரிசுத்த வேதத்தை குறித்த சித்தாந்தத்தில் (இல. 27, 28, 38). கூறியதிலிருந்து, அதிக மேன்மையானதும், நடுத்தரமானதும், கடைசியானதும், முடிவு, காரணம், காரியம் போல் ஒன்றாகிறது என்றும், அப்படி ஒன்றாகிறபடியினால், முடிவைத்தானே, முதல் முடிவு என்றும், காரணத்தை மத்திய முடிவு என்றும், காரியத்தை கடைசியான முடிவென்றும் சொல்லப்படுகிறதென்றும், அறிந்து கொள்ளலாம். ஆகவே, பரமார்த்த நன்மையுடைவனுக்கு, அவனிட குணசம்பத்துள்ள நன்மையானது நடுத்தரமான பரமார்த்த நன்மை என்றும், தேச நன்மை

அதிக தாழ்ந்த (அல்லது இறுதியான) பரமார்த்த நன்மை என்றும் வெளிப்படையாகும். ஆகையினால்தான் பின்னிட்டும் பரமார்த்த நன்மையுள்ளவன், குண சம்பத்துள்ளவனென்றும், திருத்தமானவனென்றும், பரமார்த்த நன்மை இல்லாதவன் குண சம்பத்துள்ளவனுமில்லை, திருத்தமானவனுமில்லை என்றும், ஆனால் அப்படியிருப்பதாக மட்டும் தோன்றுகிறான் என்றும் சொல்லப்பட்டதாயிருக்கிறது. அவன் அம்மாதிரி தனக்கேயும் மற்றவர்களுக்கும் கூட அப்படியே தோன்றுகிறான்.

15. பரமார்த்த ஞானமில்லாதவன் தத்துவஞானியைப்போல, மேலும் நினைக்கவும் அதனால் யுக்தா யுக்தமாய் பேசவும் கூடுமென்பதற்கு காரணமானது, உண்மையாயிருக்கிற பரலோக ஒளிவரையில் மனிதனிட புத்தியானது உயர்த்த தகுந்ததாயிருந்து, அந்த ஜோதியினால் பார்க்கத் தகுந்தவனாயிருக்கிறபடியினால்தான் ஏற்படுகிறது; ஆனால் மனிதனிட சித்தம், அன்பாயிருக்கிற பரலோக சூட்டின் வரையில் அம்மாதிரி உயர்த்தப்பட்டு அந்த சூட்டினால் தொழில்பட முடியாது. ஆகையினால்தான் உண்மையும் அன்பும், தத்துவ ஞானியாயிருந்தாலொழிய, ஒரு மனிதனுடன் ஒன்றுபடுகிறதில்லை. அதனால்தான் மனிதன் பேசக் கூடியதாயிருக்கிறது; இதுகூட மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள ஒரு வித்தியாசமாயிருக்கிறது. சித்தமானது இன்னும் உயர்த்தப்படாதபோது, பரலோகத்துக்கு உயர்த்தக்கூடிய அறிவின் இந்த சக்தியின் மூலமாக மனிதனானவன் சீர்திருத்தப்பட்டு, தத்துவ ஞானமுள்ளவனாக தகுந்தவனாயிருக்கிறான். ஆனால் சித்தமானது கூட உயர்த்தப்பட்டபோது, அவன் முதலில் சீர்திருத்தப்பட்டு தத்துவஞான

முள்ளவனுகிறான். சித்தத்தின் சக்திக்கு மேல்பட்ட புத்தியின் இந்த சக்தியிலிருந்து, பொல்லாதவனுயிருந்தாலும்சரி, எவ்வித குணமுள்ளவனு யிருந்தாலும், மனிதனுனவன் நினைக்கவும், அதிலிருந்து தத்துவ ஞானியைப்போல யுக்தாயுக்தமாய் பேசவும், சக்தியுள்ளவனு யிருக்கிறான். ஆனுல் அவன் அப்படியிருந்தும், அவனுக்கு விவேகமில்லையென்பது புத்தியானது சித்தத்தை நடத்தாமல், சித்தமானது புத்தியை நடத்துவதால் ஏற்படுகிறது. பரிசுத்த வேதத்தை குறித்த போதத்தில் (இல. 115). கூறப்பட்டபடி, புத்தியானது போதித்து வழியை மட்டும் காட்டும். சித்தமானது புத்தியுடன் பரலோகத்தில் சேர்ந்திருக்காதவரையில், மனிதன் பரமார்த்த ஞானமுள்ளவனுக மாட்டான், ஆகையினுல் விவேகத்தோடு இசைந்தவனுமல்லன்; ஏனென்றுல், அவனை தன் சொந்த சித்தத்தின்படி அல்லது சொந்த விருப்பத்தின்படி விட்டுவிடப்பட்டால், கடவுள், பரலோகம், நித்திய வாழ்வு இவைகளைப்பற்றி, தன்னிட புத்தியின் யுக்தாயுக்தமான வஸ்துக்களைத் தள்ளி, அவைகளுக்குப் பதிலாக, தன் சித்தத்தின் விருப்பத்தோடு, பொருந்துகிறவைகளை எடுத்துக்கொண்டு, இவைகளை, விவேகத்தோடு இசைந்தவைகள் என்கிறான். ஆனுல் இவ்விஷயங்களெல்லாம் தேவதூத ஞானம் என்கிற நூல்களில போதிக்கப்படும்.

16. இதை தொடர்ந்துவரும் பக்கங்களில், அவர்களுக்கு, சாரத்தை கவனிக்கும்போது, சன்மார்க்கமானதும், திருத்தமானதும், ஸ்தூல சம்மந்தமாயிருப்பதால், தங்களிடமிருந்தே நன்மை செய்கிறவர்களை ஸ்தூல மனிதர் என்று சொல்லப்படும்; அவர்களுக்கு, சன்மார்க்கமான

தும், திருத்தமானதும், சாரத்தை கவனிக்கும்போது, பரமார்த்தமாகயிருப்பதால், கடவுளிடமிருந்து நன்மை செய்பவர்கள் ஞானிகளென்னப்படுவார்கள்.

17. நன்மையாயிருக்கிற யாதொரு நன்மையும் தன்னாலேயே எந்த மனிதனும் செய்யமுடியாதென்று கர்த்தர் யோவானில் போதிக்கிறார்; "பரலோகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்" (III. 27). அதிலேயே; "ஒருவன் என்னிலும், நான் அவனிலும், நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (XV. 5): "ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என்பது எல்லா நன்மையும் கடவுளினிடமிருந்து வருகிறது என்று அருத்தம் கொள்ளுகிறது; கனி என்பது நன்மையைக் குறிக்கிறது. "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்பது எவனும் தன்னாலேயே ஒரு நன்மையும் செய்யமுடியாதென்று அருத்தம் கொள்ளுகிறது. கர்த்தரை நம்பி அவரிடமிருந்து நன்மை செய்கிறவர்கள் "ஒளியின் பிள்ளைகள்" என்று கூறப்பட்டிருக்கின்றன. (யோவா. XII, 36,; லூக். XVI, 8); "மணவாளன் பிள்ளைகள்" (மாற், II. 19); "உயிர்த்தெழுதலின் பிள்ளைகள்" (லூக் XX, 36) "தேவனுக்குப் பிள்ளைகள்" லூக். XX. 36; யோவா. I. 12); "தேவனாலே பிறந்தவர்கள்" (யோவா. I, 13); "அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (மத்தே. V, 8); "கர்த்தர் அவர்களோடு வாசம் செய்வார்" என்றும்; (யோவா, XIV. 23);

"தேவனிடத்தில் அவர்களுக்கு விசுவாச முண்டு." (மாற். XI. 22); "அவர்கள் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறது" (யோவா. III. 21); இவைகளெல்லாம் இவ்வார்த்தைகளில் அடங்கியிருக்கின்றது; "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனிட சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள். (யோவான் I. 12, 13); "தேவ குமாரன் நாமத்தை நம்புதல்" என்பது தெய்வ வாக்கை நம்பி அதன்படி வாழ்தல் என்று கருத்து; "மாம்ச சித்தம்" என்பது தன்னிலே பொல்லாததாய் இருக்கிற மனிதனிட சித்தத்தின் சொந்த தன்மை என்று கருத்து; "மனிதனிட சித்தம்" என்பது பொல்லாங்கினால்தானே பொய்யாயிருக்கிற அவனிட அறிவின் சொந்த தன்மையாகிறது. "இவைகளில் பிறந்தவர்கள்" தங்களிட சொந்த தன்மையிலிருந்து இச்சித்து, தொழில்பட்டும், நினைத்து பேசுகிறவர்களாகவுமிருக்கிறார்கள்; "தேவனால் பிறந்தவர்கள் கர்த்தருக்குளளாய் இவைகள் எல்லாம செய்பவர்கள் சுருக்கிச் சொல்லில், மனிதனிலிருந்து வருவது நல்லதல்ல, ஆனால் கடவுளிடமிருந்து வருவது நல்லது.

ஒரு மனிதனானவன் பொல்லாங்குகளை பாவங்களாக எவ்வளவு தூரம் விலக்கி விடுகிறானோ, அவ்வளவு தூரம், தன்னிடமிருந்தல்லாமல் கர்த்தரிடமிருந்து நன்மைகளை செய்கிறான்.

18. தீமைகள், மனிதனுள்ளே கடவுள் பிரவேசிப்பதை தடுக்கிறதென்று யாருக்குத்தெரியாது, அல்லது யாருக்குத்தெரியாமலிருக்கக்கூடும்? தீமையானது நரகம், கடவுள் சுவர்க்கம், நரகமும் சுவர்க்கமும் எதிரிடையானவைகள். ஆகையால், அவைகள் ஒன்றில் ஒரு மனிதன் எவ்வளவு தூரமிருக்கிறானோ, அவ்வளவு தூரம் மற்றொன்றிலிருக்கமுடியாது; ஏனென்றால் ஒன்று மற்றொன்றுக்கு விரோதமாய் நடந்து அதை நாசம் செய்கிறது.

19. மனிதன் உலகத்தில் இருக்கும்போது, நரகத்திற்கும் சுவர்க்கத்திற்கும் மத்தியிலிருக்கிறான்; கீழே நரகமிருக்கிறது, மேலே சுவர்க்கமிருக்கிறது; அக்காலத்தில், நரகத்திற்காவது சுவர்க்கத்திற்காவது தானே திரும்ப, அவன் சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கின்றான்; அவன் நரகத்துக்கு தானே திரும்பினால், சுவர்க்கத்திலிருந்து தானே திரும்பிக்கொள்ளுகிறான்; அவன் சுவர்க்கத்திற்கு தானே திரும்பினால், நரகத்திலிருந்து தானே திரும்பிக்கொள்ளுகிறான். அதே மாதிரியாக, மனிதன் உலகத்திலிருக்கும்போது, கடவுளுக்கும் பிசாசுக்கும் மத்தியில் நிற்கிறான். இவைகளில் யாதாகிலும் ஒன்றுக்குத்தானே திரும்ப சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கின்றான்; அவன் பிசாசு பக்கம் தானே திரும்பினால், கடவுளை விட்டுத்தானே திரும்பிக்கொள்ளுகிறான்; ஆனால் அவன் கடவுள் பக்கம்தானே திரும்பினால், பிசாசை விட்டு தானே திரும்பிக்கொள்ளுகிறான். அல்லது அதே மாதிரியாக, மனிதன் உலகத்திலிருக்கும்போது, அவன் நன்மைக்கும் தீமைக்கும் மத்தியிலிருக்கிறான், இவை இரண்டில் யாதாகிலும் ஒன்றின் பக்கம் தானே

திரும்பிக்கொள்ள சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கின்றான்; அவன் தீமை செய்ய திரும்பினால், நன்மையை விட்டு தானே திரும்பிக்கொள்ளுகிறான்; நன்மை செய்யத் திரும்பினால், தீமையை விட்டு விலகிக்கொள்ளுகிறான்.

20. இதற்காவது அதற்காவது தானே, திரும்ப மனிதன் சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கின்றான் என்று கூறப்படுகிறது. ஒவ்வொருவனுக்கும் இந்த சுதந்தரம் தன்னிடமன்றி, கடவுளிடமிருந்து வருகிறது; ஆகையினால் தான் அவன் அதில் வைக்கப்பட்டிருக்கிறானென்று கூறப்படுகிறது. சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையிலுள்ள சம நிலையைப்பற்றியும், அதில் மனிதனிருந்து, அதிலிருந்து சுவேச்சையிலிருக்கிறான் என்பதைப் பற்றியும், சுவர்கமும், நரகமும் என்கிற நூலில் பார்க்கவும் (இலக்கங்கள் 589–596, 597–603). ஒவ்வொருவனும் சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கிறான் என்பதும், யாரிடமிருந்தும் அது எடுக்கப்படுகிறதில்லை என்பதும், அதின் தகுந்த இடத்தில் பார்க்கலாம்.

21. இந்த விசாரணையில் ஒரு மனிதன் தீமைகளை எவ்வளவு விலக்குகிறானோ அவ்வளவு அவன் கர்த்தரோடும் கர்த்தரிலும் இருக்கிறானென்பது வெளிப்படையாய் தெரிகிறது; அவன் கர்த்தரில் எவ்வளவு இருக்கிறானோ, அவ்வளவு தன்னிடமன்றி கர்த்தரிடமிருந்து நன்மைகள் செய்கிறான். இதினால் எவன் ஒருவன் தீமைகளை எவ்வளவு தூரம் விலக்குகிறானோ அவ்வளவு தூரம் நன்மைகள் செய்கிறானென்கிற பொது சட்டம் ஏற்படுகிறது.

22. என்றாலும் இரண்டு வஸ்த்துக்கள் தேவையாயிருக்கின்றன: தீமைகள் பாவங்களாய் இருப்பதால், அதாவது அவைகள் நரகத்திற்கு அடுத்ததும் பேய்தன முள்ளதுமானதால், அதனால் கர்த்தருக்கு விரோதமாயும், தெய்வ சட்டங்களுக்கு ஒவ்வாததுமாகவும் இருப்பதினால், அவைகளை மனிதன் விலக்கவேண்டுமென்பது ஒன்று; ஒரு மனிதன் தீமைகளை பாவங்களென்று தன்னாலேயே நீக்குவது போல விலக்கவேண்டுமென்பதும். ஆயினும் கடவுளுள்ளாய் தான் அப்படி செய்வதாக அறிந்துகொண்டு நம்பவேண்டியது என்பதும் மற்றொன்று. ஆனால் இந்த இரண்டு அவசியமானவைகளும் பின் தொடரும் பிரிவுகளில் ஆராயப்படும்.

23 முன் சொன்னதிலிருந்து இந்த மூன்று காரியங்களும் பின் தொடருகின்றன: I தீமைகளை பாவங்களாக நீக்குகிறதற்கு முன், ஒரு மனிதன் சிந்தித்து நன்மைகளை செய்தால், அவன் சிந்தித்து செய்யும் நன்மைகள் நன்மைகள் அல்ல II ஒரு மனிதன் தெய்வ பக்தியுள்ள எண்ணங்களைக்கொண்டு, தெய்வ பக்தியுள்ள வார்த்தைகளைப் பேசி, தீமைகளை பாவங்களாக நீக்காவிட்டால் அவன் நினைத்து பேசுகிற தெய்வ பக்தியுள்ள வஸ்த்துக்கள் தெய்வ பக்தியுள்ளவைகளல்ல. III ஒரு மனிதன் அநேக பொருள்களைத் தெரிந்துக்கொண்டு புத்திசாலியாக இருந்து தீமைகளை பாவங்களாக நீக்காவிட்டால், அவன் அப்படியிருந்தும் புத்திசாலியல்ல.

24. I ஒரு மனிதன் தீமைகளை பாவங்களாக நீக்குவதற்கு முன், சிந்தித்து நன்மைகளை செய்தால், அவன்

சிந்தித்து செய்யும் அந் நன்மைகள், நன்மையானவை களல்ல.

மேற் கூறியபடி, அதற்கு முன் அவன் கடவுளில் இல்லாதபடியினால் இது இப்படியாகிறது. உதாரணமாக:— அவன் ஏழைகளுக்குக் கொடுத்தும் வறுமையுள்ளவர்களுக்கு உதவி செய்தும், கோவில்களுக்கும் தரும வைத்திய சாலைகளுக்கும் தானம் கொடுத்தும் தன் திருச்சபைக்கும், தேசத்துக்கும் தன்னகரத்தாருக்கும் நன்மை செய்தும், சுவிசேஷத்தை போதித்தும், ஆன்மாக்களைக் குணப்படுத்தியும், தண்டனை செய்யும்போது நியாய பரிபாலனம் செய்தும், தன் தொழில்களில் உண்மையோடும், தன்னிட வேலைகளில் நேர்மையுடனும் நடந்தாலும், புரட்டு, விபசாரம், வெறுப்பு, தேவ நிந்தை, இவ்விதமான தீமைகளை பாவங்களாக நீக்க ஒன்றும் செய்யாத பட்சத்தில், அவைகளை கடவுளிடமிருந்தல்லாமல் தன்னிடமிருந்து செய்கிறபடியினால், உள்ளுக்குள்ளாய் அகத்தில் தீமையாயிருப்பவைகளைவிட வேறு ஒரு நன்மையும் செய்யமுடியாது. இம்மாதிரியாக கடவுளல்லாமல், தானே அவைகளிலிருக்கிறான்; அந்த மனிதனேயிருக்கும் நன்மைகள், அவனிட தீமைகளால் தீட்டாக்கப்பட்டு, தன்னையும் உலகத்தையுமே ஆதரிக்கின்றன. மேலும் ஒரு மனிதன், புரட்டு, விபசாரம், வெறுப்பு, தேவ நிந்தை இவ்வித தீமைகளை பாவங்களாக விலக்கினால், மேற் கூறிய இதே கிரியைகள் உள்ளுக்குள்ளாய் நன்மையானவைகளாகின்றன. ஏனென்றால் அவன் கடவுளிலிருந்து அவைகளை செய்கிறபடியாலும், கடவுளுள்ளாய் செய்யப்படுகிறதென்று சொல்லப்படுகிறபடியாலும் தான். (யோவான். III. 19—21).

25. II ஒரு மனிதன் தெய்வ பக்தியுள்ள எண்ணங்களை நினைத்து, தெய்வ பக்தியுள்ள வார்த்தைகளைப் பேசி, தீமைகளைப் பாவங்களாக விலக்காவிடில், அவன் நினைத்துப்பேசும் தெய்வ பக்தியுள்ள வஸ்துக்கள் தெய்வ பக்தியுள்ளவைகளல்ல.

இது அவன், கடவுளில் இல்லாதபடியினாலாகிறது. உதாரணமாக: — ஆராதனை நடக்கும் இடங்களுக்கு அவன் பல காற்போயும், பிரசங்கத்திற்கு பக்தியாய் செவி சாய்த்தும், தேவ வாக்கையும் தெய்வ பக்தியுள்ள நூல்களையும் வாசித்தும், இராப் போஜன சமஸ்காரத்தை பகர்ந்து பெற்றுக்கொண்டும், பிரதிதினம் பிரார்த்தனை செய்தும், இது மட்டுமல்லாமல் கடவுளைப் பற்றியும் ஈடேற்றத்தைப்பற்றியும், அவன் அதிகமாய் நினைத்தாலும், புரட்டு, விபசாரம், வெறுப்பு தேவநிந்தை, இவை போன்ற பாவங்களாகின்ற தீமைகளை நீக்க ஒன்றும் செய்யாவிட்டால் பிறகு அவன் நினைத்துப்பேசும் தெய்வ பக்தியுள்ள வஸ்துக்கள், அகத்தில் தெய்வ பக்தி இல்லாததா இருப்பதைத் தவிர வேறொன்றுமாயிராது. ஏனென்றால், அவைகளில் அந்த மனிதனை தன்னிட தீமைகளோடு இருக்கிறபடியினால் என்க. நிஜமாகவே, அக்காலத்தில் இது அவனுக்குத் தெரியாது; அப்படியிருந்தும் அவைகள் அங்கே இருக்கின்றன; அவனுக்கு முன் மறைந்து கிடக்கின்றன; ஏனென்றால்; ஜலம், உற்பத்தியிலிருந்து அசுத்தமாயிருக்கிற ஊற்றுபோல் அவன் இருக்கிறபடியினால் என்பதே. அவனிட தெய்வ பக்தியுள்ள சாதனைகள் வழக்கத்திலிருந்து ஒப்பாசாரமாக மாத்திரமாவது, அல்லது அவைகள் பாத்திரமானதாகவாவது அல்லது வெளி வேஷமுள்ளதாகவாவது இருக்கின்றன. நிஜமாகவே

அவைகள் சுவர்கத்துக்கு ஏறுகின்றன. ஆனால் போகும் வழியில் பின் திரும்பி, காற்றிலுள்ள புகைபோல கீழே விழுகின்றன.

26. மேலே (இலக்கம் 24, 25) சொல்லியதும், இன்னும் இதர அநேகம் தங்களிட நற்கிரியைகளையும் தெய்வ பக்தியுள்ள சாதனைகளையும், சொல்லிய அநேகரை இறந்த பின் பார்க்கவும், கேட்கவும் எனக்கு அருள் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்குள்ளே. விளக்கு வைத்திருந்தும், எண்ணெய் இல்லாதிருந்த சிலரை நான் பார்த்திருக்கிறேன்; அவர்கள் தீமைகளை பாவங்களாக நீக்கினார்களா வென்பதைப்பற்றி விசாரணை செய்யப்பட்டதில், அப்படி அவர்கள் செய்யவில்லையென்று கண்டு பிடிக்கப்பட்டது; ஆனையால் அவர்களுக்கு தாங்கள் கெட்டவர்களென்று பகிரங்கமாய் அறிவிக்கப்பட்டது. அவ்வித கெட்டவர்கள் வசித்திருந்த நிலவறைகளில் அவர்கள் பின்னிட்டு பிரவேசிப்பதையும்கூட பார்க்கப்பட்டது.

27. III. ஒரு மனிதன் அநேக வஸ்துக்களைத் தெரிந்து கொண்டு புத்தியுள்ளவனாயிருந்து தீமைகளை பாவங்களாக விலக்காவிட்டால், அவன் அப்படியிருந்தும் புத்தியுள்ளவனல்ல.

இதுவும் முன் கொடுக்கப்பட்ட காரணங்களைப்போன்ற காரணங்களாலாகும்; அதாவது, அவன் தன்னிடமிருந்து புத்தியுள்ளவனென்றும், கடவுளிடமிருந்து அல்ல என்பதினாலாகும். உதாரணமாக: தன் திருச்சபையின் கோட்

பாட்டையும் அதன் எல்லா விவரங்களையும், அவன் சரியாய் தெரிந்து கொண்டிருந்தாலும், இந்த விவரங்களை வேத வாக்கினாலும், யூகித்தறிகையாலும், உறுதிப்படுத்தும் விதம் தெரிந்திருந்தாலும், எல்லா காலத்தின் எல்லா திருச் சபைகளின் போதங்களையும், அதே காலத்தில் எல்லா சங் கங்களின் தீர்மானங்களையும் தெரிந்திருந்தாலும், இது மாத் திரமல்ல, அவன் உண்மைகளை தெரிந்து, அவைகளை கண்டு உணர்ந்தாலும் கூட, உதாரணமாக, விசுவாசம் என்ன வென்றும், அன்பு, தெய்வபக்தி, மனநைவு, பாவ விமோ சனம், சீர்படுகை, நீராட்டு மஞ்சனம், பரிசுத்த இராப் போஜனம், கர்த்தர் மீட்பு, ஈடேற்றம் இவைகள் என்ன வென்று அவனுக்கு தெரிந்தாலும், தீமைகளை பாவமான வைகளாக நீக்காவிட்டால், அவன் அப்படியிருந்தும் புத்தி யுள்ளவனல்ல. அவனிட அனுபோக உணர்ச்சிகள், அவ னிட அறிவுக்கு மாத்திரம், சேர்ந்ததாயும், அதே காலத் தில் அவனிட சித்தத்துக்கு சேராதபடியினால், அவைகள் உயிரில்லாதவைகளா யிருக்கின்றன; அவைகள் அப்படி யிருப்பதால் அவைகள் மேல் கூறிய காரணத்தினால் (இல. 15), காலத்தில் நாசமடையும். அல்லாமலும், அவைகள் தன் சித்தத்தின் விருப்பத்தோடு ஒத்துவாராதபடியினால், இறந்த பிறகு மனிதன் தானே அவைகளை தள்ளி விடுகி றான். ஆனால் அப்படி யிருந்தும், அனுபோக உணர்ச்சி கள், ஒரு மனிதன் எப்படி நடக்கவேண்டுமென்பதை கற் பிக்கிறபடியினால் அவைகள் அதிக அளவாய் வேண்டியிருக் கின்றன. அவன் அவைகளை செய்யும்போது, அக்காலத் தில் அவைகள் அவனோடு வசிக்கின்றன; அதற்கு முன் னிட்டல்ல.

28. இதுவரையில் கூறியவைகளெல்லாம் தெய்வ வாக்கில் அநேக வாக்கியங்களில் போதிக்கப்பட்டிருக்கின்றன; அவைகளில் பின்தொடர்பவைகள் மாத்திரம் எடுத்து காட்டப்படும். தெய்வ வாக்கு எவனும் நன்மையிலும், அதே காலத்தில் தீமையிலும் இருக்கமுடியாதென்று போதிக்கிறது; அல்லது, அதே அருத்தத்தினால் தன்னிட ஆன்மா விஷயமாய் எவனும் சுவர்கத்திலும், அதே காலத்தில் நரகத்திலும் இருக்கமுடியாது. இதனடியில் வரும வாக்கியங்களில் இதை அது போதிக்கிறது: "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனை சினேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிகொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" (மத்தே. VI. 24). "நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்து காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்து காட்டுகிறான்." (மத்தே. XII. 34, 35). நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட் செடிகளில் அத்திப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சி செடியில் திராட்சப் பழங்களை பறிக்கிறதுமில்லை." (லூக். VI. 43, 44.

29. திருவசனமானது, கர்த்தரிட மிருந்தல்லாமல் தன்னிடமிருந்தே, நலமானதை செய்ய முடியாதென்று

போதிக்கிறது. இயேசு சொன்னதாவது "நான்... திராட்ச செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர்; என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதை சுத்தம் பண்ணுகிறார். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்ச செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமாட்டாததுபோல், நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள்; ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது; ஒருவன் என்னில் நிலைத்திரா விட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவர்களை சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். (யோவான். XV, 1, 2, 4-6).

30 ஒரு மனிதன் தீமைகளை நீக்கி புனிதமாக்கப் படாதவரையில், அவனிட நன்மைகள் நன்மைகளல்லவென்றும், பக்தியுள்ள செயல்கள் பக்தியுள்ளவைகள் அல்ல வென்றும் அவன் புத்தியுள்ளவனல்லவனென்றும் அதற்கு எதிரானதும் இந்த வாக்கியங்களில் திருவசனம் போதிக்கிறது: "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய் காணப்படும்; உள்ளேயோ மரித்தவர்களின் எலும்பு

களினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புரம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்திலும் நிறைந்திருக்கிறீர்கள். (மத்தே. XXIII. 27, 28). "உங்களுக்கு ஐயோ, போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும், நிறைந்திருக்கிறது. குருடான பரிசேயனே! போஜனமான பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு" (XXIII. 25, 26).

மேலும் ஏசயாவிலும் இம்மாதிரி: "சோதோமின் அதிபதிகளே! கர்த்தரிட வார்த்தையைக் கேளுங்கள்; கோமோராவின் ஜனமே, நமது தேவனுடைய வேதத்துக்கு செவி கொடுங்கள், உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு? இனி வீண் காணிக்கைகளை கொண்டுவர வேண்டாம்; தூபம் காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; மாதப்பிறப்பும், ஓய்வு நாளும்;..... அந்த அநீதத்தை நான் சகிக்கமாட்டேன் .....உங்கள் மாதப்பிறப்புகளையும் உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது.....ஆகையால் நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது; உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஒழியுங்கள்; ..... உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்

போல் வெண்மையாயிருக்கும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." (I. 11, 13—18). சுருங்க சொல்லில், ஒரு மனிதனானவன் தீமைகளை நீக்கினால் ஒழிய, அவனிட உபாசனை செய்கைகளிலும், அதேமாதிரி அவனிட கிரியைகளிலும், ஒன்று கூட நல்லவையல்ல; வசனத்தில் சொல்லியதாவது: "உங்கள் அநீதங்களை நான் சகிக்கமாட்டேன்.....உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள், உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை நீக்குங்கள்.....தீமை செய்தலை விட்டு ஒழியுங்கள்". எரேமியாவில்: "அவனவன் தன் பொல்லாத வழியைவிட்டு திரும்பி உங்கள் நடத்தையை சீர்த்திருத்துங்கள்." (XXXV-15.)

2. அவர்கள் ஞானமுள்ளவர்களல்ல வென்று ஏசாயாவில் போதிக்கப்பட்டிருக்கிறது: "தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்கு புத்திமான்களுமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ! (V-21). அதிலேயே: "அவர்களின் ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களின் விவேகிகளின் விவேகம் மறைந்து போகும். ஆழ்ந்த ஞானமுள்ளவர்களுக்கும்,.....தங்கள் கிரியைகளை அந்தரங்கத்தில் செய்பவர்களுக்கும், ஐயோ! (XXIX 14, 15). அதிலேயே வேறு இடத்தில்: "சகாயம் அடையும்படி எகிப்துக்குப்போய், குதிரைகள்மேல் நம்பிக்கை வைத்து இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரை வீரர் மகா பலசாலிகளாயிருப்பதினால், அவர்களை நம்பிக்கொண்டிருப்பவர்களுக்கு, ஐயோ! அவர்கள் இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரை தேடாமலும் இருக்கிறார்கள்! தீமை செய்கிறவர்களின் வீட்டுக்

கும், அக்கிரமக்காரருக்குச் சகாயம் செய்கிறவர்களுக்கும் விரோதமாக எழும்புவார். எகிப்தியர் தெய்வமல்ல, மனுஷர்தானே; குதிரைகள் ஆவியல்ல, மாம்சம் தானே; (XXXI. 1—3). தற்போதும் இம்மாதிரி விவரிக்கப்பட்டிருக்கிறது; எகிப்து தேசம் வித்தைக்கு அடையாளமிருக்கிறது; குதிரை அதிலிருந்து வரும் புத்தியை காண்பிக்கிறது; இரதம் அதிலிருந்து வரும் கொள்கையை காண்பிக்கிறது; குதிரை வீரன் அதிலிருந்து வரும் அறிவைக் காண்பிக்கிறது; அதைப்பற்றி கூறியிருப்பது. "இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், இருப்பவர்களுக்கு ஐயோ, "தீமை செய்கிறவர்களின் வீட்டுக்கும், அக்கிரமக்காரருக்கு சகாயம் செய்கிறவர்களுக்கும் விரோதமாக எழும்புவார்" என்பது தீமைகளால் அவர்கள் நாச மடைதலை குறிக்கிறது. "எகிப்தியர் கடவுள் அல்ல, மனிதர்தானே," "குதிரைகள் ஆவியல்ல, மாம்சம்தானே" என்பவைகள் இவைகளெல்லாம் மனிதனிட சுய தன்மையில் உண்டாகிறவைகளென்றும், ஆகையினால் அவைகளில் உயிரில்லை என்பதை குறிக்கிறது. மனிகனும் மாம்சமும் மனிதனிட சுய தன்மையைக் காண்பிக்கிறது; கடவுளும் ஆன்மாவும் கடவுளிடமிருந்து வரும் உயிரைக் காண்பிக்கிறது; எகிப்து தேசத்து குதிரைகள் தற்போதத்தைக் காண்பிக்கிறது. ஞானாத்தத்தில் மாத்திரம் அறியக்கூடிய தன்னிடமிருந்து வரும் விவேகத்தைப் பற்றியும், கடவுளிடமிருந்து வரும் விவேகத்தைப் பற்றியும், திருவசனத்தில் அநேக வாக்கியங்களிருக்கின்றன

நல்லவைகளாயில்லாத படியினால், தானே செய்யும் நன்மைகள் மூலமாக எவனும் இரட்சிக்கப்பட மாட்டா

னென்பது இந்த வாக்கியங்களால் தெளிவாகிறது: "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான், ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத்தே. VII. 21—23). வேறு இடத்திலும்: "நீங்கள் வெளியே நின்று, ஆண்டவரே! ..... எங்களுக்கு திறக்க வேண்டுமென்று சொல்லி கதவை தட்டும்போது .....உம்முடைய சமூகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர்கள். ஆனாலும் அவர், நீங்கள் எவ்விடத்தாரோ உங்களை அறியேன் அக்கிரமக்காரராகிய நீங்கள் எல்லோரும் என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர் சொல்லுவார்" (லூக். XIII. 25—27). "தான் மற்ற மனிதர்களைப்போல, பரிகாரன், அநியாயக்காரன், விபசாரக்காரன் அல்ல வென்றும், வாரத்தில் இரண்டு தரம் உபவாசித்தேனென்றும், தன் சம்பாத்தியத்திலெல்லாம், தசம பாகம் செலுத்தி வந்ததாகவும் சொல்லி, தேவாலயத்தில் நின்று பிரார்த்தனை செய்த பரிசேயனைப்போல், அப்பேர்பட்ட மனிதர்களிருக்கிறார்கள். (லூக். XVIII. II—14). "அப்பிரயோசனமான ஊழி

யக்காரர் என்று சொல்லப்பட்டவர்கள் இவர்களேதான்." (லூக். XVII. 10).

31. நன்மையாயிருக்கப்பட்ட நன்மையை எம் மனிதனும் தன்னில் தானே செய்யமுடியாதென்பது ஒரு உண்மை. ஆனால் இந்த உண்மையால், தீமைகளை பாவங்களாக நீக்குகிற, ஒரு மனிதன் செய்யும் அன்பின் ஒவ்வொரு நன்மையையும் நாசப்படுத்துகிறது பாதகம்; மனிதன் நன்மை செய்யவேண்டுமென்று கட்டளையிடுகிற திருவசனத்துக்கு அது நேர்விரோதமாயிருக்கிறது. சட்டமும் தீர்க்கதரிசிகளும் நிற்கும் கற்பனைகளாகிய கடவுளிடத்து அன்பு, அயலானிடத்து அன்பு என்கிற தரும நியமங்களுக்கு விரோதமாயிருக்கிறது; மேலும், அது சமயம் என்பதின் முழுமையையும் சுரங்கம் தோண்டி கீழே கவிழ்க்கிறது; சமயம் என்பது நன்மை செய்தலென்றும், ஒவ்வொருவனும் தன்னிட கிரியைகள்படி தீர்ப்பு சொல்லப்படுவானென்றும், ஒவ்வொருவனுக்கும் தெரியும். தான் செஞ்சி கேட்டுக் கொண்டால், கடவுளிட சக்தியினால், தீமைகளை தானே நீக்குவதுபோல நீக்க சக்தியுள்ளவனாக ஒவ்வொரு மனிதனும் உண்டாக்கப்பட்டிருக்கிறான்; அவன் பின்னிட்டு செய்கிறது, கடவுளிடமிருந்து வந்த நன்மையாயிருக்கிறது.

எவனொருவன் தீமைகளை பாவங்களாக எவ்வளவு நினைக்கிறானோ, அவ்வளவு உண்மைகளை நேசிக்கிறான்.

32 கடவுளிடமிருந்து புறப்படுகின்ற தெய்வீக நன்மை என்றும், தெய்வீக உண்மை என்றும், இரண்டு சர்வவியாபகமானவைகளாயிருக்கின்றன; தெய்வீக நன்மையா

னது அவரிட தெய்வீக அன்பிற்கு சேர்ந்தது, தெய்வீக உண்மையானது அவரிட தெய்வீக ஞானத்துக்கு சேர்ந்தது. கர்த்தரிடத்தில் இந்த இரண்டும் ஒன்றாயிருக்கின்றது. ஆகையால் அவரிடமிருந்து ஒன்றாக புறப்படுகிறது; ஆனால் பரலோகங்களிலுள்ள தேவர்களாலும், பூமியிலுள்ள மனிதர்களாலும், அவைகள் ஒன்றாக பெற்றுக் கொள்ளப்படுகிறதில்லை. தெய்வீக நன்மையை விட, தெய்வீக உண்மையை அதிகமாக அடையும் தேவர்களும் மனிதர்களுமிருக்கிறார்கள்; தெய்வீக உண்மையை விட தெய்வீக நன்மையை அதிகமாயடைகிறவர்களுமிருக்கிறார்கள். ஆகையினால் தான் சுவர்க்கங்களை இரண்டு ராஜ்யங்களாக விசேஷித்து அறியப்படுகிறது. அவைகளில் ஒன்றை பரலோகமென்றும், மற்றொன்றை ஞானலோகமென்றும் கூறப்படுகிறது; தெய்வீக நன்மையை அதிகமாயடைகிற பரலோகங்கள் பரமலோகமாகிறது. ஆனால் தெய்வீக உண்மையை அதிகமாயடைகிறவைகள் ஞான லோகமாகிறது. பரலோகங்கள் விசேஷித்து பிரிக்கப்பட்ட இந்த இரண்டு லோகங்களையும் பற்றி சுவர்க்கமும் நரகமும் (இல. 20—28). என்கிற நூலில் பார்க்கவும் அப்படியிருந்தாலும், எல்லா பரலோகத்திலுள்ள தேவர்களும், அவர்களுடனிருக்கும் நன்மை உண்மையோடு ஒன்றாகிற அளவு, ஞானத்திலும் விவேகத்திலு மிருக்கிறார்கள். உண்மையோடு ஒன்றாகாத நன்மை, அவர்களுக்கு நன்மையாயில்லை. வேறு வகையிலும்கூட, நன்மையோடு ஒன்றாகாத உண்மை அவர்களுக்கு உண்மையாயில்லை இதனால் உண்மையோடு சேர்ந்த நன்மை, தேவனுக்கும் மனிதனுக்கும் அன்பும் ஞானமுமாகிறது விசதமாயிருக்கிறது; தெய்வ லோகத்தான் தன்னிடமிருக்கும் அன்பினாலும், ஞானத்தினாலும் தெய்வ

லோகத்தானுகிறபடியினுலும், அதேமாதிரி மனிதன் மனிதனுகிறபடியினுலும், உண்மையோடு நன்மை சேர்ந்து, தேவனை பரலோக தேவனுகவும், மனிதனை திருச்சபையின் மனிதனுகவும், செய்கிறதென்பது விசதமாகிறது.

33. நன்மையும், உண்மையும், கடவுளிடத்தில் ஒன்ருயிருந்து, ஒன்ருக அவரிடமிருந்து புறப்படுகிறபடியினுல், நன்மை உண்மையை நேசிப்பதாகவும், உண்மை நன்மையை நேசிப்பதாகவும், அவைகள் ஒன்ருயிருக்க விரும்புவதாகவும் ஏற்படுகிறது. அம்மாதிரியே, அவைகளின் எதிரிடையானவைகளுக்கும் உண்மையாயிருக்கிறது. தீமையானது பொய்யை நேசிக்கிறது, பொய் தீமையை நேசிக்கிறது. அவைகள் ஒன்ருயிருக்கவும் விரும்புகிறது. பின் தொடரும் பக்கங்களில், நன்மை உண்மையின் இணைவுக்கு சுவர்க்க விவாகமென்றும், தீமை பொய்யின் இணைவுக்கு நரக விவாகமென்றும் கூறப்படும்.

34. இந்த விசாரணைகளால், எவனெருவன் தீமைகளை பாவமானவைகளாக எவ்வளவு நீக்குகிருனே; அவன் உண்மைகளை அவ்வளவு நேசிக்கிருனென்று ஏற்படுகிறது; இதற்கு நேர் அடுத்த முன் பிரிவில் காண்பித்தபடி, அவன் அவ்வளவு தூரம் நன்மையிலிருக்கிருன். வேறு விதத்திலும் கூட, எவனெருவன் தீமைகளை பாவமானவைகளாக எவ்வளவு நீக்குகிறதில்லையோ, அவன் உண்மைகளை அவ்வளவு நேசிக்கிறதில்லை என்பது ஏற்படுகிறது. ஏனென்ருல், அவன் அவ்வளவு தூரம் நன்மையிலில்லாதபடியினுல்தான்.

35. தீமைகளை பாவங்களாக நீக்காத மனிதன் நிஜமாகவே உண்மைகளை நேசிக்கலாம்; என்ருலும், அவன்

அவைகளை உண்மையானவைகள் என்றே நேசிக்காமல், கௌரவம் அல்லது லாபம் வருவிக்கிற தன்னிட கீர்த்திக்கு உதவியானவைகளென்று நேசிக்கிறான். ஆகையால் இந்த தாற்பரியத்துக்கு உதவாவிட்டால், அவன் அவைகளை நேசிக்கிறதில்லை.

36. நன்மை சித்தத்துக்கு சேர்ந்தது; உண்மை புத்திக்கு சேர்ந்தது சித்தத்திலிருக்கும் நன்மையை நேசிப்பதிலிருந்து, புத்தியிலிருக்கும் உண்மையை நேசித்தல் ஆரம்பிக்கிறது; உண்மையை நேசிப்பதிலிருந்து, உண்மை பிரத்தியக்ஷமாகிறது; உண்மை பிரத்தியக்ஷத்திலிருந்து உண்மை மனனம் உண்டாகிறது; இவைகளிலிருந்து, உண்மையான தாற்பரியத்தில் விசுவாசமாயிருக்கிற உண்மையை ஒத்துக்கொள்ளல் உண்டாகிறது. நன்மையை நேசித்தலிலிருந்து விசுவாசத்துக்கு இதுதான் போக்கென்று, தெய்வீக அன்பும் தெய்வீக ஞானமும் என்கிற நூலில் நிச்சயப்படுத்தப்படும்

37. உண்மையோடு சேர்ந்தாலொழிய, முன் சொல்லியபடி, நன்மை நன்மையல்லாதபடியினால், அது இடைவிடாமல் இருக்க விரும்பினாலும், அதுவரையில் நன்மை என்பது இல்லை என்று ஏற்படுகிறது. ஆகையினால், அது நிலைத்திருக்க உண்மைகளை விரும்பி, அவைகளை சேகரிக்கிறது; இவைகளிலிருந்துதான் அதின் ஆகாரமும் உற்பவமும் உண்டாகிறது. இந்த காரணத்தினால்தான் எவன் ஒருவன் எவ்வளவு நன்மையிலிருக்கிறானோ, அவ்வளவு தூரம் அவன் உண்மைகளை நேசிக்கிறான். அப்படி இருப்பதால் எவன் ஒருவன் தீமைகளை பாவமாக எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவன் அவ்வளவு தூரம் நன்மையிலிருக்கிறான்.

38. எவனொருவன் எவ்வளவு தூரம் நன்மையில் நிலைபெற்று, அந்நன்மையிலிருந்து உண்மைகளை நேசிக்கிறானோ, அவ்வளவு தூரம், கர்த்தர் நன்மையே யாகவும் உண்மையே யாகவும் இருக்கிறபடியினால், அவன் கர்த்தரை நேசிக்கிறான். ஆகையினால், நன்மையிலும் உண்மையிலும், கர்த்தர் மனிதனோடு இருக்கிறார்; பின் சொன்னது முன் கூறியதிலிருந்து நேசிக்கப்பட்டால், அப்பொழுது, கர்த்தர் நேசிக்கப்படுகிறார். மற்றபடி அல்ல இதை யோவானில் கர்த்தர் போதிக்கிறார்: "என்னிட கற்பனைகளை பெற்றுக்கொண்டு அவைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்; .....ஆனால் என்னிடத்தில் அன்பில்லாதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்". (XIV. 21, 24). வேறு இடத்திலும்: "நீங்கள் என்னிட கற்பனைகளை கைக்கொண்டால், என்னிட அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவா. XV. 10). கர்த்தரிட தர்ம நியமங்கள், வசனங்கள், கற்பனைகள், உண்மையானவைகள்.

39. நன்மை உண்மையை நேசிக்கிறது என்பதை, குரு, போர்ச்சேவகன், வர்த்தகன், சிற்பி இவர்களுடன் ஒத்துப் பார்ப்பதினால் திருஷ்டாந்தப்படுத்தலாம். குருவுடன்: ஆன்மாக்களது ஈடேற்றத்துக்கு திட்டம் பண்ணுவதற்கும், சுவர்க்கத்துக்கு வழி போதிப்பதற்கும், தான் கற்பிக்கிறவர்களுக்கு வழி காட்டுதற்கு மிருக்கிற குருத்துவத்தின் நன்மையில், அவர் இருந்தால், அந்த நன்மையில் அவர் இருக்கும் அளவு, அன்பிலிருந்தும் அதின் விருப்பத்திலிருந்தும், தான் போதிப்பதும், அதினால் தான் வழி காட்டுவதுமான உண்மைகளை தனக்கே சம்பாதித்துகொள்ளுகிறான். ஆயினும், குருத்துவத்தின் நன்மையில்

இல்லாமல், தனக்கு ஒரே நன்மையாயிருக்கிற தன்னையும் உலகத்தையும் நேசிப்பதிலிருந்து, தன்னிட தொழிலின் சந்தோஷத்தில் இருக்கிற குருகூட, இந்த அன்பினாலும், அதன் விருப்பத்தினாலும், அதின் நன்மையான, கடவுள் அனுக்கிரகத்தினாலுண்டான, சந்தோஷத்திற்கு தக்கபடி, அந்த உண்மைகளை திரளாக தானே சம்பாதித்துக்கொள்ளுகிறார். பேரர் சேவகனுடன்: யுத்த சம்மந்தமான சேவகத்தின் அன்பிலிருந்து, அவன் தன் தேசத்தை காப்பாற்றுவதின் நன்மையை தெரிந்துகொண்டாலும், கியாதியிலிருந்தாலும், அந்த நன்மையிலிருந்தும் அதற்கு தக்கபடி, தன் தொழிலின் வித்தையை அவன் தெரிந்து கொள்ளுகிறான்; அவன் மேலதிகாரத்திலிருந்தால், அதின் விவேகத்தையும் தெரிந்து கொள்ளுகிறான், நன்மையான அவன் அன்பின் சந்தோஷம் போஷிக்கப்பட்டு உருவாக்கப்படுகிற உண்மைகளாக, இவைகள் இருக்கின்றன. வர்த்தகனுடன்: அவன் நேசித்து வர்த்தகத்துக்கு பிரிதிஷ்டை செய்து கொண்டால், அந்த அன்பில் வழிவகையாக பிரவேசித்து அதை உண்டாக்குகிற எல்லாவற்றையும் அவன் சந்தோஷத்தோடு உட்கொள்ளுகிறான்; வியாபாரமானது அதன் நன்மையாயிருக்க, இவைகளும் உண்மைகளாக இருக்கின்றன. சிற்பியுடன்: தன் வேலையை சிறந்த ஊக்கத்துடன் கையாண்டு, தன் வாழ்வின் நன்மையாக அதை நேசித்தால், அவன் துணைக் கருவிகளை வாங்கி, தன் தொழிலுக்கு சம்மந்தப்பட்ட வித்தைக்கு சேர்ந்தவைகளால், தான் பூரணமாக்கிகொள்ளுகிறான்; இந்த வழி வகைகளால், தன்னிட வேலை நல்லதாக செய்கிறான். இந்த உதாரணங்களால், உண்மைகள், அன்பின் நன்மை நிலைத்திருப்பதற்கும், உண்மையா

வதற்கும் வழிவகைகள் என்று தெளிவாகிறது; அது அப்படியிருப்பதால், நன்மை தான் நிலைத்திருக்க உண்மைகளை நேசிக்கிறது. அதினால்தான் திருவசனத்தில், சத்தியத்தின்படி செய்தலென்பது, நன்மை நிலைத்திருக்க செய்தலென்று அருத்தம். இதுதான் "சத்தியத்தின்படி" செய்தல் (யோவா. III—21); "கர்த்தர் வார்த்தைகள்படி செய்தல்" (லூக். VI—47); "அவர் கற்பனையை கைகொள்ளல்" (யோவா. XIV—21); "அவர் வார்த்தைகளின்படி செய்தல்" (மத்தே. VII. 24); "தேவன் வசனம்படி செய்தல்" (லூக். VIII—21); "கட்டளைகளையும் நியாயங்களையும் கைகொள்ளுதல்" (லெவி. XVIII—5) என்பதின் அருத்தம், நல்லது அல்லது கனி என்பது உள் பொருளாக வெளிவருகிறதாகயிருப்பதால், நன்மை செய்தல் என்பதும், கனி ஈதல் என்பதும்கூட இந்த அருத்தம் கொள்ளுகிறது.

40. நன்மையானது சத்தியத்தை நேசித்து. அத்துடன் சேர்ந்திருக்க இச்சிக்கிறது என்பதை போஜனத்துடனும் ஜலத்துடனும், அல்லது ரொட்டியுடனும் திராக்ஷாரசத்துடனும் உவமித்து திருஷ்டாந்தப்படுத்தலாம். ஒன்றுடன் மற்றொன்று மிருக்கவேண்டும்: சரீரத்தில், அதின் போஷிப்புக்கு, ஜலமும் திராக்ஷாரசமுமில்லாமல், போஜனமும் அல்லது ரொட்டியும் மாத்திரம் எதையும் சித்தியாக்குகிறதில்லை; ஆகையால் ஒன்று மற்றொன்றின் பேரில் அவாவும் வாஞ்சையுமுடையதா இருக்கிறது. மேலும், திருவசனத்தில் போஜனம் ரொட்டி என்பதால், ஞானருத்தத்தில் நன்மையென்றும் ஜலம் திராக்ஷாரசமென்பதால், சத்தியமென்பதும் அருத்தம் கொள்ளப்படுகிறது.

41. தீமைகளை பாவமானவைகளாக நீக்குகிறவன், சத்தியங்களை நேசிக்கிறானென்றும், அவைகளை விரும்புகிறானென்றும், அவன் அவ்வளவு அதிகமாக நன்மையிலிருப்பதால், எவ்வளவு அதிகமாக தீமைகளை பாவங்களாக நீக்குகிறானோ, அவ்வளவு அதிகமாக சத்தியங்களை நேசித்து விரும்புகிறானென்றும் முன் கூறியவைகளினால், இப்பொழுது தோன்றும். பரலோக மிருப்பதும் திருச்சபை இருக்க வேண்டியதுமான நன்மை உண்மையின் விவாகமாயிருக்கிற சுவர்க்க விவாகத்திற்கு இம்மாதிரியாக அவன் வருகிறான்.

எவனொருவன் தீமைகளை எவ்வளவுதூரம் நீக்குகிறானோ அவ்வளவு விசுவாசத்தை உடைத்தாயிருந்து, பரமார்த்த ஞானியாயிருக்கிறான்.

42. நினைத்தலும் செய்தலும்போல விசுவாசமும் வாழ்வும் வேறு வேறானதாயிருக்கிறது; நினைத்தல் புத்திக்கும், செய்தல் சித்தத்துக்கும் சேர்ந்திருப்பதால், புத்தியையும் சித்தத்தையும்போல, விசுவாசமும் வாழ்வும், வேறு வேறாயிருக்கிறதென்று ஏற்படுகிறது. பின் சொன்னவைகளுக்குள்ளேயிருக்கும் வித்தியாசத்தை தெரிந்து கொண்டவன், முன் சொன்னவைகளுக்குள்ள வித்தியாசத்தையும் கூட தெரிந்துக்கொண்டிருக்கிறான், பின் சொன்னவைகளின் சேர்க்கையை தெரிந்தவன் முன் சொன்னவைகளின் சேர்க்கையைக்கூட தெரிந்து கொண்டிருக்கிறான். ஆகையால், புத்தியையும் சித்தத்தையும் பற்றி சிலது முந்தி சொல்லப்படவேண்டும்.

43. மனிதனுக்கு இரண்டு மனோ சக்திகளுண்டு, அதில் ஒன்றை சித்த மென்றும், மற்றதை புத்தி என்றும்

சொல்லப்படுகிறது. அவைகள் ஒன்றுக்கொன்று வேறானது, ஆனால் அவைகள் ஒன்றாக கூடும்படியாக சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன; அவைகள் ஒன்றாயிருக்கும்போது, அவைகளுக்கு மனது என்று பெயர்; ஆகையினால், இவைகள் மானிட மனதை உருவாக்குகின்றன. அதினுள் மனிதனிட முழு உயிருமிருக்கிறது. தெய்வீக ஒழுங்குபடி இருக்கும் பிரபஞ்சத்திலுள்ள எல்லா பொருள்களும் நன்மைக்கும் உண்மைக்கும் சம்மந்தப்பட்டிருப்பதுபோல், மனிதனில் நன்மையானது அவன் சித்தத்துக்கும், அவனிலுண்மை அவன் புத்திக்கும் சேர்ந்திருக்கிறபடியினால், மனிதனில் எல்லாம், சித்தத்துக்கும் புத்திக்கும் சம்மந்தப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு மனோ சக்திகளும் நன்மை உண்மைக்கு ஆசயங்களாகவும், பொருள்களாகவுமிருக்கின்றன; நன்மைக்கு சேர்ந்த எல்லாவற்றிற்கும் சித்தமானது, ஆசயமாகவும் பொருளாகவுமிருக்கிறது; உண்மைக்கு சேர்ந்த எல்லாவற்றிற்கும் புத்தியானது ஆசயமாகவும் பொருளாகவுமிருக்கிறது. நன்மைகளும் உன்மைகளும் மனிதனிடத்தில் தங்க வேறு இடமில்லை. ஆகவே, அன்பு நன்மைக்கு சேர்ந்ததாலும், நன்மை அன்புக்கு சேர்ந்ததாலும், விசுவாசம் உண்மைக்கு சேர்ந்ததாலும், உண்மை விசுவாசத்துக்கு சேர்ந்ததாலும், அன்பிற்கும் விசுவாசத்திற்கும் வேறு தங்குமிடமில்லை. சித்தமும் புத்தியும் எப்படி ஒரு மனதாகிறது என்பதை தெரிந்து கொள்வதைவிட எதும் பிரதானமானதல்ல. நன்மையும் உண்மையும் ஒன்றாகிறதுபோல் அவைகள் ஒருமனதாகிறது; நன்மைக்கும் உண்மைக்கும் உள்ள விவாகத்தைப்போல் சித்தத்துக்கும் புத்திக்கும் அம்மாதிரி விவாகமுண்டு. இந்த விவாகத்தின் சுபாவத்தைப் பற்றி முன் பிரிவில், சில தூரம் சொல்லப்பட்டது; அத்

துடன் இது சேர்க்கப்படவேண்டும்: நன்மையானது ஒரு பொருளின் சொரூப நிலையாகவும், உண்மை அதனால் ஒரு பொருளின் தடத்த நிலையாகவுமிருப்பதுபோல், மனிதனில் சித்தமானது அவனிட உயிரின் சொரூப நிலையாகவும், புத்தியானது அதனால் அவனிட உயிரின் தடத்த நிலையாகவும் இருக்கின்றன; ஏனென்றால், சித்தத்துக்கு சேர்ந்த நன்மையானது, புத்தியில் உருவாகி, ஓர் விதமாய் பார்வைக்கு தெரியக்காட்டுகிறது

44. ஒரு மனிதன் அநேக பொருள்களை தெரிந்து, நினைத்து, உணரலாமென்றும். அப்படியிருந்தும் புத்தியில்லாதவனாயிருக்கலாமென்றும், மேலே (இல. 27, 28) காண்பிக்கப்பட்டது; தெரிந்துகொள்ளுதலும் சிந்தித்தலும், விசுவாசத்துக்கு சேர்ந்தபடியினாலும், ஒரு பொருள் அப்படியிருக்கிறது என்று உணர அதற்கு அதிகமாய் சேர்ந்திருப்பதாலும், ஒரு மனிதன் தனக்கு விசுவாசமுண்டென்று நம்பவும், அப்படியிருந்தும், அது தன்னிடமில்லாமலும், இருக்கவும் கூடும் அவன் அதை உடைத்தாயிருக்காததற்கு காரணம், அவன், வாழ்வின் தீமையிலிருப்பதாலும், வாழ்வின் தீமையும், விசுவாசத்தின் உண்மையும் ஒன்றாக தொழில்படாமையினாலுமாம். வாழ்வின் தீமை சித்தத்திற்கு சேர்ந்தபடியினாலும், விசுவாசத்தின் உண்மை புத்திக்கு சேர்ந்தபடியினாலும், சித்தமானது புத்திக்கு வழிகாட்டி, தன்னுடனே ஒன்றாக நடக்க செய்கிறபடியினாலும், வாழ்வின் தீமை விசுவாசத்தின் உண்மையை நாசப்படுத்துகிறது. ஆகையினால், மனிதன் சுயர்ச்சியாய் விடப்பட்டு, அவனிட தீமையிலிருந்தும், அதினிட ஆசையிலிருந்தும் நினைக்கும்போது, சித்தத்தோடு ஒத்துவராதது எதாவது புத்தியிலிருந்தால், அப்

பொழுது அவன் புத்தியிலுள்ள உண்மையை தள்ளி விடு கிறான் அல்லது பொய்ப்பித்தலினால் அதை ஒற்றுமைப்பட பலவந்தம் செய்கிறான். வாழ்வின் நன்மையிலிருப்பவர்க ளிடத்தில் அது வேறு மாதிரி; அவர்கள் சுயர்ச்சியில் விட்டு விடப்பட்டால், நன்மையைக்கொண்டு நினைக்கிறார்கள். சித்தத்தோடு ஒத்துப் போகிறபடியினால், புத்தியிலிருக்கும் உண்மையை அவர்கள் நேசிக்கிறார்கள். நன்மையினிடவும் உண்மையினிடவும் ஓர் சேர்க்கை இருப்பதுபோல, விசுவா சத்தினிடவும் வாழ்வினிடவும் ஒரு சேர்க்கை இம்மாதிரி சித்தியாகிறது; ஒவ்வொன்றும் புத்தினிடவும் சித்தத்தி னிடவும் சேர்க்கையைப் போலிருக்கிறது

45. மனிதன் தீமைகளை பாவங்களாக நீக்குகிற பிர மாணம், அவன் அந்த அளவு மேல் காண்பித்தபடி, நன் மையிலிருப்பதால், அவனுக்கு விசுவாசம் உண்டென்று, இந்த விசாரணைகளால் பின் தொடருகிறது. அவன் தீமை யிலிருப்பதாலும், தீமையானது அந்தரங்கத்தில் உண்மை யை வெறுக்கிறபடியினாலும், தீமைகளை பாவங்களாக நீக்கா தவனுக்கு விசுவாசம் இல்லை என்கிற அதின் எதிர் பக்ஷத் தாலும், இது உறுதி படுத்தப்படுகிறது. நிஜமாகவே வெளி பார்வைக்கு, உண்மையானது புத்தியிலிருக்க வேண்டு மென்று, அதின் சிநேகிதனாக நடந்து, சகித்து, அதுமட்டு மல்லாமல் அதை நேசிக்கவும் கூடும்; ஆனால் வெளிச்சாயல், இறந்த பின் நேரிடுகிறபடி, நீக்கப்பட்டால், பிறகு அது முதலில் உலகத்தில் தன்னிட சிநேகிதனாகிய உண்மையை தள்ளி, பின்னிட்டு, அது உண்மையல்ல வென்று மறுத ளித்து, கடைசியாய் அதை வெறுப்பில் பற்றுகிறது.

46. பொல்லாதவனிட விசுவாசம், சித்தத்திலிருந்து வந்த நன்மை ஒன்றுமில்லாத புத்திக்கு அடுத்த விசுவாசமாயிருக்கிறது; இவ்வண்ணம், இருதயத்தினின்று உயிர்ப்பில்லாமல் சுவாசாசயம் சுவாசிக்கிறது போலிருக்கிற, அது ஒரு உயிரற்ற விசுவாசம்; புத்தி கூட சுவாசாசயத்துடனும் சித்தம் இருதயத்துடனும் ஒற்றுமைபடுகிறது; சிவப்பினாலும் பொன்னினாலும் கூட சிங்காரிக்கப்பட்டு, உள்ளுக்குள்ளே கொடிய ரோகத்தினால் நிறைந்த அழகுள்ள வேசியைப்போல் அது இருக்கிறது; வேசியும்கூட உண்மையை பொய்ப்பித்தலென்று தத்துவார்த்தம் கொள்ளுகிறது. ஆகையால் திருவசனத்தில் அந்த அர்த்தம் கொடுக்கிறது. தோட்டக்காரன் வெட்டிப் போடுகிற, இலைகளால் மிகுந்து, கனிதராத மரத்தைப்போல் அது கூட இருக்கிறது; மரமானது மனிதன் என்றும், அதின் இலைகளும் மலர்களும் விசுவாசத்தின் உண்மைகளென்றும், அதின் கனி அன்பின் நன்மையென்றும் அர்த்தம் கொள்ளுகிறது. ஆனால் சித்தத்திலிருந்து நன்மை இருக்கப்பட்ட புத்தியிலுள்ள விசுவாசம் வேறு பொருள். இந்த விசுவாசம் உயிரோடிருக்கிறது. மேலும் அது, இருதயத்திலிருந்து உயிர்ப்பிருக்கிற சுவாசாசயத்தின் சுவாசித்தல் போலுமிருக்கிறது; கற்பினால் தன் புருஷன் காதல் கொண்ட அழகுள்ள மனைவியைப் போலுமிருக்கிறது; மேலும் அது கனி கொடுக்கும் மரத்தைப்போலுமிருக்கிறது.

47. ஒரு கடவுளிருக்கிறார் என்பது போலும், கடவுளாகிய கர்த்தர் இரட்சிப்பவர் மீட்பவரென்பதுபோலும், சுவர்க்கம் ஒன்றும், நரகம் ஒன்றும் இருக்கிறதென்பது போலும், மரித்த பின் உயிரிருக்கிறதென்பது போலும்,

அவைகளைப்பற்றி செய்யப்படவேண்டுமென்று சொல்லப் படாமல் நம்ப வேண்டியவைகளென்று கூறப்படும் இன்னும் அநேகமானவைகளைப் போலும், விசுவாசத்துக்கு மட்டும் சேர்ந்ததாக காணப்படுகிற அநேக உண்மைகளிருக்கின்றன. விசுவாசத்துக்கு சேர்ந்த இந்த உண்மைகள்கூட தீமையி லுள்ள மனிதனிடத்தில் இறந்தவைகளாயிருக்கின்றன. ஆனால் நன்மையிலிருக்கிற மனிதனிடத்தில் உயிரோடிருக் கின்றன. நன்மையிலுள்ள மனிதன், உலகத்துக்கு முன் பாக மட்டுமல்ல, அவன் தனிமையாயிருக்கும்போது தன் முன்பாகவும்கூட, சித்தத்திலிருந்து நேர்த்தியாய் செய்வது மட்டுமல்ல, புத்தியிலிருந்துகூட நேர்த்தியாய் சிந்திக்கிறா னென்பது அதற்கு காரணமாயிருக்கிறது. தீமையிலுள்ள வனுடன் அது வேறு மாதிரியிருக்கிறது.

48. இந்த உண்மைகள், விசுவாசத்துக்கு மாத்திரம் சேர்ந்ததாக காணப்படுகிறதென்று கூறப்பட்டது; ஆனால் மேல் (இலக் 43) கூறியபடி, புத்தியிலுள்ள சிந்தனையின் சொரூப நிலையாயிருக்கிற சித்தத்தின் அன்பிலிருந்து, புத்தி யினிட சிந்தனையானது தன்னிட தடத்த நிலையை அடை கிறது. அன்பிலிருந்து எவனொருவன் எதை இச்சித்தாலும், அதை அவன் செய்ய இச்சிக்கிறான், நினைக்க இச்சிக்கிறான், உணர இச்சிக்கிறான், பேசவும் இச்சிக்கிறான்; அல்லது அதேவாகிறபடி, சித்தத்திலிருந்து எவனொருவன் எதை நேசிக்கிறானோ, அதை செய்ய விரும்புகிறான், நினைக்க விரும்புகிறான், அறிந்துகொள்ள விரும்புகிறான், பேச விரும்புகிறான். ஒரு மனிதன் தீமையை பாவமாக நீக்கும் போது மேல் காண்பித்தபடி, அவன் அப்பொழுது கர்த்த ரில் இருக்கிறானென்பதும், கர்த்தர் எல்லா பொருள்களையும்

சேட்டிக்கிறுரென்பதும், சேர்த்தப்படவேண்டும்; ஆகையால், "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று" கேட்டவர்களுக்கு, கர்த்தர் பிரதியுத்தரமாக, "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்றார். (யோவா. VI, 28, 29). கர்த்தரை விசுவாசிப்பதென்பது, அவர் வேறு இடங்களில் போதிக்கிறபடி, அவர் இருக்கிறுரென்று நினைப்பது மட்டுமல்ல, அவர் வார்த்தைகளின்படி நடத்தலும்கூட அடங்கி இருக்கிறது.

49. அவர்கள் தங்களிடமிருப்பதாக எவ்வளவு நினைத்தபோதிலும், தீமையிலுள்ளவர்களுக்கு விசுவாசமில்லை என்பது சூக்குமலோகத்தில் அவ்விதமான உதாரணங்களால் காட்டப்பட்டிருக்கிறது. தேவர்களின் விசுவாசத்தின் பரமார்த்தம், அங்கே அழைத்துக்கொண்டு போகப்பட்டவர்களின் விசுவாசத்தின் உள்பாகங்களில் பிரவேசித்த ஒரு பரலோக சங்கத்துக்கு அவர்கள் வழி காட்டப்பட்டார்கள்; அதினுல், விசுவாசத்தின் பரமார்த்தம் அல்லது உள்பாகமானதல்லாமல், அதின் தூலமான் அல்லது புறம்பானது மாத்திரம் தாங்கள் உடைத்தாயிருந்தார்களென்று இவர்கள் கிரகித்தார்கள். ஆகவே, அவர்களே விசுவாசம் கிஞ்சித்தேனும் தங்களிடமில்லையென்றும், ஒரு பொருளானது எந்த காரணத்தினுலும் அப்படி இருக்கிறதென்று நினைப்பதானது, அதை நம்புதல் அல்லது அதில் விசுவாசம் வைத்தலென்று உலகத்திலிருக்கும்போது தாங்களே உணர்ந்ததாகவும், தாங்களே ஒப்புக்கொண்டார்கள். ஆனுல், தீமையில்லாதவர்களின் விசுவாசமானது வேறு மாதிரி இருப்பது காணப்பட்டது.

50. இந்த விசாரணைகளால், பரமார்த்த விசுவாசம் என்னவென்றும், பரமார்த்தமல்லாத விசுவாசம் என்ன வென்றும், பாவம் செய்யாதவர்கள் நன்மைகளை, தங்களிட மிருந்து அல்லாமல் கடவுளிடமிருந்து (மேல் இலக். 18–31 பார்க்க) செய்கிறபடியினாலும், விசுவாசத்தினால் பரமார்த்த மாகிறபடியினாலும், பாவம் செய்யாதவர்களிடம் விசுவாச மானது பரமார்த்தமானதென்றும் அறிந்து கொள்ளலாம். அவர்களுக்கு விசுவாசம் உண்மை. யோவானில் இதை கர்த்தர் இவ்வாறு போதிக்கிறார்: "ஒளியானது உலகத் திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாத வைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரண மாயிருக்கிறது பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வாராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய் கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப் படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வரு கிறான் என்றார்" (III. 19—21).

51. இவ்வளவு தூரம் கூறியவைகள் திருவசனத்தில் பின் தொடரும் வாக்கியங்களால் உறுதி செய்யப்படுகிறது: "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்தி லிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனு ஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்து காட்டுகிறான்; இருதயத்தின் நிறை வினால் அவனவன் வாய் பேசும்". (லூக். VI 45; மத்தே. XII. 35) திருவசனத்தில் இருதயம் என்பது மனிதனிட சித்தம்; அதிலிருந்து மனிதன் நினைத்து பேசு

கிறபடியினால், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று கூறப்பட்டது. "வாய்க்குள்ளே போகிறது மனுஷனை தீட்டு படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனை தீட்டு படுத்தும்" (மத்தே. XV. 11, [18]). இங்கு கூட இருதயம் என்பது சித்தமாகிறது. தன் பாதங்களை பரிமள தைலத்தால் அலம்பின ஸ்திரீயைக் குறித்து இயேசு சொன்னதாவது "அவள் அதிகமாய் விசுவாசித்தபடியினால், அவளிட பாவங்கள் மன்னிக்கப்பட்டது"; பின்னிட்டு, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது". (லூக். VII. 47—50); பாவங்கள் மன்னிக்கப்பட்டபோது, அதாவது, அவைகள் ஒருவனிடத்திலில்லாதபோது விசுவாசம் இரட்சிக்குமென்று இதனால் தெளிவாகிறது. தங்கள் சொந்த சித்தத்தின் சுய தன்மையிலும். அதிலிருந்து தங்கள் சொந்த புத்தியின் சுய தன்மையிலும், இல்லாதிருக்கிறவர்கள், அதாவது தீமையிலும், அதிலிருந்து பொய்யிலும் இல்லாதவர்கள், கடவுள் குமாரர்களென்றும், கடவுளிடம் பிறந்தவர்களென்றும் கூறப்படுகிறார்களென்றும், கர்த்தரை நம்பப்பட்டவர்கள் அவர்கள்தாமென்றும், அவரே யோவான் I—12, 13ல் போதிக்கிறார். மேலே 17-வது இலக்கம் முடிவில் அந்த வாக்கியம் விரித்துரைத்திருப்பதை காணலாம்.

52 இந்த விசாரணைகளால், மனிதனிடத்தில் நன்மையிருப்பதைவிட் ஒரு நெல் எடைகூட உண்மை அதிகமாயில்லை என்றும், இவ்விதமாய், வாழ்விருப்பதைவிட விசுவாசம் ஒரு நெல் எடைகூட அதிகமாயில்லை என்றும் முடிவு தொடர்கிறது. ஒரு பொருளானது இம்மாதிரி இருக்கிறதென்கிற எண்ணம் புத்தியிலிருக்கிறது; ஆனால் சித்தத்தில் சம்மந்தமிருந்தாலொழிய விசுவாசமாயிருக்கிற அறிக்கை

யிடுதல் அதிலில்லை. இம்மாதிரியாக விசுவாசமும் வாழ்வும் சம நடையுடன் நடக்கின்றன. இந்த ஆலோசனைகளால், எவனொருவன் தீமைகளை பாவங்களாக எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவ்வளவு தூரம் அவனுக்கு விசுவாசமுண்டென்றும், அவன் ஒளியாயிருக்கிறானென்றும், இப்பொழுது வெளிப்படையாகிறது.

தசாக்ஞை எந்த தீமைகள் பாவங்களாகின்றன என்பதை போதிக்கின்றன.

53. திருடுகிறதும், விபசாரம் செய்வதும், கொலை செய்வதும், பொய் சாட்சி சொல்வதும், தீமை என்று உலகம் முழுதிலும் எந்த தேசத்தாருக்கு தெரியாது? தேசத்தார்கள் இவ்விஷயங்கள் தெரியாமலும், இவ்வித தீமைகளை சட்டங்கள் மூலமாய் தடுக்காமலுமிருந்தால், அவர்கள் முடிவு பெற்றிருப்பார்கள்; ஏனென்றால், இந்த சட்டங்களில்லாத, கூட்டமாவது, குடியரசாவது ராஜ்யமாவது நாசமடையும். இஸ்ரவேல் தேசத்தார் இவைகள் தீமையானவையென்று தெரியாதபடி, மற்றவர்களைவிட அவ்வளவு மந்த புத்தியுள்ளவர்களென்று யார் நினைப்பார்கள்? ஆகையினால், உலக முழுதும் சமஸ்தமாய் நன்றாய் தெரிந்த இந்த சட்டங்கள் கர்த்தராலேயே சீனாய் மலையிலிருந்து அவ்வளவு அற்புதமாய் ஏன் பிரசித்தம் செய்யப்பட்டதென்று எவனும் ஆச்சரியப்படக்கூடும். ஆனால் கேளுங்கள் அந்த சட்டங்கள் தேசாசாரமானதும் நன்னெறிக்கடுத்ததுமான சட்டங்களாய் மட்டுமல்லாமல், ஞான சட்டங்களாகவும்கூட இருப்பதையும், அவைகளுக்கு விரோதமாக நடத்தல் ஊராளுக்கும் ஜன சங்கத்துக்கும் விரோதமாக பொல்லாங்கு

செய்வதுமட்டுமல்ல, கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்வதாகக்கூட இருப்பதையும் மனிதர்கள் தெரிந்துக் கொள்ள, அவைகள் இவ்விதமாக அற்புதமாய் பிரசித்தம் செய்யப்பட்டன. ஆகையால், அந்த சட்டங்கள் சுர்த்தராால் சீனாய் மலையிலிருந்து பிரசித்தம் அடைந்தபடியினால், மதத்துக்கு சம்மந்தப்பட்ட சட்டங்களாயின; ஏனென்றால், ஏகோவாகிய கடவுள் கட்டளையிடுகிற எதுவும், மத சம்மந்தமான விஷயமாக இருக்கவும், மனிதன் இரட்சிக்கப்படும் பொருட்டு அவருக்காகவும் மனிதனுக்காகவும் அது செய்யப்படவேண்டுமென்றும், அவர் கட்டளை இடுகிறாரென்று வெளிப்படையாய் இருக்கிறது.

54. இந்த சட்டங்கள் திருவசனத்தின் முதல் கனிகளாயிருந்து அதிலிருந்து இஸ்ரவேல் தேசத்தாரைக் கொண்டு கர்த்தர் ஏற்படுத்தும் தருணமாயிருந்த திருச்சபையின் முதல் கனிகளானபடியினாலும், கர்த்தர் மனிதனோடும், மனிதன் கர்த்தரோடும் ஐக்கியப்பட காரணமாயிருந்த சமயத்தின் எல்லா பொருள்களினிட கலப்பு கருத்து பொருள்களும், அதில் சுருக்கமான திரட்டாயிருந்தபடியினாலும், இந்த சட்டங்கள் வேறு ஒன்றும் அவ்வளவு பரிசுத்தமாய் இருக்கக்கூடாதபடி, அவ்வளவு பரிசுத்தமாயிருந்தது.

55. யெகோவா என்பவரே அதாவது கர்த்தர் தானே சீனாய் மலையின்மேல் தேவதூதர்களோடு அக்கினியிலிறங்கி, அங்கிருந்து வாய் மொழியாக அவைகளை பிரசித்தம் செய்தார் என்பதினாலும், பார்க்கவும் கேட்கவும் ஜனங்கள் மூன்று நாள் ஆயுத்தம் பண்ணினார்களென்பதினாலும்,

எவனுவது சமீபத்தில் வந்து இறந்து போகாதபடி அந்த மலைக்கு வேலி போடப்பட்டிருந்ததினுலும், மோசே தவிற, குருக்களும் மூத்தோரும் சமீபத்தில் வரக்கூடாதென்பதினுலும், அந்த சட்டங்கள் தேவனிட விறலினுல் இரண்டு சற்பலகைகளின்பேரில் எழுதப்பட்டது என்பதினுலும், மலையிலிருந்து மோசே, அவைகளை இரண்டாவது தடவை கீழே கொண்டுவந்தபோது அவரிட முகம் பிரகாசித்தது என்பதினுலும், அவைகள் பின்னிட்டு பெட்டியிலும், அந்த பெட்டி வாசஸ்தலத்தின் மிகவும் உள்ளான பாகத்தில் வைக்கப்பட்டது என்பதினுலும், அந்த பெட்டியின்பேரில் கிருபாசனமும், அதின்பேரில் பொன்னினுல் செய்த கேருபீன்களும் வைக்கப்பட்டது என்பதினுலும், அவர்கள சபைக்கு இது மகா பரிசுத்தமானதென்று, மகா பரிசுத்தம் என்று பெயரிடப்பட்டதென்பதினுலும், இந்த மகா பரிசுத்தமானது உள் இருந்த திரைச்சீலைக்கு வெளியே, பரமண்டலத்தினிடவும் சபையினிடவும், பரிசுத்த பொருள்களை சாயல் காட்டிய பொருள்களாகிய பொன்னினுல் செய்த ஏழு விளக்கு தண்டுகளுடைய குத்து விளக்கு, பொன்னினுல் செய்த தூப பீடம், சமுகத்தப்ப மிருந்த பொன் தகட்டினுல் மூடப்பட்ட மேசை, சுற்றிலும் இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிகப்பு நூலாலும் செய்யப்பட்ட திரைகளுடன், ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது என்பதினுலும், அவைகள் மகா பரிசுத்தமானதென்று காணப்படும். முழு வாசஸ்தலத்தின் பரிசுத்தமும் பெட்டியிலிருந்த நிருமானத்தைத் தவிர வேறு வழியில்லை. பெட்டியிலிருந்த நிருமாணங்களினுல், வாசஸ்தலத்திற்கு உண்டான பரிசுத்தத்தின் பொருட்டு, இஸ்ரவேல் தேசத்து எல்லா

ஜனங்களும், உத்திரவுபடி, அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தின் பிரகாரம் தங்கள் கூடாரங்களை போட்டு அதைச் சுற்றிலும் பாளைய மிரங்கி அதன்படியே பிரயாணப்பட்டு போனார்கள்; பிறகு அதன்மேல் பகலில் மேகமும், இரவில் அக்கினி தோற்றமும் இருந்தன. அந்த சட்டத்தின் பரிசுத்தத்திற்காகவும், அதில் கர்த்தரிருந்ததற்காகவும், கிருபாசனத்துக்குமேல் கெருபீன்களுக்கு மத்தியில் கர்த்தர் மோசேவுடன் பேசினார்; அந்த பெட்டிக்கு, "ஏகோவா அங்கே" என்று பெயரிடப்பட்டது. மேலும் ஆரோன் திரைக்குள்ளே, பலிகளோடும் தூபத்தோடுமல்லாமல், பிரவேசிப்பது சட்டத்துக்கு விரோதமாயிருந்தது. அந்த சட்டமானது சபையின் பரிசுத்தமாகவே இருந்தபடியினால், அந்த பெட்டியானது தாவீதினால் தன் நகரத்துக்கு கொண்டு போகப்பட்டது; பின்னிட்டு யெருசலேம் நகரத்தில் கோவில மத்தியில் வைக்கப்பட்டு, அதின் கர்ப்பக்கிரகமானது. யோர்தான் நதியின் ஜலம் பிரிக்கப்பட்டபோதும், மத்தியில் பெட்டி தங்கும்போது ஜனங்கள் தண்ணீரற்ற உலர்ந்த தரை வழியாய் நடந்து போனபோதும், ஏரிகோ வைச்சுற்றி அது கொண்டு போகப்பட்டதினால் அதின் சுவர்கள் விழுந்தபோதும், பெலிஸ்தியர் தேவனாகிய தாகோன் அதன் முன்பாக தரையிலே முகம் குப்புறவிழுந்து, பின்னிட்டு தலை உடலினின்று துண்டிக்கப்பட்டு, ஆலயத்தின் வாசல்படியில் கிடந்தபோதும், பெத்ஷிமேசின் மனுஷர் அதற்காக அநேக ஆயிரங்களாக அடிக்கப்பட்டபோதும், இன்னமும் இதர அற்புதங்கள் போலும், அந்த சட்டத்திலும் அதை சுற்றியும் கர்த்தரிருந்தபடியினால், அந்த சட்டமிருந்த பெட்டியினால் அற்புதங்கள்கூட செய்யப்

பட்டன. தசாக்ஞையின் தரும நியமங்களாகிய அவரிட பத்து வார்த்தைகளில் கர்த்தரிருந்தபடியினால்தானே இவை களெல்லா சாத்தியமாயின.

56. சமயத்தின் எல்லா பொருள்களின் கலப்பு கருத் துப் பொருளாக இருந்தபடியினால்கூட, அந்த சட்டத்தில் அவ்வளவு பெரிய சக்தியும், அவ்வளவு பெரிய பரிசுத்தமும் இருந்தது; அது இரண்டு பலகைகளை நிரப்பு இருந்தது. அவைகளில் ஒன்றில் கடவுள் பக்கம சேர்ந்த எல்லா மிருந் தது, மற்றொன்றில் மனிதன் பக்கத்தில் சேர்ந்த கலப்பு கருத்துள்ள எல்லாமிருந்தது. ஆகையால் அந்த சட்டத் தின் தரும நியமங்கள் பத்து வார்த்தைகளென்று கூறப் படுகின்றன; பத்து என்கிற எண், எல்லாம் என்று அருத் தம் கொள்ளுகிறபடியினால், அவைகள் அம்மாதிரி சொல்லப் பட்டது. ஆனால் அந்த சட்டமானது, சமயத்தின எல்லா வற்றின் கலப்பு கருத்துப் பொருளாகிறது எப்படி என்று பின் தொடரும் பிரிவில் காணப்படும்.

57. அந்த சட்டத்தின் மூலமாக கர்த்தர் மனித னோடும், மனிதன் கர்த்தரோடும் ஐக்கியப்படுகிறபடியினால், அதற்கு உடன்படிக்கை என்றும், சாட்சியம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அது சேர்க்கிறபடியினால், உடன்படிக்கை என்றும், அது சாட்சியிடுகிறபடியால் சாட்சிய மெனவும் சொல்லப்பட்டன; உடன் படிக்கை என்பது சேர்க்கை என்றும், சாட்சியம் என்பது அதற்கு சாட்சியிடுதல் என்று அருத்தம் கொள்ளுகின்றது. இந்த காரணத்தினால்தான், இரண்டு மேசைகள், ஒன்று கர்த்த ருக்கும், மற்ற ஒன்று மனிதருக்கும் இருந்தன. கடவுள்

ஐக்கியத்தை விளைவிக்கிறார். ஆனால் தன் பலகையின்பேரில் எழுதியிருக்கிறவைகளை மனிதன் செய்யும்போது மாத்திரம் அப்படி செய்கிறார். கர்த்தரானவர் இடைவிடாமல் இருந்து சேட்டித்து, பிரவேசிக்க விரும்புகிறார், ஆனால் கடவுளிடமிருந்து தானடைந்த சுதந்திரத்தின் பயிற்சியினால் மனிதன்தான் திறக்கவேண்டியது; அவர் சொல்லுகிறதாவது: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைகேட்டு, கதவை திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம் பண்ணுவேன், அவனும் என்னுடன் போஜனம் பண்ணுவான்". (வெளி III. 20).

58 மனிதனுக்காக ஏற்பட்ட மற்ற பலகையில் இந்த அல்லது அந்த நன்மையை மனிதன் செய்யவேண்டுமென்று சொல்லப்படவில்லை; ஆனால் கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பிறனுக்கு விரோதமாய் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக, பிறனுடைய பொருளை இச்சியாதிருப்பாயாக, இவைபோல் இந்த அல்லது அந்த தீமையை அவன் செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம், தன்னாலேயே எந்த நன்மையும் மனிதன் செய்ய முடியாது என்பது தான்; ஆனால் அவன் தீமைகள் செய்யாதபோது, தன்னாலேயேயல்லாமல் கர்த்தரிடமிருந்து அவன் நன்மை செய்கிறான். கர்த்தரிட சக்தியால் மனிதன் அதை வேண்டிக்கொண்டால், தன்னாலானபடி தீமைகளை நீக்க சக்தியுள்ளவனாயிருக்கிறானென்பது பின் தொடரும் பக்கங்களில் அறியலாம்.

59 இந்த நியாய பிரமாணத்தின் பிரசித்தம், பரிசுத்தம், வல்லமைகளைப்பற்றி மேலே (லக்கம் 55ல்) கூறியவைகள் திருவசனத்தில் பின் தொடரும் வாக்கியங்களில் காணலாம்:—

யேகோவா சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கினாரென்பதும், அந்த மலையானது அப்பொழுது புகைகாடானதும், அதிர்ந்ததும்; இடி முழக்கங்களும், மின்னல்களும், கார்மேகமும், எக்காள சத்தமும் இருந்தன என்பதும் (யாத்தி. XIX. 16, 18; உபாக. IV. 11; V. 22—26).

யெகோவா இறங்குவதற்து முன், மூன்று நாளைக்கு ஜனங்கள் ஆயுத்தம் பண்ணினதற்கும், சுத்தி கரித்ததற்கும் (யாத்தி. XIX. 10, 11, 15)

சாகாதிருக்க, யாரும் அதின் அடிவாரத்தில் வாராதபடி மலையானது வேலி போடப்பட்டது என்பதும்; மேலும் மோசே தவிர, குருக்கள்கூட சமீபத்தில் வரக்கூடாது என்பதும். (யாத்தி. XIX. 12, 13, 20—23; XXIV 1, 2).

சீனாய் மலையிலிருந்து பிரசித்தம் செய்த நியாய பிரமாணம் (யாத்தி. XX. 2—17; உபாக: V. 6, 21), நியாய பிரமாணம், தேவனிட விறலினால் இரண்டு கற்பலகைகளின்பேரில் எழுதப்பட்டதென்பது. (யாத்தி. XXXI. 18; XXXII. 15, 16; உபாக. IX—10).

அவர் இரண்டாவது சமயம் மலையிலிருந்து அந்த பலகைகளை எடுத்துக்கொண்டு இறங்கியபோது மோசேவின் முகம் பிரகாசித்ததை (யாத்தி. XXXIV. 29—35).

அந்தப் பலகைகள் பெட்டியில் வைக்கப்பட்டது என்பது (யாத்தி. XXV. 16; XL. 20; உபாக X. 5, I. ராஜா VIII. 9).

அந்த பெட்டியின்பேரில் கிருபாசனமும், இதன்மேல் பொன்னினால் செய்த கேருபீன்கள் வைக்கப்பட்டன என்பதற்கும் (யாத்தி. XXV. 17—21).

கிருபாசனத்துடனும், கேருபீன்களுடனும் அந்த பெட்டியானது வாசஸ்தலத்தின் மிகவும் உள்ளான பாகத்தில் வைக்கப்பட்டது என்பதற்கும், பொன்னினால் செய்த குத்து விளக்கும், பொன்னினால் செய்த தூப பீடமும், சமுகத்தப்பங்கள் வைக்கப்பட்டிருந்த பொன் தகட்டால் மூடப்பட்ட மேஜையும் அதின் வெளியே வைக்கப்பட்டதென்பதற்கும், இள நீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும், செய்யப்பட்ட பத்து திரைகள் அதின் மிகவும் வெளியான பாகமாயிருந்ததென்பதற்கும், (யாத். XXV—1 முதல் கடைசி வரை, XXVI—1 முதல் கடைசி வரையில்; XL. 17. 28).

அந்த சாட்சி பெட்டி இருந்த இடம் மகா பரிசுத்த ஸ்தலம் என்பதையும் (யாத்தி. XXVI. 33).

இஸ்ரவேல் புத்திரர் எல்லாம் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தின் பிரகாரம், தங்கள் கூடாரங்களை போட்டு, ஆசரிப்புக் கூடாரத்துக்கு எதிராக சுற்றிலும் பாளய மிறங்கி, அதன்படியே பிரயாணப்பட்டு போனார்களென்பதும் (எண்ணா. II, 1 முதல் கடைசி வரையில்).

வாசஸ்தலத்தின்மேல் பகலில் மேகமும், இரவில் அக்கினி தோற்றமும், அதை அப்பொழுது மூடிக்கொண்டிருந்தது என்பதும். (யாத்தி. XL. 38; எண்ணு IX, 15, 16, முடிவு வரையில்; XIV—14; உபாக. 1. 33).

கெருபீன்களுக்கு மத்தியில் பெட்டிக்குமேல் கர்த்தர் மோசேவுடன் பேசினார் என்பதும் (யாத். XXV. 22; எண்ணு. VII. 89).

பெட்டியானது புறப்படும்போது, "கர்த்தாவே, எழுந்தருளும்" என்றும், அது தங்கும்போது, "கர்த்தாவே, திரும்புவீராக" என்று மோசே சொன்னபடியினால் அதற்குள்ளிருக்கும் நியாய பிரமாணத்தை அனுசரித்து. அந்த பெட்டியானது "கர்த்தர்—அங்கே" என்று சொல்லப்பட்டது. (எண்ணு. X. 35. 36; மேலும், 2 சாமு. VI. 2; சங்கீதம் CXXXII, 7, 8).

அந்த நியாய பிரமாணத்தின் பரிசுத்தத்திற்காக பலிகளோடும், தூபத்தோடு மல்லாமல் திரைக்குள் ஆரோன் பிரவேசிப்பது சட்ட விரோதமென்பதும் (லேவி. XVI. 2—14, பின் தொடரும் வசனங்களும்).

பெட்டியானது தாவிதினால், பலிகளோடும் சந்தோஷமான ஆரவாரத்தோடும் தாவிதின் நகரத்துக்கு கொண்டு போகப்பட்டது. (2 சாமு VI. 1—19; அப்பொழுது அதை தொட்டபடியினால் ஊசா இறந்தான். (வாக்கியங்கள் 6, 7, அதே அத்தியாயம்).

எருசலேம் நகரத்தின் தேவாலயத்தின் மத்தியில் பெட்டி வைக்கப்பட்டு, அங்கே அது சந்நிதியானது என்

பதும் (1, இராஜா. VI 19ம் பின் தொடரும் வாக்கியங்களும்; VIII. 3—9).

பெட்டியிலிருந்த சட்டத்திலிருக்கும் கர்த்தரின் சந்நிதானத்தாலும் வல்லமையாலும் யோர்தான் நதியின் ஜலம் பிரிக்கப்பட்டது, என்பதும், மத்தியில் பெட்டி தங்கும் போது ஜனங்கள் தண்ணீரற்ற உலர்ந்த தரை வழியாய் நடந்து போனார்கள் என்பதும் (யோசு. III. 1—17; IV. 5—20).

அந்த பெட்டியானது எரிகோவைச் சுற்றிக்கொண்டு போகப்பட்டபடியினால் அந்நகரின் சுவர்கள் விழுந்து விட்டன என்பது (யோசு. VI. 1—20).

பெலிஸ்தர் தேவனாகிய தாகோன் கர்த்தரிட பெட்டிக்கு முன்பாக தரையிலே முகம் குப்புறவிழுந்து கிடந்தான் என்பதும், பின்னிட்டு தலை உடலினின்று துண்டிக்கப்பட்டு ஆலயத்தின் வாசற்படியண்டை கிடந்தது என்பதும் (1 சாமு V. 3. 4).

அந்த கர்த்தரிட பெட்டிக்காக, பெத்ஷிமேசின் மனுஷர், அனேக ஆயிரங்களாக அடிக்கப்பட்டார்கள் என்பதும் (1 சாமு VI. 19).

60. நியாய பிரமாணம் எழுதப்பட்டிருந்த கற்பலகைகள், உடன்படிக்கை பலகைகள் என்று கூறப்பட்டது என்பதும், அந்தப் பெட்டி, அவைகளினால், உடன்படிக்கை பெட்டி என்று கூறப்பட்டது என்பதும், நியாயப் பிரமாணமே அதாவது உடன்படிக்கை என்பது (எண். X. 33, உபாக. IV, 13, 23, V. 2, 3, IX. 9, யோசு. III. 11,

1 இராஜா VIII. 21, வெளி. XI. 19 முதலியவைகளிலும் இன்னும் அநேக இடங்களில்) போதிக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை உடன்படிக்கை என்றதற்கு காரணம், உடன் படிக்கையானது சேர்க்கையைக் காண்பிப்பதாலாகும்; ஆகையால் கர்த்தரைப்பற்றி, "அவர் ஜனங்களுக்கு உடன் படிக்கைக்காக இருப்பார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது; (ஏசா — XLII—6; XLIX. 8); அவர் "உடன் படிக்கை தூதன்" என்று கூறப்பட்டுள்ளது. (மல், III—1); அவரிட இரத்தம் "உடன்படிக்கை இரத்தம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (மத்தே—XXVI. 28; சகரி—IX—11. யாத்தி. XXIV. 4, 10). அந்த காரணத்தினாலேயே, திருவசனம், "பழைய உடன்படிக்கையென்றும் புது உடன்படிகை என்றும்" கூறப்பட்டுள்ளது. மேலும் உடன்படிக்கைகள், அன்பிற்காகவும், சிநேகத்திற்காகவும், ஐக்கியத்திற்காகவும், இம்மாதிரியாக சேர்க்கைக்காகவும் செய்யப்படுகின்றன.

61. அந்த நியாய பிரமாணத்தின் கற்பனைகள் "பத்து வார்த்தைகள் என்று கூறப்பட்டது. யாத். XXXIV, 28, உபா. IV, 13, X. 4, இவைகளிலிருந்து தெரிகிறது. பத்துக்கு அதிகமாயிருந்தபடியினாலும், பத்து என்பது எல்லாம் என்றும், வார்த்தைகள் என்பது உண்மைகள் என்றும் அருத்தம் கொடுக்கிறபடியினாலும் அவைகள் அவ்வாறு கூறப்படுகின்றன. பத்து என்கிற இலக்கமானது எல்லாமென்று அருத்தம் கொள்ளுகிறபடியினால் வாசஸ்தலத்துக்கு பத்து மூடு திரைகளிருந்தன (யாத். XXIV—1). ஆகையினால், கர்த்தர், ஒரு ராஜ்யத்தை அடையப்போகும் தருணத்தில், ஒரு மனிதன் பத்து ஊழி

யக்காரை கூப்பிட்டு, வியாபாரம் செய்ய பத்து ராத்தல் திரவியம் கொடுத்ததாக சொன்னார் (லூக். XIX—13); ஆகையினால் கர்த்தரானவர் பரலோக ராஜ்யத்தை பத்து கன்னிகைகளுக்கு ஒப்பிட்டார் (மத்தே. XXV. 1). அதே காரணத்தினால், வலு சர்ப்பமானது பத்து கொம்புகளையும் அதின் கொம்புகளின்பேரில், பத்து மூடிகளையும் உடைத்தாயிருந்ததாக சொல்லி காட்டப்பட்டிருக்கிறது (வெளி. XII—3); அப்படியே கடலிலிருந்து புறப்பட்ட மிருகமும் (வெளி. XIII 1); இன்னொரு மிருகம்கூட (வெளி. XVII. 3, 7); தானியலில் சொல்லிய மிருகமும் கூட (VII. 7, 20, 24). லேவி. XXVI. 26, சகரி. VIII. 23 விலும் வேறு இடத்திலும், பத்து என்பதினால் அதே அருத்தம் கொள்ளுகிறது. எல்லாரிடமுமிருந்து ஏதாகிலும் கொஞ்சம் என்கிற அருத்தம் கொள்ளுகிற தசபாகம் இதிலிருந்து வந்தது.

கொலைகள், விபசாரங்கள், களவுகள் எல்லாவித பொய் சாட்சியம், அவைகளைச் சேர்ந்த இச்சைகளும், பாவங்களாக நீக்கவேண்டிய தீமைகளாயிருக்கின்றன.

62 சீனாய் மலையின் சட்டமானது இரண்டு மேசைகள்பேரில் எழுதப்பட்டதென்றும், முதல் மேசையானது கடவுளுக்கு சம்மந்தப்பட்டவைகளையும், இரண்டாவது மனிதனுக்கு சம்மந்தப்பட்டவைகளையும் அடக்கிக் கொண்டிருக்கிறது என்று தெரிந்திருக்கிறது. முதல் மேசையானது கடவுளைக்குறித்த எல்லாவற்றையும், இரண்டாவது மனிதனைக் குறித்த எல்லாவற்றையும், அடக்கிக்கொண்டிருக்கிறது என்பது சப்தார்த்தத்தில் காணவில்லை; என்

ருலும் அதில் எல்லாமிருக்கிறது; ஆகையினால்கூட, எல்லா உண்மைகளையும் கலப்பு கருத்தாக அர்த்தம் கொள்ளுகிற அவைகள் பத்து வார்த்தைகள் என்று கூறப்படுகிறது. (இதற்குமேலே இல 61 பார்க்க). ஆனால் எல்லா பொருள்களும் அதனால் எப்படியிருக்கிறதென்று, சில வார்த்தைகளினால் விளக்கமுடியாது; ஆயினும் பரிசுத்த வேதத்தை குறித்த சித்தாந்தத்தில் (இல. 67 பார்க்க), உதாரணமாய் சொல்லியதிலிருந்து அதை கிரகித்து கொள்ளலாம், அதினால்தான் கொலைகள், விபசாரங்கள், களவுகள் எல்லாவித பொய் சாட்சியம் என்று சொன்னது.

63. எவனும் சட்டப்படி செய்ய முடியாதென்று ஓர் சமய போதனை பரவியிருக்கிறது; அந்த சட்டம் என்பது கொல்லாமையும், விபசாரம் செய்யாமையும், களவு செய்யாமையும், பொய் சாட்சி சொல்லாமையுமாகும். ஒவ்வொரு நாகரீகமுள்ள மனிதனும், நன்னெறியில் செல்பவனும், தன்னிட திருத்தமானதும், குணசம்பத்து முள்ளதுமான வாழ்வினால் சட்டத்தின் இந்த தரும நியமங்களையும் செய்யமுடியும்; ஆனால் பரமார்த்த வாழ்வினால் அவன் அவைகளை செய்ய முடியுமென்பதை இந்த சமய போதனை தள்ளுகிறது. இதனால், இந்த தீமைகளை செய்யாமல் அவன் விளக்குதல் இந்த உலகத்தில் தண்டனைகளையும் நஷ்டங்களையும் நீக்க மாத்திரம் உண்டென்றும் அவன் இவ்வுலகத்தை விட்ட பிறகு தண்டனைகளையும் நஷ்டங்களையும் நீக்கவல்லவென்று இதனால் தொடருகிறது. இதனால்தான் மேல் கூறிய சமய போதனையை ஒற்றுக்கொண்டவன் இந்த தீமைகள் கடவுள் முன்னிலையில் நியாயமானதென்றும், ஆனால் உலகத்தாருக்கு அநீதி என்றும் நினைக்கிறான். இந்த

அவனிட சமய போதனையிலிருந்து வந்த இந்த எண்ணத்தி னால், அந்த மனிதனானவன், இந்த எல்லா தீமைகளுக்கும் சம்மந்தப்பட்ட இச்சைகளிலிருக்கிறான்; உலகத்திற்காக அவைகளை செய்யாமலிருக்கிறான். ஆகையால் அவ்வித மான மனிதன் கொலைகளையும் விபசாரங்களையும், களவு களையும், பொய் சாட்சியத்தையும், செய்யாமலிருந்தாலும், இறந்த பிறகு அவைகளை செய்ய ஆசைப்படுகிறான்; உல கத்தில் உடைத்தாயிருந்த புறதோற்றம் அவனிடத்திலிருந்து நீக்கப்பட்டபோது, அவன் அவைகளை கூட செய்கிறான். இறந்த பிறகு ஒவ்வொரு இச்சையும் அந்த மனிதனோடு இருக்கிறது. இதனால்தான் அவ்வித மனிதர்கள் நரகத் தோடு ஏக சித்தமாய் நடக்கிறார்கள். அவர்கள் நரகத்தி லுள்ளவர்கள் கதியை அடையவேண்டியவர்களாயுமிருக்கி றார்கள். ஆனால் கடவுளுக்கு விரோதமாய் இருக்கிறபடி யினால், கொல்லவும், விபசாரம் செய்யவும், களவு செய்யவும், பொய் சாட்சி சொல்லவும், இச்சிக்காதவர்களுக்கு வேறு பாக்கியம் கார்த்திருக்கிறது. இந்த தீமைகளுக்கு விரோத மாய் கொஞ்சம் போராடிய பிறகு அவைகள் தாமே, நரக சம்மந்தமும் பிசாசு சம்மந்தமுமான பாவங்களென்று நினை த்துக்கொண்டு, அவர்கள் அதை மனங்கொள்கிறதுமில்லை, அதினால் அவைகளை செய்ய ஆசைபடுகிறதுமில்லை. உலகத் துக்கு அவர்கள் காண்பித்த புறத்தோற்றம் அவர்களிட மிருந்து, இறந்தபிறகு, நீக்கப்பட்டபோது அவர்கள் சுவர் க்க லோகத்துடன் ஏக சித்தமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கடவுளிலிருப்பதால், சுவர்க்கத்துக்கு வருகிறார்கள்.

64. ஒவ்வொரு சமயத்திலும், மனம் திரும்பவும், பாவங்களை விட்டு விடவும், ஒவ்வொரு மனிதனும் தன்னைத்

தானே பரிசோதனை செய்யவேண்டுமென்றும், அவன் அப்படி செய்யாவிட்டால், நரகாக்கினை தண்டனைக்கு அருகனாயிருக்கிறானென்றும், சாதாரண மூதுரையாயிருக்கிறது மேலே (இல. 4—8). சொல்லியதில், இது ஒவ்வொரு சமயத்தில் சாதாரணமானதென்று, ஏற்படுகிறது. முழு கிருஸ்தவ உலகத்திலும் பத்து கற்பனைகளை போதித்து, அதனால் பிள்ளைகளை கிருஸ்து மதத்தில் பிரவேசிக்கச் செய்வதும்கூட சாதாரணம்; அது எல்லா குழந்தைகள் சிறுவர்கள் கைகளிலிருக்கிறது. அவர்கள் பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், இந்த தீமைகளை செய்தல் கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்தலென்று அவர்களுக்கு சொல்லுகிறார்கள். இதுவுமல்லாமல், அவர்கள் குழந்தைகளோடு பேசுங்காலத்தில், அவர்களுக்கு வேறு விதமாய் ஒன்றும் தெரியாது அதே பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், பருவம் வந்த காலத்தில் குழந்தைகளும்கூட தாங்கள் அந்த சட்டத்துக்கு உடன்பட்டவர்கள் அல்லவென்றும், அந்த சட்டம் கோருகிறவைகளை தாங்கள் செய்யமுடியாதென்றும், நினைப்பதைப் பார்த்து யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்? அவர்கள் இம்மாதிரி நினைக்க ஏன் கற்றுக் கொள்ளுகிறார்களென்பதற்கு, அவர்கள் தீமைகளை இச்சிக்கிறார்கள் என்பதையும், அதினால் அவைகளுக்கு அநுகூலமான பொய்களையும் நேசிக்கிறார்களென்பதை விட வேறு ஏதாவது காரணம் இருக்கக்கூடுமா? ஆகையினால், பத்து கற்பனைகளின் தரும நியமங்களை, மதத்தின் தரும நியமங்களாக செய்யாதவர்கள் இவர்கள்தான். அவர்களேதான் சமயம் ஒன்றுமில்லாமல் ஜீவிக்கிறார்களென்பது பக்தி போதத்தில் காணக்கூடும்.

65. உலக முழுவதும், சமய பற்றுள்ள எல்லா தேசத்தாருள்ளும், பத்து கற்பனைகளில் இருப்பவைகள் போல், தரும நியமங்களுண்டு; சமயப்பற்றினால், அவைகளின்படி வாழ்கிறவர்கள், இரட்சிக்கப் படுகிறார்கள்; சமயப்பற்றுடன் அவைகளின்படி வாழாதவர்கள் நரக தண்டனைக்குள்ளாகிறார்கள். சமயப்பற்றினால் அவைகளின்படி வாழ்கிறவர்கள், இறந்த பிறகு தேவர்களால் கற்பிக்கப்பட்டு, உண்மைகளை அடைந்து, கர்த்தரை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அதற்கு காரணம், அவர்கள் தீமைகளை பாவங்களாக நீக்கி, அதினால் நன்மையில் இருக்கிறார்களென்பதே; நன்மையானது உண்மையை நேசிக்கிறது, மேலே (இல. 32—41) காண்பித்தபடி, அன்பின் ஆசையினால் அதை அடைகிறது. யூதர்களுக்கு கர்த்தர் சொன்ன வார்த்தைகளுக்கு இதுதான் அருத்தம். "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்கு கொடுக்கப்படும்" (மத்தே. XXI. 43); இந்த வார்த்தைகளாலும்கூட திராட்சத் தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்த கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற காலங்களில் கனிகளைக் கொடுக்கத் தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்ச தோட்டத்தை குத்தகையாக கொடுப்பார்" (மத்தே. XXI. 40, 41); இவைகளாலும்கூட: "அநேகர் கிழக்கிலும், மேற்கிலும்; வடக்கிலும், தெற்கிலுமிருந்துவந்து, பரலோக ராஜ்யத்தில் .....பந்தியிலிருப்பார்கள்: ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்" (மத்தே. VIII, 11, 12; லூக். XIII. 29).

66. நாம் மார்க்கு எழுதிய சுவிசேஷத்தில் வாசிக்கிறதாவது: "ஒரு பணக்காரன் இயேசு விடம் வந்து நித்திய ஜீவனைச் சுதந்தரித்து கொள்ளும்படி நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். அதற்கு இயேசு, விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய் சாட்சியாயில்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயாரையும் கனம் பண்ணுவாயாக. என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். அதற்கு அவன்: இவைகளை எல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவனைப்பார்த்து, அவனிடத்தில் அன்பு கூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளை எல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னை பின்பற்றி வா வென்றார்" (X. 17—22). தான் சிறு வயது முதல் கற்பனைகளை கைக்கொண்டிருப்பதாக அவன் சொன்னபடியினால், இயேசு அவன்பேரில் அன்பு கூர்ந்தார் என்று சொல்லப்பட்டது. அவன் தன் இருதயத்தை செல்வத்தினின்று நீக்காததும், அவன் மோகங்களை நீக்க பிரயத்தனப்படாததும், இன்னும் கர்த்தரை அவன் கடவுளாக ஏற்றுக்கொள்ளாததுமாகிய மூன்று குறைகள் அவனுக்கு இருந்தபடியினால் கர்த்தரானவர், அவன் தன் இருதயத்தை செல்வத்தினின்று நீக்க வேண்டுமென்று அருத்தம் கொள்ளுகிற அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்கவேண்டுமென்றும், மோகங்களோடு அவன் மன்றாடவேண்டுமென்று அருத்தம் கொள்ளு

கிற, சிலுவையை எடுக்கவேண்டுமென்றும், அவன் கர்த்தரைக் கடவுளாக ஒத்துக்கொள்ளவேண்டுமென்று அருத்தம் கொள்ளுகிற, தன்னை பின்பற்றி வரவேண்டுமென்றும், கர்த்தர் சொன்னார். அவர் தாம் சொல்லிய மற்ற வார்த்தைகளைப்போல் இந்த வார்த்தைகளையும் தத்துவார்த்தத்தில் பேசினார். (பரிசுத்தவேத போதம், இலக்கம் 17 பார்க்க). எவனாலும், கர்த்தரை ஏற்றுக்கொண்டு, அவரை அணுகினால் ஒழிய, மேலும் தீமைகளோடு அவைகளை நீக்க பிரயாசைப்பட்டு, அதினால் மோகங்களை நீக்கினாலும் ஒழிய, தீமைகளை பாவங்களாக நீக்க முடியாது. ஆனால் இந்த விஷயங்களை குறித்து தீமைகளுக்கு விரோதமான சண்டைகளைக் குறித்த பிரிவில் அதிகம் கூறப்படும்.

எவனொருவன் எல்லாவித கொடிகளையும் பாவங்களாக எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவ்வளவு தூரம் அயலானிடத்தில் அவனுக்கு அன்பு இருக்கிறது.

67. எல்லாவித கொலைகள் என்பதினால், கொலையை உண்டாக்குகிற எல்லாவித பகையும், அருவருப்பும், சலஞ்சாதித்தலும், அருத்தம் கொள்ளுகிறது; சாம்பலுக்கு கீழேயிருக்கும் விறகில் நெருப்புபோல், கொலையானது இவைகளில் மறைந்து கிடக்கிறது நரக நெருப்பு வேறொன்றுமல்ல. ஆகையினால் அருவருப்பால் நெருப்பு மூட்டப்பட்டு, சலஞ்சாதித்தலால் தகிக்கப்படுகிறது என்கிற பேச்சுகள் அங்கிருந்து வருகின்றன. இவைகள் தூல அருத்தத்தில் கொலைகளாகின்றன ஆனால் ஞான அர்த்தத்தில்; கொலைகள் என்பதினால் மனிதர்களிட ஆன்மாக்களை கொன்று அழிக்கும் எல்லா விதங்களையும் கருத்து கொள்ளுகிறது;

அவைகள் பலவிதமாயும் பல தன்மையானதுமாயிருக்கின்றன. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலான அருத்தத்தில், கொலை என்பது கர்த்தரை அருவருப்பில் வைத்தலாகும். எவனொருவன் உலகத்தில் ஒரு மனிதனிட சரீரத்தை கொலை செய்ய விரும்புகிறானோ அவன், அவனிட ஆன்மாவையும் கூட கொலைசெய்ய விரும்புகிறபடியினாலும், கர்த்தர் பேரில் கோபத்தினால் எரிந்து, அவர் நாமத்தை அழிக்க அவன் விரும்புகிறபடியினால், கர்த்தரையும் கொலை செய்ய விரும்புகிறபடியினாலும், இம் மூன்றுவித கொலைகளும் ஒன்றாய் ஒட்டிக் கொள்ளுகின்றன.

68. கொலைகளின் இந்த வகைகள், மனிதனில் பிறப்பு முதல் அந்தரங்கத்தில் மறைந்து கிடக்கின்றன; ஆனால் உலகத்தில் மனிதர்கள் மத்தியில் தரிக்கவேண்டிய மரியாதை சன்மார்க்கம் இவைகளின் திரைகளினால் அவைகளை மூட சிறு பிராயத்திலிருந்து அவன் கற்றுக்கொள்ளுகிறான். அவன் எவ்வளவு தூரம் கீர்த்தியையாவது லாபத்தையாவது இச்சிக்கிறானோ. அவ்வளவு தூரம் அவைகள் வெளி வராதபடி அவன் விழிப்புள்ளவனாயிருக்கிறான். இது அவனிட புறத்தோற்றமாகிறது. அவைகள் அவனிட அகமாகின்றது. தான் மட்டும் பார்த்தால் மனிதன் இப்பேர்ப்பட்டவனாயிருக்கிறான். இறக்கும்கால் சரீரத்துடன் புறம்பானதை போட்டுவிட்டு, உள்ளிருப்பதை வைத்துக்கொள்வதால், அவன் சீர்திருத்தப்பட்டாலொழிய எவ்விதமான பிசாசாக இருப்பானென்பது வெளிப்படையாயிருக்கிறது.

69. முன் கூறியபடி, பிறப்பு முதல், மனிதனில் அந்தரங்கமாய் மேற்கூறிய கொலைகளின் வகைகளும், அதே

காலத்தில், எல்லாவித களவுகளும், எல்லாவித பொய் சாட்சியங்களும், கீழே கூறப்படும் அவைகளின் மோகங்களும் மறைந்து கிடப்பதால், சீர்திருத்தத்திற்கு கர்த்தர் வழிகள் ஏற்படுத்தாவிட்டால், மனிதன் முடிவற்ற காலம் வரையில் நசிக்கப்படுவான். கர்த்தர் சித்தப்படுத்தியிருக்கிற சீர்திருத்த வழி வகைகள் இவைகளாம் :— மனிதனானவன் கேவல அஞ்ஞானத்தில் பிறந்திருக்கிறானென்பதும், குழந்தையாயிருக்கும்போது, புறம்பான மனப் புனித நிலையிலும் கொஞ்சம் பொருத்து புறம்பான அன்பின் நிலையிலும், அதன் பிறகு புறம்பான சினேகிதத்திலும், வைக்கப்பட்டிருக்கிறானென்பதும், ஆனால் தன் சொந்த புத்தியிலிருந்து சிந்தனைக்கு வரும்போது, விவேகத்தை அனுசரித்து நடப்பதால் கொஞ்சம் சுவேட்சையில் வைக்கப்பட்டிருக்கிறானென்பதும் தான். இதுதான் மேலே (இல. 19) விவரித்த நிலைமை. பின் வருவதற்காக, இந்த வருணனையை இங்கே திரும்ப சொல்லப்படவேண்டும்.

"மனிதன் உலகத்திலிருக்கும்போது, நரகத்துக்கும் சுவர்க்கத்துக்கும் மத்தியிலிருக்கிறான்; கீழே நரகமிருக்கிறது, மேலே சுவர்க்கமிருக்கிறது: அக்காலத்தில், நரகத்துக்காவது சுவர்க்கத்துக்காவது தானே திரும்ப சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கிறான்; அவன் நரகத்துக்கு தானே திரும்பினால், சுவர்க்கத்திலிருந்து தானே திரும்பிக்கொள்ளுகிறான்; அவன் சுவர்க்கத்துக்கு தானே திரும்பினால், நரகத்திலிருந்து தானே திரும்பிக்கொள்ளுகிறான். அதே மாதிரியாக, மனிதன் உலகத்திலிருக்கும்போது, கடவுளுக்கும் பிசாசுக்கும் மத்தியில் நிற்கிறான். இவைகளில் யாதாவது ஒன்துக்கு தானே திரும்ப சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்

கிறான்; அவன் பிசாசு பக்கம் தானே திரும்பினால், கடவுளை விட்டு தானே திரும்பிக்கொள்ளுகிறான்; ஆனால், அவன் கடவுள் பக்கம் தானே திரும்பினால், பிசாசை விட்டு தானே திரும்பிக்கொள்ளுகிறான். அல்லது அதே மாதிரியாக, மனிதன்தான் உலகத்திலிருக்கும்போது, அவன் நன்மைக்கும் தீமைக்கும் மத்தியிலிருக்கிறான்; இவை இரண்டில் யாதாவது ஒன்றின் பக்கம் தானே திரும்பிக்கொள்ள சுவேச்சையில் வைக்கப்பட்டிருக்கிறான்; அவன் தீமை செய்ய விரும்பினால் நன்மையை விட்டு தானே திரும்பிக்கொள்ளுகிறான்; நன்மை செய்ய திரும்பினால் தீமையை விட்டு விலகிக்கொள்ளுகிறான்." இதுதான் மேற்கூறிய 19-வது இலக்கம் —அங்கே பின் வரும் இலக்கங்கள் 20 முதல் 22 வரையிலும் பார்க்கவும்.

70. நரகமும் சுவர்க்கமும் இருப்பது போலும், அல்லது பிசாசம் கர்த்தரும் இருப்பது போலும், நன்மையும் தீமையும் திட்டமாய் எதிரிடையானவைகளாயிருப்பதால், மனிதனானவன் ஒரு தீமையை பாவமாக நீக்கினால் தீமைக்கு எதிரிடையான நன்மைக்கு வருகிறான். கொலை என்பதால் அருத்தப்படுகிற தீமைக்கு எதிரிடையான நன்மை, அயலானிடத்து காண்பிக்கும் அன்பின் நன்மையாகும்.

71. இந்த நன்மையும் அந்த தீமையும் எதிரிடையானவைகளானபடியினால், பின் சொன்னது முன் சொன்னதால் நீக்கப்படுகிறது என்று தொடருகிறது. சுவர்க்கமும் நரகமும் ஒன்றாயிருக்க முடியாததுபோல் இரண்டு எதிரிடையானவைகள் ஒன்றாயிருக்கமுடியாது. அவைகள் ஒன்றாக இருக்க நேரிட்டால், வெதுவெதுப்பு இருக்கும். அதைப்

பற்றி வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் இம்மாதிரி எழுதப் பட்டிருக்கிறது: "நீ குளிருமல்ல, அனலுமல்ல என்று நான் அறிந்திருக்கிறேன். நீ குளிராகவாவது அனலாகவாவது இருந்தால் நலமாயிருக்கும்; இப்படி நீ குளிருமன்றி அனலுமன்றி, வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்" (III, 15, 16).

72. ஒரு மனிதன் கொலையின் தீமையில் இன்னும் இல்லாமல் அயலானிடத்து அன்பின் நன்மையிலிருந்தால் பிறகு, அவன் செய்வதெல்லாம் அந்த அன்பின் நன்மையாகும்; ஆதலால், அது நல்ல வேலையாயிருக்கிறது. அந்த நன்மையிலிருக்கும் ஒரு குருவானவன் ஆன்மாக்களை கடைதேற்றும் அன்பில் அவன் நடக்கிறபடியினால், அவன் போதித்து வழி காட்டும்போதெல்லாம், நல்ல வேலையை செய்கிறான். அந்த நன்மையிலுள்ள நியாயாதிபதி, தன் தேசத்திற்கும் சங்கத்திற்கும், தன் நகரத்தாருக்கும் கவலைப் படுகிற அன்பிலிருந்து அவன் நடப்பதால், அவன் தொடுத்து தீர்ப்பு சொல்லும்போதெல்லாம், ஒரு நற்கிரியை செய்கிறான். ஒரு வியாபாரியும் அம்மாதிரியே; அவன் அந்த நன்மையிலிருந்தால், அவனிட ஒவ்வொரு விருத்தாந்தமும், நல்ல வேலையாயிருக்கிறது; அதில் அயலானிடத்து அன்பு இருக்கிறது; அவனிட தேசமும், கூட்டமும், அவர் நகரத்தார்களும், அவனிட வேலைக்காரர்களும்கூட, தனதுடன் அவர்களிட க்ஷேமத்தை கோருகிற அயலாராகிறார்கள். அந்த நன்மையிலுள்ள ஒரு வேலையாலும்கூட, அதன் செல்வாக்கினால், அயலானிட நஷ்டம் தனதென்று, பயந்து தனக்குபோலவே மற்றவர்களுக்கு விசுவாசத்துடன் வேலை செய்கிறான். அவர்களிட கிருத்தியங்கள் நல்ல வேலைகளா

கிறதற்கு காரணம் மேலே (இல. 21) கூறிய பொது விதியை அனுசரித்து, எவனொருவன் தீமையை எவ்வளவு நீக்குகிறானோ அவ்வளவு நன்மை செய்கிறானென்பதுதான்; தீமையை பாவமாக நீக்குகிறவன், தன்னிடமிருந்தல்லாமல், கர்த்தரிடமிருந்து, நன்மையை செய்கிறான் (இல. 18—31). பகைகளாகவும், வெறுப்புகளாகவும், பழிவாங்குகைகளாகவும், இன்னும் அநேகமாகவும் இருக்கிற கொலையின் இந்த வகைகளை, பாவங்களாக நினைக்காதவனுடன் அது எதிரிடையாயிருக்கிறது; அவன் குருவானாலும், நியாயாதிபதியானாலும், வர்த்தகனானாலும், வேலைக்காரனானாலும் சரி, அவனிட ஒவ்வொரு வேலையும், தன்னிடத்தில் அந்தரங்கமாயிருக்கும் தீமையில் பங்கு கொள்ளுகிறபடியினால், அவன் செய்வதெல்லாம் நல்ல வேலையல்ல. அவனிட அகத்திலுள்ளது விளைவிக்கிறது; புறம்பானது நல்லதாயிருக்கலாம். ஆனால் அது தனக்கல்லாமல், பிறருக்கு மாத்திரம் தான் அப்படியிருக்கும்.

73. திருவசனத்தில் அநேக வாக்கியங்களில் அன்பின் நன்மையைப்பற்றி கர்த்தர் போதிக்கிறார்; அவர் மத்தேயுவில். அயலானுடன், சமாதானப்படுவது என்பதினால் அதை போதிக்கிறார். "நீ பலி பீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவு கூறுவாயாகில், அங்கே தானே. பலி பீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டு போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புறவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து. எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக் கொடா

மலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும் படியாக நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. பொருந்தா விட்டால், நீ ஒருகாசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்கு மட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்" (V. 23—26). உன்னிட சகோதரனோடு ஒப்புற வாகுதல், பகையையும், வெறுப்பையும், பழி வாங்குதலையும் நீக்குதலாகும்; அதை பாவமாக நீக்குதல், என்பது வெளிப்படையாயிருக்கிறது. மேலும், மத்தேயுவில் இதையும் கர்த்தர் போதிக்கிறார்; "மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்; இதுவே நியாய பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்" (VII. 12). இம்மாதிரியாக நாம் தீமை செய்யக்கூடாதென்பதை போதிக்கிறார். மற்ற இடங்களிலும் பலமுறையும் இதை போதிக்கிறார். ஒரு சகோதரனோடு அல்லது அயலானுடன் நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளலும், அவனை விரோதியாக பாவித்தலும்கூட கொலையாகிறதென்று கர்த்தர் போதிக்கிறார் (மத்தே V. 21—22).

எல்லாவித விபசாரங்களையும் பாவங்களாக எவனொருவன் எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவ்வளவு தூரம் அவன் கற்புடைமையை விரும்புகிறான்.

74. பத்து கற்பனைகளில் ஆறாவது தரும நியமத்தில் விபசாரம் செய்தலென்பது, தூலார்த்தத்தில், வேசித்தனம் செய்வது மாத்திரமல்ல, அசப்பியமான காரியங்களை செய்தல், மோகமான வார்த்தைகளைப் பேசுதல், ஊழலான

சிந்தனைக்கொள்ளல், இவைகளையும் அகுத்தம் கொள்ளுகிறது. ஆனால், தத்துவார்த்தத்தில், விபசாரம் செய்தலென்பது திருவசனத்தின் நன்மைகளை பழுதாக்குதல், என்றும், அதன் உண்மைகளை பொய்ப்படுத்தலென்றும் அருத்தம் கொள்ளுகிறது. எல்லாவற்றிற்கும் மேலான அருத்தத்தில், விபசாரம் செய்தலென்பது, கர்த்தரின் தெய்வீகத் தன்மையை மறுதளித்தலென்றும், திருவசனத்தை நிந்தித்தலென்றும் அகுத்தம் கொள்ளுகிறது. இவைகள் தாம் எல்லாவித விபசாரங்களாகும். தூல அறிவுள்ள மனிதன், பகுத்தறியும் வெளிச்சத்தால், விபசாரம் செய்தலென்பதினால், அசப்பியமான காரியங்களை செய்தலும், மோகமான வார்த்தைகளை பேசுதலும், ஊழலான சிந்தனைகளை கொள்ளலும்கூட அருத்தம் கொள்ளுகிறதென்று அறிந்துகொண்டிருக்கலாம்; ஆனால் விபசாரம் செய்தலென்பதால், திருவசனத்தின் நன்மைகளை பழுதாக்கல் என்றும், அதினிட உண்மைகளை பொய்ப்பித்தலென்றும் அருத்தம் கொள்ளுகிறதென்று அவனுக்குத்தெரியாது; அது, கர்த்தரின் தெய்வீக தன்மையை மறுதளித்தலென்றும், திருவசனத்தை நிந்தித்தலென்றும் அருத்தம் கொள்ளுகிறது, அவனுக்கு இன்னும் சிறுக தெரியும். அதினால் விபசாரமானது, பேய்க்குணமென்று சொல்லக்கூடிய அவ்வளவு பெரிய தீமையென்று அவனுக்கு தெரியாது; எவனொருவன் தூல விபசாரத்திலிருக்கிறானோ அவன் சூக்கும விபசாரத்தில்கூட இருக்கிறான். அதற்கு மாறாய்கூட அப்படியிருக்கிறான். விவாகம் எனும் ஒரு சிறிய விசேஷமான நூலில் இது எப்படியிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்படும். ஆனால், நம்பிக்கையிலும், வாழ்விலும், விபசாரங்களை பாவங்

களாக எண்ணுதவர்கள், அதே காலத்தில் எல்லாவித விபசாரங்களிலும் இருக்கிறார்கள்.

75 எவனொருவன் விபசாரத்தை எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவன் அவ்வளவு தூரம் விவாகத்தை நேசிக்கிறான். அல்லது அதேவாகிறபடி, எவனொருவன் விபசாரத்தின் காம விகாரத்தை எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவன் அவ்வளவு தூரம் விவாகத்தின் கற்பை நேசிக்கிறான் என்பது. விபசாரத்தின் காம விகாரமும் விவாகத்தின் கற்புடைமையும் இரண்டு எதிரிடையானவைகளாயிருப்பதனால் என்க; ஆகையினால், ஒரு மனிதன் ஒன்றில் எவ்வளவு தூரம் இல்லையோ, அவன் அவ்வளவு தூரம் மற்றொன்றிலிருக்கிறான். மேலே (இல. 70) கூறியபடி அது முழுமையுமிருக்கிறது.

76. விபசாரத்தின் காம விகாரத்தை பாவமாக நீக்கினாலொழிய, விவாகத்தின் கற்புடைமை என்ன இயல்புடையதென்று ஒருவனாலும் அறியமுடியாது ஒரு மனிதன் தான் எதிலிருக்கிறானோ அதை அறிந்திருக்கலாம். அவன் எதிலில்லையோ அதை அறிய முடியாது. தான் எதிலில்லையோ அதை வருணனை அல்லது சிந்தனையால் ஒருவன் தெரிந்து கொண்டானாயினும், இருட்டிலிருந்து தெரிந்துகொண்டதைவிட வேறுவிதமாய் அதை தெரிந்துகொள்ளவில்லை, மேலும் சந்தேகம் அதில் நிலைகொள்ளுகிறது; ஆகையினால் அவன் அதிலிருந்தால் தவிர, அதை வெளிச்சத்திலும், சந்தேகமில்லாமலும் பார்க்கிறதில்லை ஆகையினால், இதுதான் அரிந்துகொள்ளுதல் என்பது; ஆனால் முன் கூறியது தெரிந்துகொள்ளலும் தெரிந்து கொள்ளாததுமாகிறது. நரகமும்

சுவர்க்கமும் ஒன்றுக்கொன்று இருப்பதுபோல் விபசாரத்தின் காம விகாரமும், விவாகத்தின் கற்புடைமையும் ஒன்றுக்கொன்று முழுமையும் இருக்கிறது என்பது உண்மை; விபசாரத்தின் காம விகாரம் மனிதனுடன் நரகமாகிறது, விவாகத்தின் கற்புடைமை அவனுடன் சுவர்க்கமாகிறது. ஆனால் விவாகத்தின் கற்புடைமை, விபசாரத்தின் காம விகாரத்தை பாவமாக நீக்குகிறவனைத் தவிர மற்றவர்களோடு இருக்கிறதில்லை. (கீழே இலக்கம் III-ஐ பார்க்க).

77. இந்த ஆலோசனைகளால், ஒரு மனிதன் கிருஸ்துவனா இல்லையா என்பது சந்தேகார்த்தமில்லாமல், நிச்சயப்படுத்தி பார்க்கலாம். இதுவுமல்லாமல், ஒரு மனிதனுக்கு ஏதாவது சமயம் உண்டு இல்லை என்பதையும் தெரிந்துகொள்ளலாம். விபசாரங்களை பாவங்களாக நம்பிக்கையிலும் வாழ்விலும் எண்ணுதவன் கிருஸ்துவனாகமாட்டான். அவனுக்கு ஒரு சமயமுமில்லை. ஆனால் அப்படியில்லாமல் விபசாரங்களை பாவங்களாக நீக்குகிறவனுக்கும், முக்கியமாய் அதன்பொருட்டு அவைகளின்பேரில் பிரீதியற்றவனாயிருப்பவனுக்கும் இன்னும் அதிகமாய் அதன்பொருட்டு அவைகளை வெறுக்கிறவனுக்கும், சமய பற்றுண்டு: அவன் கிருஸ்துவ சபையிலிருந்தால், அவன் கிருஸ்துவனாகிறான். ஆனால் இந்த விஷயங்களைக்குறித்து, விவாகம் என்கிற சிறிய நூலில் அதிகமாய் சொல்லப்படும். அதற்குள், சுவர்க்கமும் நரகமும் (இல. 366—376) எனும் நூலில் இந்த விஷயத்தைப்பற்றி சொல்லப்பட்டதை பார்க்கவும்.

78. விபசாரம் செய்வது என்பதால், அசப்பியமான காரியங்களை செய்தல், மோகமான வார்த்தைகளைப் பேசு

தல், ஊழலான சிந்தனை கொள்ளல் என்கிற அருத்தம்கூட உண்டென்பது மத்தேயுவில் கர்த்தரிட வார்த்தைகளில் ஏற்படுகிறது "விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேழ்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபசாரஞ் செய்ததாயிற்று" (V. 27, 28).

79 தத்துவார்த்தத்தில் விபசாரம் செய்தலென்பது, திருவசனத்தின் நன்மையை பழுதாக்கலென்றும், அதின் உண்மையை பொய்ப்பித்தலென்றும் அருத்தம் கொள்ளுகிறது என்பது இந்த வாக்கியங்களால் ஏற்படுகிறது; "பாபிலோன் தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே" (வெளி. XIV. 8). தூதன் சொன்னதாவது: "திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே; அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்கு காண்பிப்பேன்" (வெளி. XVII. 1, 2). "அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள் (வெளி. XVIII. 3). "தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்து மகா வேசிக்கு கடவுள் நியாய தீர்ப்பு கொடுத்தார் (வெளி. XIX. 2). பாபிலோன் என்பதால், கர்த்தரிட தெய்வீக சக்தி தங்களுக்கு உள்ளதாக வைத்துக்கொண்டு திருவசனத்தை, கெடுத்தும் பொய்ப்பித்தும், அதை அவமதிக்கிறவர்களென்று அருத்தம் கொள்ளுகிறபடியினால், வேசித்தனம் பாபிலோனுக்கு சம்மந்தப்பட்டு பேசப்படு

கிறது; ஆகையால், பாபிலோனுக்கு, "வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்" எனும் நாமம் உண்டு (வெளி. XVII. 5). தீர்க்கதரிசிகளிலும் வேசித்தனம் என்பதால் அதே அருத்தம் கொள்ளுகிறது; எரேமியாவில்: "எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தை காண்கிறேன்; விபசாரம் பண்ணி, வஞ்சகமாய் நடந்து" (XXIII. 14). எசேக்கியேலில்: "ஒரு தாயின் குமார்த்திகளாகிய இரண்டு ஸ்திரீகள் எகிப்திலே வேசித்தனம் பண்ணினார்கள்: தங்கள் இளம்பிராயத்திலே வேசித்தனம் பண்ணினார்கள்;..... ஒருவன் என்னுடையவளாயிருக்கும்போது சோரம் போனாள்; சமீப தேசத்தாராகிய அசீரியரென்கிற தன் சிநேகிதர்மேல் அவள் மோகித்தாள்";..... தான் எகிப்திலே பண்ணின வேசித்தனங்களை அவள் விடவில்லை மற்றவளோ தன் மோக விகாரத்தில் முன் சொன்னவளைப் பார்க்கிலும், கெட்டவளானாள்; தன் சகோதரியின் வேசித்தனங்களினும் தன் வேசித்தனங்கள் அதிகமாயிற்று..... அவள் தன் வேசித்தனங்களில் அதிகரித்தாள்..... .....கல்தேயரை அவள் விரும்பினாள்;..... .....பாபிலோன் புத்திரர் அவளண்டையிலே சிநேகசம்போகத்துக்கு வந்து, தங்கள் வேசித்தனங்களால் அவளை தீட்டுபடுத்தினார்கள். (XXIII. 2—17). இந்த வாக்கியத்தில் ஒரு தாயின் குமார்த்திகளாகிற இஸ்ரேலில் சபையையும் யூதர் சபையையும் குறித்து இவைகள் கூறப்பட்டன. அவர்களிட வேசித்தனம் என்பதால் திருவசனத்தை கெடுத்தலும் பொய்ப்பித்தலும் என்று அருத்தம் கொள்ளுகிறது. மேலும் திருவசனத்தில் எகிப்து என்பது

அறிவையும், அசீரியா என்பது பகுத்தறிதலையும், கல்தேயா என்பது உண்மையை நிந்தித்தலையும், பேபல் என்பதால் நன்மையை அவமதித்தலையும், அருத்தம் கொள்ளுகிறபடியினால், அவைகளோடு அவர்கள் வேசித்தனம் செய்தார்களென்று சொல்லப்பட்டது. கொள்கையை அனுசரித்து சபை என்று அருத்தம் கொள்ளுகிற எருசலேமைக் குறித்து எசேக்கேயில் அம்மாதிரியே கூறப்பட்டிருக்கிறது: "நீ பேரவென்றால் உன் அழகை நம்பி, உன் கீர்த்தியினால் சோர மார்க்கமாய் நடந்து வழிப்போக்கரில் உனக்கு நேர்பட்ட யாவரோடும் வேசித்தனம் பண்ணினாய்,..... ....சதை பெருத்த உன் அயல் தேசத்தாராகிய எகிப்திய புத்திரரோடே வேசித்தனம் பண்ணி, உன் வேசித்தனங்களைப் பெருகப் பண்ணினாய் ..... நீ அசீரிய புத்திரரோடும் வேசித்தனம் பண்ணினாய் ..... நீ அவர்களோடு வேசித்தனம் செய்தும் திருப்தியடையாத போது, உன்னிட வேசித்தனத்தை வர்ததகத்தில் பேர்போன கல்தேயாமட்டும் எட்ட செய்தாய்..... தன் புருஷனுக்கு பதிலாக அந்நியரைச் சேர்த்து கொள்ளுகிற விபசார ஸ்திரி; அவர்கள் எல்லாம் தங்கள் வேசிகளுக்கு பணையங்கொடுக்கிறார்கள். நீயோ, உன் நேசர்கள் சுற்றுபுறங்களிலிருந்து உன்னிடத்தில் வேசித்தனம் செய்ய வரும்படி அவர்களுக்கெல்லாம் நீயே பணையங்கொடுத்து, அவர்களுக்கு வெகுமதிகளைத் தருகிறாய்..... ..... ஆகையால் வேசியே, கர்த்தருடைய வார்த்தையைக்கேள்" (XVI. 15, 26, 28, 29, 32, 33, 35). எருசலேம் என்பதால் திருச்சபை என அருத்தம் கொள்வதை கர்த்தரைக் குறித்த போதத்தில் (இல. 62, 63) அறியலாம். ஏசாயா

XXIII. 17, 18; LVII. 3; ஏரேமியா. III. 2, 6, 8, 9; V. 1, 7; XIII. 27; XXIX. 23; மீகா. 1, 7; நாகூம். III. 4; ஓசியா. IV. 10, 11; லேவி. XX. 5; எண்கள் XIV. 33; XV. 39; இவைகளிலும் மற்ற இடங்களிலும் வேசித்தனங்கள் என்பதினால் அதே அருத்தம் கொள்ளுகிறது. இந்த அருத்தத்தினால்கூட, யூதர்கள் கர்த்தரால் "விபசார சந்ததியார்" என்று அழைக்கப்பட்டார்கள் (மத்தே XII. 39; XVI. 4; மார்க்கு VII. 38)

எவனொருவன் எல்லாவித களவுகளையும் பாவங்களாக எவ்வளவு நீக்குகிறானோ, அவன் அவ்வளவு தூரம் உண்மையை விரும்புகிறான்.

80 களவாடல் என்பது தூலார்த்தத்தில், களவு செய்தலும் கொள்ளையிடலுமட்டுமல்ல, வஞ்சித்தலும், எந்த பாவனையைக் காட்டியாவது மற்றவனிடத்திலிருந்து அவனிட சொத்தை அபகரித்தலும் அருத்தம் கொள்ளுகிறது. ஆனால் களவு செய்தல் என்பது, ஞானார்த்தத்தில், மற்றவனிடமிருந்து அவனிட விசுவாசத்தின் உண்மைகளையும், அவன் அன்பின் நன்மைகளையும் பறித்துக்கொள்ளல் என்று அருத்தம் கொள்ளுகிறது. மேலான கருத்தில், களவு செய்தலென்பது, கர்த்தரிடமிருந்து அவர் உடைமையை அபகரித்தலும், அதை தனதாக ஆரோபித்தலும், இம்மாதிரியாக நீதியையும் சுகிருதத்தையும் தனதாக வகித்துக்கொள்ளலும் அருத்தம் கொள்ளுகிறது. இவைகள்தான் எல்லாவித களவுகளுமாகின்றன; அவைகளும்கூட, மேல் கூறிய எல்லாவித விபசாரங்களும், எல்லாவித கொலைகளும் செய்கிறது போல ஒன்றாகிறது. அவைகள் ஒன்றாகிறது என்பது, ஒரு விதம் மற்ற ஒன்றிலிருப்பதாலாகிறது.

81. கபடத்துடனும் மோசத்துடனும் ஒன்று பட்டிருப்பதால், களவின் தீமை மற்ற எவ்வித தீமையைவிட ஒரு மனிதனிடத்தில் மிகவும் ஆழமாய் பிரவேசிக்கிறது; கபடமும் மோசமும், புத்தியுடன் தன்னிட சிந்தனை இருக்கப்பட்ட மனிதனிட பரமார்த்த மனதில்கூட உபாயமாயும் மெதுவாயும் உட்செல்லுகின்றன மனிதனுக்கு தூல மனதும் ஞான மனதும் இருக்கிறது என்பது அடியில் காணலாம்.

82 எவனொருவன் களவை பாவமாக எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவன் அவ்வளவு தூரம் உண்மையை நேசிக்கிறானென்பதற்கு காரணம், களவானது மோசமாகவும்கூட இருப்பதாலும், மோசமும் உண்மையும் இரண்டு எதிரிடைகளானபடியாலும்தான்: ஆகையினால், எவனொருவன் எவ்வளவு தூரம் மோசத்திலில்லையோ, அவ்வளவு உண்மையிலிருக்கிறான்.

83. உண்மை என்பதால், நேர்மை, நியாயம், விசுவாசம், சத்தியம் என்றுகூட அருத்தம் கொள்ளுகிறது. அவைகளிலிருந்தும் அவைகளுக்காகவும் அவைகளை நேசிக்கும்படியாக, இந்த புண்ணியங்களில் தானே இருக்க மனிதனால் முடியாது; ஆனால் எவனொருவன் மோசத்தையும் கபடத்தையும், சூதையும், பாவங்களாக நீக்குகிறானோ, அவன் மேல்காண்பித்தபடி (இல. 18—31). மேல்குறித்த புண்ணியங்களில், தன்னாலேயல்லாமல் கர்த்தரிடமிருந்து இம்மாதிரியாக இருக்கிறான். குருவுக்கும், அதிகாரிக்கும், தருமபாலனுக்கும், வர்த்தகனுக்கும், தொழிளாளிக்கும், தன் சொந்த கடைமையிலும் வேலையிலும் இம்மாதிரியாக ஒவ்வொருவனுக்கும், அம்மாதிரியே இருக்கிறது.

84. இதை திருவசனமானது அநேக இடங்களில் போதிக்கிறது. அவைகளில் சிலது: "நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பை காணாதபடிக்கு தன் கண்களை மூடுகிறவனெவனோ, அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்" (ஏசாயா. XXXIII. 15, 16) "கர்த்தாவே! யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்மிட பரிசுத்த பாவத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதார சத்தியத்தை பேசுகிறவன்தானே அவன் தான் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்கு தீங்கு செய்யாமலும் இருக்கிறான்" (சங்கீதம் XV. 1-3). "தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம் பண்ணும்படி என்கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னை சேவிப்பான். கபடு செய்கிறவன் என் வீட்டிற்குள் இருப்பதில்லை; பொய் சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தரிட நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டு போக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கிரிப்பேன்" (சங்கீதம் I. 6—8).

எவனாவது ஒருவன் அந்தரங்கமாய் உண்மையாயும், நியாயமாயும், விசுவாசமுள்ளவனாயும், நேர்மையானவனுமாயும் இல்லாவிட்டால், அவன் வஞ்சகமுள்ளவனாகவும், அந்நியாயமானவனாகவும், விசுவாசகாதகனாகவும், நேர்மையற்றவனாகவும்கூட இருக்கிறானென்று கர்த்தர் இந்த வார்த்

கைகளால் கூறுகிறார்: "வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்களென்று உங்களுக்கு சொல்லுகிறேன்" (மத்தே. V 20). வேதபாரகர், பரிசேயர், என்பவர்களுடைய நீதியிலும் அதிகமாகிற நீதி என்பதனால் கர்த்தரிலிருக்கும் மனிதன் இருக்கிற அந்தரங்க நீதியென்று அருத்தம் கொள்ளுகிறது. அப்பேர்ப்பட்ட மனிதன் கர்த்தரிலிருக்கிறானென்பது அவரேகூட யோவானில் போதிக்கிறார்: "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கும். நான் அவர்களிலும், நீர் என்னிலும், அவர்கள் ஒன்றாய் பூரணமாகும்படிக்கும், நீர் என்னிடத்தில வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்குமபடிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், நீர் எனக்கு தந்த மகிமையை நான் அவர்களுக்குக்கொடுத்தேன்" (XVII. 22, 23, 26); கர்த்தர் அவர்களிலிருக்கும்போது அவர்கள் பூரணமாகிறார்களென்று இதினால் தெளிவாகிறது. இவர்களைத்தான், "கடவுளைப் பார்க்கிற இருதய சுத்தமுள்ளவர்களென்றும்." பரலோகத்திலுள்ள அவர்கள் பிதாவைப்போல் சம்பூரணமானவர்களென்றும்" சொல்லப்படுகிறது. (மத்தே V. 8. 48),

85. கபடத்துடனும் மோசத்துடனும் சேர்க்கப்பட்டிருப்பதால், களவு செய்தலின் தீமை, வேறு எவ்வித தீமையைவிட அதிக ஆழமாய் மனிதனில் பிரவேசிக்கிறது என்று மேலே (இல 81 சொல்லப்பட்டது; புத்தியுடன் சிந்தனையானது, இருக்கப்பட்ட மனிதனிட பரமார்த்த மனதில்கூட கபடமும் மோசமும் உபாயமாயும் மெதுவாயும் உட்செல்லுகிறது ஆகையால், மனிதனிட மனதைப்பற்றி சிலது

இப்பொழுது சொல்லப்படவேண்டும். புத்தியும் சித்தமும் மனிதனிட மனதாகிறதென்பதைப் பற்றி மேலே (இல. 43) பார்க்கவும்.

86. மனிதனுக்கு தூல மனதும் பரமார்த்த மனதும் உண்டு; தூல மனது கீழே இருக்கிறது சூக்கும மனது மேலே இருக்கிறது; தூல மனது அவனிட உலக வியாபாரத்திலுள்ள மனது, சூக்கும மனது அவனிட பரலோகத்திலுள்ள மனது. தூல மனதை மிருக மனதென்றும் சூக்கும மனதை மானிட மனதென்றும் சொல்லலாம். அவனுக்கு சூக்கும மனது இருக்கிறதென்கிற செய்தியால்கூட, மனிதன் மிருகத்திலிருந்து பிரத்தியேகப்படுத்தப்படுகிறான். இந்த மனதினால் அவன் உலகத்திலிருக்கும்போது பரலோகத்திலுமிருக்க சக்தியுள்ளவனாயிருக்கிறான். இந்த மனதினால்தான் மனிதன் இறந்த பிறகு ஜீவித்திருக்கிறான்.

2 புத்தி விஷயத்தில், ஒரு மனிதன் தன்னிட சூக்கும மனதிலும், அதிலிருந்து, பரலோகத்திலும் இருக்கக்கூடும்; ஆனால் அவன் சித்தம் விஷயத்தில், அவன் தீமைகளை பாவமாக நீக்கினாலொழிய, தன்னிட சூக்கும மனதிலும் அதிலிருந்து பரலோகத்திலும் இருக்கமுடியாது. அவனிட சித்தம் சம்மந்தப்பட்டவரையில்கூட பரலோகத்தில் இல்லாவிட்டால், அவன் பரலோகத்தில் இன்னும் இல்லையாகும்; ஏனென்றால், சித்தமானது புத்தியை கீழே இழுத்து, தன்னுடன் சமமாய் தூலமாகவும் மிருகத்தனமாகவும் இருக்கச்செய்கிறது.

3. மனிதனை ஒரு தோட்டத்திற்கும், புத்தியை வெளிச்சத்திற்கும், சித்தத்தை சூட்டிற்கும் ஒப்பிடலாம்.

மாரிகாலத்தில் ஒரு தோட்டமானது வெளிச்சத்திலிருக்கிறது. அதே காலத்தில் சூட்டிலில்லை; ஆனால் வேனிற்காலத்தில் அது வெளிச்சத்திலும் சூட்டிலும் சேர்ந்திருக்கிறது. இம்மாதிரியாக புத்தியின் வெளிச்சத்தில் மாத்திரம் இருக்கிற மனிதன், மாரிகாலத்து தோட்டத்தைப்போலிருக்கிறான்; ஆனால் புத்தியின் வெளிச்சத்திலும், அதே காலத்தில் சித்தத்தின் சூட்டிலும் இருக்கப்பட்டவன் வேனீர்காலத்து தோட்டத்தைப்போலிருக்கிறான். மேலும், புத்தியானது ஞான வெளிச்சத்தால் ஞானமுள்ளதாயிருக்கிறது, சித்தமானது ஞான சூட்டினால் அன்பு பாராட்டுகிறது; ஞான வெளிச்சம் தெய்வீக ஞானம், ஞான சூடு தெய்வீக அன்பு.

4 ஒரு மனிதன் தீமைகளை பாவங்களாக நீக்காத வரையில், தீமைகளின் மோகங்கள் சித்தத்திற்கு சேர்ந்த தூல மனதின் உட்பாகங்களை தடுக்கின்றன; அவைகள் அங்கே கடித்த திரையாகவும், ஞான மனதுக்கு கீழே கருத்த மேகமாகவும், இருந்து அது திறக்க ஒட்டாமல் தடுக்கின்றன. ஆனால் ஒரு மனிதன் தீமைகளை பாவங்களாக நீக்கின உடன், பிறகு கர்த்தர் பரலோகத்திலிருந்து உள்ளே பிரவேசித்து, திரையை நீக்கி, மேகத்தை தூரத்தி, பரமார்த்த மனதை திறந்து, இம்மாதிரியாக அவனை சுவர்க்கலோகத்தில் பிரவேசிக்கச்செய்கிறது.

5. முன் சொல்லியபடி, தீமைகளின் மோகங்கள் தூல மனதின் உள் பாகங்களை தடுக்கிறவரையில், மனிதன் நரகத்திலிருக்கிறான்; இந்த மோகங்கள் கர்த்தரால் சிதறடிக்கப்பட்டபோது, மனிதன் சுவர்க்க லோகத்திலிருக்கிறான். மேலும், தீமைகளின் மோகங்கள் தூல மனதின் உள் பாகங்

களை தடுக்கிறவரையில், அவன் தூல மனிதனாயிருக்கிறான்; ஆனால் இந்த மோகங்கள் கர்த்தரால் சிதறடிக்கப்பட்ட உடன், அவன் ஞானமுள்ளவனாயிருக்கிறான். இன்னும், தீமைகளின் மோகங்கள் தூல மனதின் உட் பாகங்களை தடுக்கிறவரையில், புத்தியை பரலோக வெளிச்சத்துக்கு உயர்த்துகிற மனோ சக்தியிலிருந்து அடைகிற, தன் கண்களால் பார்க்காத பொருள்களைப்பற்றிகூட அவன் நினைக்கவும் பேசவும்கூடும் என்கிற வித்தியாசம் மட்டும் அல்லாமல் மனிதன் ஒரு மிருகமாகவேயிருக்கிறான்; ஆனால் இந்த மோகங்கள் கர்த்தரால் சிதறடிக்கப்பட்ட உடன, சித்தத்தின் நன்மையிலிருந்து புத்தியில் உண்மையை பிறகு நினைக்கிறபடியினால், அந்த மனிதன் மனிதனாகிறான். இன்னும்கூட தீமைகளின் மோகங்கள் தூல மனதின் உள் பாகங்களை தடுக்கிறவரையில், மாரி காலத்தில் ஒரு தோட்டத்தைப் போல் மனிதன் இருக்கிறான்; ஆனால் இந்த மோகங்கள் கர்த்தரால் சிதறடிக்கப்பட்டபோது, வெயிற்காலத்து தோட்டத்தைப் போன்றிருக்கிறான்.

6. திருவசனத்தில், இருதயமும், ஆன்மாவுமென்றும் இருதயமும் ஆவியும்.....என்றும் கூறுவதினால் மனிதனில் சித்தமும் புத்தியும் சேர்தல் என்று அருத்தம் கொள்ளுகிறது; உதாரணமாக:- கர்த்தராலவர் "முழு இருதயத்தோடும் முழு ஆத்மாவோடும் அன்பு கூறப்பட வேண்டுமென்று சொல்லிய இடத்திலும் (மத்தே. XXII. 37); கடவுளானவர் "புதிய இருதயத்தையும், புதிய ஆவியையும்" கொடுப்பார் என்று சொல்லிய இடத்திலும் (எசேக்கியேல் XI. 19; XXXVI. 26, 27) இருதயம் என்பது சித்தமும் அதின் அன்பும் என்றும், ஆன்மாவும்

ஆவியும் என்பது, புத்தியும் அதன் ஞானமும், என்று அருத்தம் கொள்ளுகிறது.

எவனொருவன் எல்லாவித பொய் சாட்சியத்தையும் பாவமாக எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவ்வளவு தூரம் அவன் உண்மையை நேசிக்கிறான்.

87. தூலார்த்தத்தில், பொய் சாட்சியம் சொல்லுதல் என்பதால், பொய் சாட்சியம் கொடுப்பது மாத்திரமல்ல, பொய் சொல்லுதலும் அவதூறு பேசுதலும்கூட அருத்தம் கொள்ளுகிறது. ஞானார்த்தத்தில், பொய் சாட்சியம் சொல்லுதல் என்பதால், பொய்யானது உண்மையென்றும், தீமை நன்மை என்றும், எதிரானதும் அம்மாதிரி என்றும் சொல்லி இசையச்செய்தலும் அருத்தம் கொள்ளுகிறது. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலான கருத்தில், பொய் சாட்சியம் சொல்லுதல் என்பது கர்த்தரையும் திருவசனத்தையும் நிந்தித்தல் என்று அருத்தம் கொள்ளுகிறது. இவைகள் மும்மடங்கான கருத்தில் பொய் சாட்சியம் சொல்லுதலாகின்றன. பரிசுத்த வேதத்தைக் குறித்த சித்தாந்தத்தில் (இல. 5—7, இல 57), திருவசனத்தின் எல்லா வஸ்துக்களின் மும்மடங்கான கருத்துகளைக் குறித்து சொல்லியவற்றால், பொய் சாட்சியம் சொல்லி, பொய்யை பேசி, அவதூறு செய்கிற மனிதனில் அவைகள் ஒன்றாகிறதென்று காணப்படும்.

88. பொய்யென்பதும் உண்மையென்பதும் இரண்டு எதிரிடையானவைகளானபடியினால், எவனொருவன் பொய்யை பாவமாக எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவன்

அவ்வளவு தூரம் உண்மையை நேசிக்கிறானென்று பின் தொடருகிறது.

89. எவனொருவன் உண்மையை எவ்வளவு தூரம் நேசிக்கிறானோ, அவ்வளவு தூரம் அதை தெரிந்துகொள்ள விரும்புகிறான். மேலும் அவன் அதை காணும்போது அவன் அவ்வளவு தூரம் மனம் கரைகிறான்; வேறு எவனும் ஞானம் அடையமாட்டான். அவன் எவ்வளவு தூரம் உண்மையை செய்ய விரும்புகிறானோ, அவ்வளவு தூரம் உண்மையிருக்கப்பட்ட வெளிச்சதின் மனோ ஹரத்தை அறிந்து கொள்ளுகிறான். எல்லாவித களவுகளையும் நீக்குகிறவனோடு, உண்மைக்கும் நியாயத்துக்கும் போலவும், எல்லாவித விபசாரங்களையும் நீக்குகிறவனோடு கற்புடைமைக்கும் சுத்தத்துக்கும போலவும், எல்லாவித கொலைகளையும், நீக்குகிறவனோடு அன்புக்கும் தருமத்துக்கும் போலவும், இம்மாதிரியாக இதுவரையில் கூறிய மற்ற சற்குணங்களுக்கும் அம்மாதிரியே ஆனால் அவைகளின் எதிரிடையானவைகளில் இருக்கப்பட்டவன், எல்லாம் அவைகளில் இருந்தாலும், அவைகளைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது.

90. கர்த்தர் பின்வருமாறு பேசுகிற வயலில் உள்ள விதையால் உண்மைதான் கருதப்பட்டது: "விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில விதை வழி அருகே விழுந்து மிதியுண்டது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதை பட்சித்துப் போட்டது; சிலவிதை கற்பாறையின்மேல் விழுந்தது; அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்து போயிற்று; சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது;

முள்கூட வளர்ந்து, அதை நெருக்கிப் போட்டது; சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது" (லூக். VIII. 5-8; மத்தே. XIII. 3—8; மார்க். IV. 3—8). இங்கே விதைக்கிறவன் கர்த்தர், அந்த விதை அவரிட திருவசனம், அதனால் உண்மை; உண்மையை கவனிக்காதவர்களுடன் வழி அருகே இருக்கும் விதை இருக்கிறது; கற்பாறையின்பேரில் இருக்கும் விதை உண்மையை உண்மைக்காக அல்லாமல், இம்மாதிரியாக உள்ளிருந்தல்லாமல், கவனிக்கிறவர்களுடன் இருக்கிறது; முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதை, தீமையின் மோகங்களிலிருக்கிறவர்களுடன் இருக்கிறது; நல்ல நிலத்தில் விழுந்த விதை, திருவசனத்திளுள்ள உண்மைகளை கர்த்தரிடமிருந்து நேசிக்கிறவர்களுடனும், அவரிடமிருந்து அவைகளை செய்து கனி கொடுக்கிறவர்களுடனும் இருக்கிறது. கர்த்தர் இந்த வார்த்தைகளைக் குறித்து சொல்லிய விவரத்தால் இவைகள் கருதப்பட்டதென்று, காணப்படுகிறது. (மத்தே. XIII. 19—23, 37; மார்க்கு. IV. 14—20; லூக். VIII. 11—15). இந்த ஆலோசனைகளால், உண்மையை கவனிக்காதவர்களிடம் திருவசனத்தின் உண்மை, வேறான்றாது என்று வெளிப்படையாகிறது; கர்த்தரால் தீமையின் மோகங்கள் சிதறடிக்கப்பட்டவர்கள் தவிற, உண்மையை அந்தரங்கமாயல்லாமல், புறம்பாய் நேசிக்கிறவர்களுடனும், தீமையின் மோகங்களிலிருப்பவர்களுடனும், அது வேறு ஊன்றாது. இவர்களுக்கு, விதை அதாவது உண்மை அவர்களிட ஞான மனதில் வேறான்றுகிறது. (இதைப்பற்றி மேலே இல. 86-ல் கடைசியில் பார்க்க).

91. இரட்சிக்கப்படுகிற வழியானது திருச்சபை போதிக்கிற இது அல்லது அதை நம்புகிறது என்பதும், எல்லைப்படுத்திய கருத்திலும், விசாலமான கருத்திலும், கொலை செய்யக்கூடாதென்றும், விபசாரம் செய்யக்கூடாதென்றும், களவாடல் கூடாதென்றும், பொய் சாட்சியம் சொல்லக்கூடாதென்றும் கூறுகிற பத்து கற்பனைகளின் தரும நியமங்களை செய்வதில் அடங்கவில்லையென்றும், தற்காலத்திய சாமானிய அபிப்பிராயம். ஏனென்றால், விசுவாசத்தை தவிர கிரியைகளை கடவுள் மதிக்கிறதில்லையென்று சொல்லப்படுகிறது; இருந்தாலும், ஒருவன் அந்த தீமைகளில் எவ்வளவு தூரம் இருக்கிறானோ அவன் அவ்வளவு தூரம் விசுவாசமில்லாதவனாயிருக்கிறான் (மேலே. இல. 42—52 பார்க்க). எந்த கொலையாளியாவது விபசாரியாவது, திருடனாவது பொய் சாட்சியாவது, அந்த தீமைகளின் மோகத்திலிருக்கிறவரையில், விசுவாசமுடையவனாக இருக்கக்கூடுமா என்றும், பிறகு, அவைகள் பாவங்களானபடியினால் அதாவது அவைகள் நரகத்துக்கு அடுத்ததும் பிசாசுதன்மையானதுமாயிருக்கிறபடியினால் அவைகளை செய்ய இஷ்டப்படாதிருப்பதைவிட வேறு விதத்தில் அந்த தீமைகளின் மோகம் சிதறடிக்கக்கூடுமா என்று விவேகத்துடன் ஆலோசித்து விசாரித்துப்பார். ஆனகையால், ரட்சிக்கப்படும் வழி, திருச்சபை போதிக்கிற இதை அல்லது அதை நம்புதல் என்று நினைத்து அம்மாதிரி நடத்தையுள்ளவனாயிருக்கிறவன், மத்தேயு VII. 26ல் கண்ட கர்த்தரின் வாக்குகள்படி மதிகெட்டவனாயிருக்கவேண்டும். அவ்வகையான சபை எரேமியாவில் இம்மாதிரி கூறப்பட்டிருக்கிறது. "நீ கர்த்தருடைய ஆலயத்தின் வாசலிலே நின்று, அங்கே

கூறி சொல்லவேண்டிய வசனம் என்னவென்றால்,.....
.....இஸ்ரவேல் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள்.....கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், இதுவே என்று சொல்லி, பொய் வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்.....
.....நீங்கள் திருடி, கொலை செய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு,.....பிற்பாடு வந்து என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று; இந்த அருவருப்புகளை எல்லாம் செய்வதற்காக விடுதலைப் பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ?.....
இந்த ஆலயம்.....கள்ளர் குகையாயிற்றோ? இதோ நானும் இதைக் கண்டேனென்று கர்த்தர் சொல்லுகிறார்; (VII. 2—4, 9—11)

தீமைகளை அந்தரங்கத்தில் அருவருப்பில் வைக்கும் படியாக, அவைகளோடு போர் புரிந்து அல்லாமல், எவனும் அவைகளை பாவங்களாக நீக்கமுடியாது.

92. திருவசனத்தினின்றும், திருவசனத்தின் கொள்கையினின்றும், மனிதனிட சுயதன்மை பிறவியிலிருந்து தீமையானதென்றும், அதினால்தான் சுபாவமான மோகத்தினால், அவன் தீமைகளை நேசித்து சலஞ்சாதிக்கவும், மோசம் செய்யவும், அவதூறு பேசவும், விபசாரம் செய்யவும் போன்றவைகளை இச்சித்து அவைகளில் கொண்டு போகப்படுகிறான். இந்த தீமைகள் பாவங்களென்று அவன் நினைக்காமல் அந்த காரணத்தினால் அவைகளை தடுக்காவிட்டால், சந்தர்ப்பங்கூடிய பலமுறையும் அவனிட கீர்த்தி

யும், நயமும் அபாயத்துக்குட்படாதவரையிலும் அவன் அவைகளை செய்துவருகிறான். ஒரு மனிதனுக்கு சமயப் பற்றில்லாவிட்டால், அவைகளை சந்தோஷத்தில் செய்கிறானென்பதை இதனுடன் சேர்.

93. மனிதனிட இந்த சுயதன்மை, அவனிட வாழ்க்கையில் முதல் வேராகிறபடியினால், இந்த வேரானது நிர்மூலமாக்கப்பட்டு, புது வேர் நடப்படாவிட்டால், ஒரு மனிதன் எவ்வித மரமாயிருப்பானென்று வெளிப்படையாய் தெரிகிறது. வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிற கனி கொடாத மரமாய் அவன் இருப்பான். (மத்தே. III. 10; VII. 19). அந்த வேரை உருவாக்குகிற தீமைகளை ஆன்மாவிற்கு கெடுதியானதென்று நினைத்து அந்த காரணத்தினால் அவைகளை நீக்கிவிட இச்சித்தாலொழிய, இந்த வேரானது நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக புதியது ஒன்று நடப்படுகிறதில்லை. ஆனால் அவைகள் அவனிட சுயதன்மையாய் அதினால் சந்தோஷமாயிருக்கிறபடியினால், அவன் மனசில்லாமலும், மல்லுகட்டியும், இம்மாதிரியாக போராட்டத்தால் தவிற, இதை செய்ய முடியாது.

94. ஒரு நரகமும் ஒரு சுவர்க்கமும் இருக்கிறதென்றும், சுவர்க்கமானது நித்தியானந்தமென்றும், நரகம் நித்திய துக்கமென்றும் நம்புகிற ஒவ்வொருவனும், தீமை செய்கிறவர்கள் நரகத்துக்கு போகிறார்களென்றும் நன்மை செய்கிறவர்கள் சுவர்க்கத்துக்கு போகிறார்களென்றும் நம்புகிற ஒவ்வொருவனும் போராட்டத்தில் தலையிடுகிறான்; போராடுகிறவன் அந்தரங்கத்திலிருந்தும், தீமையின் வேரை உரு

வாக்குகிற அதே மோகங்களுக்கு விரோதமாயும் நடக்கிறான். ஏனென்றால் ஒன்றுக்கு விரோதமாய் சண்டை செய்கிறவன் அதை சிந்திக்கிறதில்லை. மோகித்தல் அதை சிந்தித்தலாகிறது. ஆகையினால், தீமையின் வேர் போராட்டத்தால் மாத்திரம் நீக்கக்கூடுமென்று வெளிப்படையாயிருக்கிறது.

95. ஆகையினால் எவனொருவன் தீமைக்கு விரோதமாய் சண்டைசெய்து அதை எவ்வளவு தூரம் நீக்குகிறானோ, அவ்வளவு தூரம் நன்மையானது அதற்கு பதிலாக ஜெயமடைகிறது; மேலும் அவன் நன்மையிலிருந்து அவ்வளவு தூரத்தில் தீமையை நேரில் பார்த்து, பிறகு, அது நரகத்துக்கு அடுத்ததென்றும், பயங்கரமானதென்றும் அறிந்து கொள்ளுகிறான்; அது அப்படியிருப்பதால், அதை நீக்குகிறதுமாத்திரமல்ல, அதை வெறுப்பிலகொண்டு, கடைசியாய் அதை பகைக்கிறான்.

96. தீமைகளுக்கு விரோதமாய் சண்டை செய்பவன் தன்னிடமிருந்து செய்வதுபோல சண்டை செய்யவேண்டும்; தன்னிடமிருந்து செய்வதுபோல சண்டை செய்யாதவன், சண்டை செய்கிறதில்லை. ஆனால், ஒன்றை பார்க்காமலும், ஒன்றை செய்யாமலும் ஒரு தானாய் இயங்கும் யந்திரம் போல் நிற்கிறான்; தீமையிலிருந்து அதற்கு விரோதமாயல்லாமல், அதற்கு அனுகூலமாய் இடைவிடாமல் நினைக்கிறான். அப்படியானாலும், தீமைகளுக்கு விரோதமாய் மனிதனில் கர்த்தர்தான் மன்றாடுகிறாரென்றும், தன்னிடமிருந்தே சண்டை செய்ததாக மனிதனுக்கு தோன்றுகிறதாகவும், இத்தோற்றமில்லாவிட்டால், ஒரு போராட்டமும், இம்மாதிரியாக ஓர் சீர்திருத்தமும் இருக்கமுடியாதாகையால்,

மனிதனுக்கு அம்மாதிரி தோற்றும்படி கர்த்தர் அருளுகிறார் என்றும், நன்றாய் தெரிந்திருக்கவேண்டியது.

97. தங்களிட மோகங்களின்பேரில் எல்லா நிர்ப்பந்தங்களையும் தளரவிட்டு அவைகளை மனப்பூர்த்தியாய் அவைகளின் இஷ்டப்படி விட்டவர்களுக்கும், திருவசனத்தினிடவும், திருச்சபையினிடவும், பரிசுத்த பொருள்களை பிடிவாதமாய் தள்ளிவிட்டவர்களுக்கும் தவிற மற்றவர்களுக்கு இந்த போராட்டமானது துக்ககரமானதல்ல ஆயினும் மற்றவர்களுக்கு, அது துக்ககரமானதல்ல; ஒரு வாரத்துக்கு ஒரு முறை அல்லது ஒரு மாதத்திற்கு இரு முறை தீமைகளை சிந்தையில் எதிர்த்தால், ஒரு மாறுதலை அவர்கள் காண்பார்கள்.

98. கிருஸ்து சபையானது யுத்தம் செய்கிற சபை என்று சொல்லப்படுகிறது. பிசாசுக்கு விரோதமாய், இம்மாதிரியாக நரகத்திலிருந்துவரும் தீமைகளுக்கு விரோதமாய் இருப்பது தவிர, அது யுத்தம் செய்கிற சபை என்று சொல்லமுடியாது: பிசாசு என்பது நரகம் திருச்சபையைச்சேர்ந்த மனிதன் அனுபவிக்கிற சோதனைதான் இந்த போராட்டமாகிறது.

99. சோதனைகளாயிருக்கிற, தீமைகளுக்கு விரோதமான போராட்டங்கள், திருவசனத்தில் அநேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தரின் இந்த வார்த்தைகளால் அவைகள் கருதப்படுகின்றன: "நான் உங்களுக்கு சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால், தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனை கொடுக்கும்" (யோவா—XII. 24). இவைகளாலும்கூட:

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும், சுவிசேஷத் தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்". (மார்க்கு VIII. 34, 35): சிலுவை என்பதால் சோதனை என்று அருத்தம் கொள்ளு கிறது. (மத்தே X. 38; XVI. 24, மார்க். X. 21; லூக். XIV. 27 இவைகளிலும்கூட): ஆன்மா என்பதனால் மனிதனிட (யோவா. VI. 6, 3) ஒன்றுக்கும் உதவாத மாம்ச வாழ்க்கையாயிருக்கிற சுய தன்மையின் வாழ்க்கை என்று கருத்து கொள்ளுகிறது (மத்தே. X. 39; XVI. 25; லூக். IX. 24; இவைகளிலும்; முக்கியமாய் யோவா. XII. 25-ல்). தீமைகளுக்கு விரோதமான போராட்டங் களையும், அவைகளின்பேரில் ஜெயங்களையும் குறித்து, வெளிப்படுத்தின சுவிசேஷத்தில், எல்லா திருச்சபைகளு க்கும் கர்த்தர் சொல்லுகிறார். இம்மாதிரியாக, எபேசு திருச்சபைக்கு: "ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவ னுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட் சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்" (வெளி. II. 7). சிமிர்ன சபைக்கு: "ஜெயம் கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை". (வெளி. II. 11). பெர்கமு சபைக்கு: "ஜெயம் கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவை புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும், அதை பெறுகிறவனேயன்றி வேறொரு வனுமறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்

பேன். (வெளி. II. 17). தியத்தரா சபைக்கு: "ஜெயங் கொண்டு, முடியுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளு கிறவனெவனோ அவனுக்கு.....ஜாதிகள்மேல் அதி காரம் கொடுப்பேன்.....விடி வெள்ளி .....(வெளி. II. 26, 28), சர்தையின் சபைக்கு: "ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ் திரம் தரிப்பிக்கப்படும், ... என் பிதா முன்பாக வும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளி. III. 5). பிலதெல்பியா சபைக்கு: "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், என் தேவ னுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்து வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுது வேன்" (வெளி. III. 12). லவேதிக்கேயா சபைக்கு: "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்" (வெளி. III. 21).

100. சோதனைகளாகிய இந்த போராட்டங்கள் 1758-வருஷத்தில் லண்டன் நகரத்தில் பிரசுரம் செய்யப் பட்ட புதிய எருசலேம் நகரத்தின் பேரதத்தில் (இல. 187, 201) நுட்பமாய் சொல்லப்படுவதைக் காணலாம்; அவைகள் எங்கிருந்து வருகிறது எவ்வித சுபாவமுள்ளது என்பதைப்பற்றி (இலக்கங்கள். 196, 197); அவைகள் எப்படி எப்பொழுது நடக்கின்றன என்பதைப்பற்றி (இல. 198); அவைகள் என்ன நன்மையைச் செய்கின்றன என் பதைப்பற்றி (இல. 199); கர்த்தர் மனிதனுக்காக சண்டை

செய்கிறானென்பதைக்குறித்து (இல. 200); கர்த்தரிட யுத்தங்கள் அல்லது சோதனைகளைக்குறித்து (இல. 201) இவைகளைப் பார்க்க.

மனிதனானவன் தீமைகளை பாவங்களாக நீக்கி, தன்னிடமிருந்துபோல, அவைகளுக்கு விரோதமாய் சண்டைசெய்யவேண்டும்.

101. *யுக்தியை அனுசரித்து சுவேச்சையில் நடத்தல், தன்னிலிருந்து நடப்பதாகையால், யுக்தியை அனுசரித்து சுவேச்சையில் மனிதன் நடக்கவேண்டுமென்பது தெய்வீக ஒழுங்கு. ஆயினும் சுவேச்சையும் விவேகமுமாகிய இந்த இரண்டு மனோசக்திகளும் மனிதனிட சொந்தமான வைகளல்ல, ஆனால் அவனுடனிருக்கப்படும் கர்த்தருடையது; அவைகள் இல்லாமல் அவனை சீர்திருத்தமுடியாத படியினால், அவன் மனிதனாயிருக்கிறவரையில், அவனிட மிருந்து அவைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறதில்லை; அவைகள் இல்லாமல், அவன் மன நைவு அடையமாட்டான். அவன் தீமைகளுக்கு விரோதமாய் சண்டைபிடித்து, மன நைவுக்கு தக்கபடி பலன்களை கொடுக்கமாட்டான். இப்பொழுது, மனிதனுக்கு சுவேச்சையும் விவேகமும் கர்த்தரிடமிருந்து வருகிறபடியினாலும், அவைகளிலிருந்து மனிதன் நடக்கிறபடியினாலும் தன்னிடமிருந்து அல்லாமல், தன்னிடமிருந்துபோல அவன் நடக்கிறதாக பின்தொடருகிறது.***

---

* *மனிதனுக்கு சுதந்திரம் கர்த்தரிடமிருந்து வருகிறது என்பதற்கு மேலே (இல. 19, 20), இதிலும், சுவர்க்கமும், நரகமும் என்கிற நூலில் (இல. 589—596, 597—693), இதிலும் பார்க்கவும். 1758ஆ-த்தில் லண்டனில் பிரசுரித்த புதிய எருசலேம் சித்தாந்தத்தில் (இல. 141—149) சுதந்திரம் என்பது என்னவென்பதை பார்க்கலாம்.*

102. கர்த்தர் மனிதன்பேரில் அன்புகூர்ந்து அவனுடன் இருக்க இச்சிக்கிறார்; இருந்தாலும், அவர் அந்யோந்யமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டு நேசிக்கப்பட்டாலொழிய, அவர் அவனை நேசிக்கவுமாட்டார், அவனுடன் இருக்கவுமாட்டார்; வேறு வழியில்லாமல், இதிலிருந்து, ஐக்கியமிருக்கிறது. சுயர்ச்சியை தன்னிடமிருந்துபோல் சிந்தித்து இச்சிக்கவும், விவேகத்தை, அதன்படி அவன் சிந்தித்து இச்சிக்கவும், கர்த்தர் சுதந்தரத்தையும் விவேகத்தையும் மனிதருக்கு கொடுத்திருக்கிறார். அந்யோந்யமில்லாதவனை, நேசித்தலும் அவனுடன் ஐக்கியப்படுதலும் முடியாது; அங்கீகாரம் செய்யாத எவனிலும் பிரவேசித்து இருக்கவும் முடியாது அங்கீகாரமும், அந்யோந்யமும் கர்த்தரிடமிருந்து மனிதனிலிருக்கிறபடியினால், கர்த்தர் சொல்லுகிறதாவது: "என்னில் நிலைத்திருங்கள், நானும் "உங்களில் நிலைத்திருப்பேன்" (யோவா. XV. 4). "ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான்" (யோவா. XV. 5). "நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் (யோவா. XIV. 20). மனிதனிடத்திலிருப்பதும், அவன் அடைகிறதுமான நன்மைகளிலும் உண்மைகளிலும் கர்த்தர் இருக்கிறாரென்று, அவர் போதிக்கிறார்: "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்.....நீங்களும் என் கற்பனைகளை கைக்கொண்டிருந்தால், என்னிட அன்பிலே நிலைத்திருப்பீர்கள் (யோவா. XV. 7, 10). "என்னிட கற்பனைகளை பெற்றுக்கொண்டு அவைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருப்பான்.....நான் அவனிடம் அன்பாயிருப்

பேன் ..... நான் அவனோடு வாசம் பண்ணுவேன்" (யோவா XIV. 21, 23). இம்மாதிரியாக, கர்த்தரானவர் மனிதனோடு தனதாயிருப்பதுடன் வாசம் பண்ணுகிறார்; மனிதனானவன் கர்த்தரிடமிருந்து வரும் வஸ்துக்களில், இம்மாதிரியாக கர்த்தரில் வாசம் பண்ணுகிறான்.

103. பிரதி கொடுக்கவும், அப்படி செய்யாமலிருக்கவும்கூடிய இந்த சக்தியானது, அதிலிருந்து பரஸ்பரமும், கர்த்தரிடமிருந்து மனிதனிடமிருக்கிறபடியினால், கர்த்தரானவர் மனிதன் மனம் திரும்பவேண்டுமென்கிறார்; தன்னிடமிருந்துபோல் அல்லாமல், எவனும் மனம் திரும்பமுடியாது: "இயேசு சொன்னதாவது, நீங்கள் மனம் திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக். XIII. 3, 5) "இயேசு சொன்னதாவது..... தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனம் திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மார்க்—I, 15)..... "பாவிகளையே மனம் திரும்புவதற்கு அழைக்கவந்தேன் என்றார் (லூக். V. 32). "சபைகளுக்கு இயேசு, மனம் திரும்புங்கள் என்றார்" (வெளி. II. 5, 16, 21, 22, III, 3). மறுபடியும், "அவர்கள் தங்கள் கிரியைகளை விட்டு மனம் திரும்பவில்லை" (வெளி. XVI. 11).

104 பிரதி கொடுக்கவும், அப்படி செய்யாமலிருக்கவும், கூடிய இந்த சக்தியானது, அதிலிருந்து பரஸ்பரமும், கர்த்தரிடமிருந்து மனிதனிடமிருக்கிறபடியினால், மனிதன் தரும நியமங்களை செய்யவேண்டுமென்றும், பலன்களை தரவேண்டுமென்றும், கர்த்தர் சொல்லுகிறார்: "என்னை, ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும்,

நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமல்போகிறதென்ன; (லூக். VI. 46—49). "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச்செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (யோவா. XIII. 17). "நான் உங்களுக்கு கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா. XV. 14). "இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" (மத்தே. V. 19). "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்கிறவன், எவனோ, அவனை.....புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பிடுவேன்" (மத்தே. VII. 24). "மனம் திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் (மத்தே III. 8). மரத்தை நல்லதாய் செய்யுங்கள், அதின் கனியை நல்லதாய் செய்யுங்கள்" (மத்தே. XII. 33). "தேவனுடைய ராஜ்யம்..... .....அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத்தே. XXI. 43). "நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும் (மத்தே. VII. 19). வேறு இடங்களில் அநேகமுறை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியங்களால், மனிதன் தன்னிடமிருந்து நடக்கிறதாகவும், ஆனால் அவன் வேண்ட வேண்டிய, கர்த்தரின் சக்தியால் அப்படி செய்கிறானென்றும் வெளிப்படையாயிருக்கிறது; இதைத்தான் தன்னிடமிருந்ததுபோல நடத்தல் என்பது.

105. பிரதி கொடுக்கவும் அப்படி செய்யாமலிருக்கவும்கூடிய இந்த சக்தி அதிலிருந்து பரஸ்பரமும் மனிதனிடம் கர்த்தரிடமிருந்து இருப்பதால், மனிதன் தன் கிரி

யைகளைப்பற்றி கணக்கு ஒப்பிவித்து, அவைகளின்படி ஈடு செலுத்தப்படுபவனாய், இருக்கிறான்; கர்த்தர் சொல்லுகிறார்: "மனுஷ குமாரன்.....வருவார், அவனவன் கிரியைக்கு தக்கதாக அவனவனுக்கு பலன் அளிப்பார்" (மத்தே. XVI. 27). "நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவா V. 29). "அவர்களிட கிரியைகள் அவர்களுடன்கூட போம்" (வெளி. XIV. 13) "யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாய தீர்ப்படைந்தார்கள்." (வெளி. XX. 13). "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும்பலன் என்னோடேகூட வருகிறது." (வெளி. XXII. 12). மனிதனிடத்தில் அந்யோந்யபரிமாற்ற சக்தியில்லாவிட்டால், பழிசுமத்துகை கிடையாது.

106. மனிதனிடத்தில் ஏற்றுக்கொள்ளுதலும் அந்யோந்யமும் இருப்பதால், திருச்சபையானது, மனிதன் தன்னைத்தானே பரிசோதித்து கடவுள் முன்பாக தன் பாவங்களை அறிக்கையிட்டு, அவைகளை தவிர்த்து, புதிய வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று போதிக்கிறது. கிருஸ்துவ உலகத்தில் ஒவ்வொரு சபையும் இதை போதிக்கிறதென்பதற்கு மேலே (இல. 3—8), பார்க்கவும்.

107. மனிதனிடத்தில் ஏற்றுக்கொள்ளுதலும், பிறகு தன்னிடமிருந்துபோல் சிந்தனையுமில்லாவிட்டால், விசுவாசத்தைப்பற்றி ஒன்றும் சொல்லியிருக்கப்படமாட்டாது

ஏனென்றால், விசுவாசமும் மனிதனிடமிருந்து அல்ல என்பதினால். அல்லாவிட்டால் மனிதன் காற்றிலுள்ள பதர் போல இருந்து, தன்னிட மோட்சத்துக்கு சம்மந்தப்பட்டவைகளில் ஒன்றும் நினைக்காமலும் செய்யாமலும் உட்பெருக்குக்கு காத்துக்கொண்டும், திறந்தவாயுடனும், தொங்குகிற கைகளுடனும், உயிரில்லாதவன்போல் நிற்பான். நிஜமாக அந்த பொருள்களில் (தன்னிடமிருந்து) அவன் ஒன்றும் செய்கிறதில்லை. ஆனாலும் அவன் தன்னிடமிருந்து போல், திரும்பி செய்கிறான்.

ஆனால் தேவதூத ஞானத்தை குறித்த நூல்களில் இந்த விஷயங்கள் இன்னும் அதிக தெளிவாய் சொல்லப்படும்.

பாவங்களாக இருப்பது என்பதைத்தவிர வேறு எந்த காரணத்தினாலாவது, எவனாவது தீமைகளை நீக்கினால், அவன் அவைகளை நீக்குகிறதில்லை, ஆனால் உலகத்தின் முன்பாக அவைகள் தோன்றாதபடி மாத்திரம் தடுக்கிறான்.

108. மோசம்செய்து அபகரிக்காமலும், தெய்வ நிந்தனை செய்யாமலும், சலஞ்சாதிக்காமலும் விபசாரம் செய்யாமலும் இருந்து, பத்து கற்பனைகளின் இரண்டாவது மேசையின் தரும நியமங்களை ஆசரிக்கிறவர்களாகிய சில குண சம்பத்துள்ளவர்கள் இருக்கிறார்கள்; ராஜ்யத்திற்கு அவைகள் கெடுதியாயிருந்து அதினால் மனிதர்களின் சட்டங்களுக்கு விரோதமாயிருப்பதால், அப்பேர்ப்பட்டவைகள் தீமையானதென்று, தங்களுக்குள்ளே உருதிசெய்துக் கொள்ளப்பட்டவர்கள், தருமத்தையும், உண்மையையும்

நீதியையும், கற்புடைமையையும்கூட, பயிற்சி செய்கிறார்கள். ஆனால் அதே காலத்தில் அவைகள் பாவங்களாயிருக்கின்றனவென்று அல்லாமல், அவைகள் தீமைகள் என்று மாத்திரம் அந்த தீமைகளை நீக்கினாலும், இந்த நன்மைகளை செய்தாலும், அவர்கள் இன்னும் ஜடமாய் மாத்திரம் இருக்கிறார்கள்; ஜடமாய்மாத்திரம் இருப்பவர்களுடன், தீமையின் வேர் மனதில் பதிந்திருக்கிறது, அது நீக்கப்படுகிறதில்லை; ஆகையால் அவர்கள் செய்யும் நன்மைகள், தங்களிடமிருந்துதானே வருகிறபடியினால், நன்மைகளல்ல.

109. ஜடமான குணசம்பத்துள்ள மனிதன், உலகத்திலுள்ள மனிதர்கள் முன்பாக பரமார்த்த குணசம்பத்துள்ள மனிதனைப்போல் முழுமையும் தோன்றலாம்; ஆனால் பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் முன்பாக அப்படி தோன்றமாட்டான் அவன் நன்மையிலிருந்தால் பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் முன்பாக, உயிரில்லாத மரத்தின் பொம்மைபோலும், அவன் உண்மையிலிருந்தால் இரண்டு வகையிலும் உயிரில்லாத சலவைக்கல்லின் பொம்மைபோலும் அவன் தோன்றுகிறான். பரமார்த்த குணசம்பத்துள்ளவனிடம் அது வேறுமாதிரி. ஏனென்றால் ஜடமான குணசம்பத்துள்ளவன், புறமாய் குணசம்பத்துள்ளவனாயிருக்கிறான், பரமார்த்த குணசம்பத்துள்ளவன் உள்ளே குணசம்பத்துள்ளவனாயிருக்கிறான்; உள்ளேயில்லாமல் புறத்தோற்றம் உயிரில்லாததாயிருக்கிறது. அது நிஜமாக ஜீவித்திருக்கிறது, ஆனால் உயிர் என்று சொல்லப்பட்ட உயிர் அதற்கு இல்லை.

110. ஜனனகால முதல் மனிதனிட உட்பாகமாகிற தீமைகளின் மோகங்கள், கர்த்தரால் மாத்திரம் தவிர பிற

ரால் நீக்கப்படுகிறதில்லை. ஏனென்றால், கர்த்தர் சூக்குமத்திலிருந்து தூலத்துக்குள் பாய்கிறார்; ஆனால் மனிதன் தானேயாக, தூலமானதிலிருந்து சூக்குமமானதற்கு செல்கிறான்; இந்த உட்பிரவேசம், ஒழுங்குக்கு விரோதமாயிருக்கிறது. அது மோகங்களை சேட்டித்து, அவைகளை நீக்குவதில்லை. ஆனால் அவன் தானே ஸ்திரப்படுகிற அளவு அவைகளை அதிகமதிகமாய் உள்ளே இறுக்கமாய் மூடுகிறான். இம்மாதிரி உள்ளே மூடப்பட்ட பரம்பரையான தீமை, மறைந்து கிடப்பதால், இறந்தபிறகு, மனிதன் ஆவியான போது, உலகத்தில் அது மறைந்திருந்த உறையை வெடித்து, புறத்தில் மாத்திரம் குணப்பட்டதாயிருக்கிற புண்ணிலிருந்து, வருகிற சிதைவான வடிதலாக வெளிக்கு வருகிறது.

111 புறம்பான உருவத்தில் மனிதனை குணசம்பத்துள்ளவனாக செய்கிற நானாவிதமான காரணங்களிலிருக்கின்றன; ஆனால் உள் உருவத்திலும்கூட அவன் குணசம்பத்துள்ளவனாக இல்லாவிட்டால், அவன் இன்னும் குணசம்பத்துள்ளவனல்ல. உதாரணமாக: தேச சட்டமும் அதின் தண்டனையின் பயத்தினாலும், நற்பெயர் இழந்து அதினால் கௌரவம் இழப்போம் என்கிற பயத்தினாலும் அவைகளினால் உண்டாகும் வியாதிகளின் பயத்தினாலும், தன் மனைவியால் வீட்டில் உண்டாகும் சச்சரவு, அதன் பயனாக ஏற்படும் வாழ்க்கையின் அமைதி இன்மையின் பயத்தினாலும், புருஷன் அல்லது பந்துக்கள் சலஞ்சாதிப்பார்களென்கிற பயத்தினாலும் வறுமை அல்லது உலோபத்தினாலும் வியாதியிலிருந்தாவது, செட்ட வழக்கத்திலிருந்தாவது வயதியிலிருந்தாவது, புருஷத்தன்மையில்லாமையிலிருந்தாவது உண்டாகிற மனத்தளர்ச்சியினாலும், விபசா

ரங்களும், வேசித்தனமும் ஒருவன் விலக்கினாலும், இதுவு மல்லாமல் அதே காலத்தில் பரமார்த்த சட்டத்துக்காக அல்லாமல் யாதொரு ஜட சம்பந்தமான அல்லது குண சம்பத்துள்ள சட்டத்துக்காக இந்த தீமைகளை ஒருவன் விலக்கினாலும், அவன் அந்தரங்கமாய் விபசாரியாகவும், வேசிக் கள்ளனாவும் மிருக்கிறான். ஏனென்றால் அவைகள் பாவங்கள் அல்லவென்று அவன் குறைவு ஒன்றுமில்லாமல் நம்புகிறான். ஆகையினால் கடவுள் முன்பாக சட்டத்துக்கு விரோதமல்லவென்று நினைத்து உடலில் உலகத்தின் முன் பாக இல்லாவிட்டாலும், ஆவியில் அவைகளை செய்கிறான். ஆகையால் இறந்த பிறகு அவன் ஆவியாகும்போது அவை களுக்கு சகாயமாய் பகிரங்கமாய் பேசுகிறான். இந்த ஆலோசனைகளால் ஒரு துன்மார்க்கமான மனிதன் கெடுதி யானதென்று தீமைகளை நீக்கலாமென்று வெளிப்படையா யிருக்கிறது; ஆனால் கிருஸ்துவன் தவிர வேறுயாராலும் தீமைகளை பாவங்களாக நீக்கமுடியாது.

112. எல்லாவித களவுகளுக்கும் மோகங்களுக்கும், எல்லாவித கொலைகளுக்கும், சலஞ்சாதித்தலுக்கும், எல்லா வித பொய் சாட்சியங்களுக்கும், பொய்களுக்கும், விஷயம் அம்மாதிரியே: மனிதன் ஒன்றாக அல்லாமல், பார்க்காத தும், ஆனால் கர்த்தர் முழுவரிசையிலும், எல்லாவற்றிலும் சிறிய விவரங்களையும்கூட பார்க்கிறதுமான அனந்த பொருள் கள் ஒவ்வொரு மோகத்திலும் இருக்கிறபடியினால், தானே யாக இவைகளிலிருந்து எவனையும் அழுக்கறசெய்து புனித மாக்கமுடியாது. சுருங்கசொல்லில், தானே நெறிபடுத்து கிறவராகவும், மறு பிறப்பு கொடுக்கிறவராகவும், இருக்கிற கர்த்தர் மாத்திரம் அல்லாமல், மனிதனானவன் தானே

மறுபடியும் பிறப்பிக்க முடியாது; அதாவது, தன்னுள் ஓர் புதிய இருதயத்தையும், ஓர் புதிய ஆவியையும் உருவப் படுத்த முடியாது; ஆகையால், மனிதனானவன் தன் சொந்த சூழ்ச்சியாலும் அறிவாலும் தன்னைத்தானே புதிதாக செய் துக்கொள்ள சிந்தித்தால், அது கோரமான முகத்தின் பேரில் வருணம் போடுகிறது போலும் உட்புறமான அழுக லுள்ள பாகத்துக்கு சுத்திகரிக்கும் மருந்தை போடுதல் போலுமாத்திரம் மிருக்கிறது.

113. ஆகையால் மத்தேயுவில் கர்த்தர் சொல்லு கிறார்; "குருடான பரிசேயனே! போஜனமான பாத்தி ரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட் புறத்தை முதலாவது சுத்தமாக்கு" (XXIII. 26), ஏசா யாவில்: "உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டுஒழியுங்கள்; ..... உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழை யைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும் (1, 16, 18)".

*** *** *** ***

114. மேல் சொன்னதற்கு இந்த வார்த்தைகள் சேர்க்கப்படட்டும். I. ஒவ்வொருவனுக்கும் கிருஸ்துவ தருமமானது, தன் அறிவின் கடைமைகளை உண்மையாய் செய்வதில் அடங்கியிருக்கிறது; அதனால் தீமைகளை பாவங் களாக அவன் விலக்கினால் அவன் தினம் தினம் நன்மை கள் செய்கிறான். மேலும் பொதுக்கூட்டத்தில் தன்னிட

சொந்த விசேஷமான பலனுக தானேயிருக்கிறுன்; அதி னுல்கூட பொது நன்மையும், ஒவ்வொருவனிட நன்மையும் குறிப்பாகவும் ஏற்படுத்தப்படுகிறது. II. மற்ற கிரியை கள் சரியாய் தரும கிரியைகளாகிறதில்லை. ஆனுல் அவை கள் அதின் அடையாளங்களாகவும் உபசாரங்களாகவும் கடமைகளாகவுமிருக்கின்றன.

SWEDENBORG LIBRARY
3 0740 00125 8693